# பழமொழிக் கதைகள்-8

கே.வி. குணசேகரம்.

## நூல் விபரம்

நூலின் பெயர் : பழமொழிக் கதைகள் 40

(கவிதை, உரை, பழமொழி, விளக்கம் , கதைகள்)

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு :

மொத்தப்பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை

F.L. 1.14, டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர,

கொழும்பு – 12.

Tel : 011-2-341942

## அணிந்துரை

பழந்தமிழ் நூல்களில் உள்ள தகவல்களை மிகவும் இலகுவானதாகவும், புதுமையானதாகவும், கதைகளாகவும் தருபவர் எனது நண்பரான திரு. கே.வி. குணசேகரம் அவர்கள். விளங்கிக் கொள்ள முடியாத தத்துவங்களை மிகவும் இலகுபடுத்திப் படிப்படியாக விளக்கி வாசிப்பவர்களுக்குப் புரிய வைப்பவர் திரு.கே.வி. குணசேகரம். பழந்தமிழ் நூல்களில் உள்ள தத்துவங்களைப் பலர் எழுதுகிறார்கள். அதை விடப் பழந்தமிழ் பாடல்களுக்கு உரை எழுதுகிறார்கள். அவர்கள் எழுதும் உரை பேராசிரியர்களுக்கும் பண்டிதர்களுக்குமே விளங்கும். பேராசிரியர்களும் பண்டிதர்களும் அவற்றை நன்கு கற்றமையால் அவர்கள் அதிலுள்ள குறை நிறைகளைப் பற்றியே பேசி வருகின்றனர். எதுவும் விளங்காதவனுக்குக் குறைநிறைகளைச் சொல்லி என்ன பயன். அதனால் அவர்கள் எழுதும் எழுத்துக்கள் எவையும் பாமரர்களைச் சென்றடைவதில்லை.

ஒழுக்கக் கருத்துக்களும், சமய தத்துவங்களும் பாமரர்களைச் சென்றடைந்தால் தான் அவர்கள் அதைப் பின்பற்றுவார்கள். பலரின் எழுத்துக்கள் கற்றவர்களுக்கே விளங்குவதில்லை. அத்துடன் பழந்தமிழ் நூல்களை ஆசிரியர்கள் கற்பிக்கும் போது விளங்கும். வகுப்பை விட்டு வெளியே வந்தால் அவை மறக்கப்பட்டு விடும். ஆனால் குணசேகரத்தின் எழுத்து அப்படியானதல்ல. ஒரு முறை வாசித்தால் விளங்கும். விளங்கவில்லையென்று ஆசிரியரைத் தேடிச் செல்ல வேண்டிய தேவை இல்லை. திரும்பவும் வாசித்தால் விளங்கும். அதை விட வாசித்த விடயங்கள் எதையும் மறக்க முடியாது. அவர் கதை தான்

எழுதுவார். அதனுள் பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களும் தத்துவங்களும் நிறைந்து இருக்கும். அதனால் அவை கதையெனக் கருதி யாவரும் வாசிப்பர். தத்துவங்களைக் கூட விருப்புடன் திரும்பத் திரும்ப வாசகனை வாசிக்க வைக்கும் தன்மை குணசேகரத்தின் எழுத்திற்கு உண்டு.

பழமொழி நானூறு அருமையான தத்துவ நூல். அதில் உள்ள நானூறு பழமொழிகளும் வாழ்க்கைக்கு உதவுபவை. அப்படிப்பட்ட உயர்ந்த தத்துவங்கள் சிறுவர்கள் கூட இரசித்து வாசிக்கும் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. பழமொழி நானூறு என்னும் நூல் பழமொழி களைக் கவிதைகளாகக் கூறுவது. அதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர் . அவ்வுரைகள் கவிதைகளை விடக் கடினமானவையாக உள்ளன. எழுத்தை ஆளும் அரசனான எழுத்தாளன் தான் எழுதுபவை அனைவர்க்கும் புரியும்படி எழுதுதல் வேண்டும். புரியாமல் எழுதுவதால் பயன்இல்லை. கவிதையை விளங்கிக் கொள்ள முடியாதவர்களுக்காகத் தான் உரைகள் எழுதப்படுகின்றன. ஆனால் எழுதப்படும் உரைகள் கவிதைகளை விடக் கடினமானவையாக இருக்கின்றன. அந்தக் குறையைத் திரு. கே.வி. குணசேகரம் நீக்கியுள்ளார். அவரது உரையும் கதையும் விளக்கமும் இனிமையான விளங்கும் மொழியில் உள்ளதால் சிறுவர்கள் கூட விளங்கிப் படிக்கிறார்கள். இது கடவுளால் குணசேகரத்திற்கு அருளப்பட்ட கொடை. இந்தக் கொடையை அவர் மேன்மேலும் விருத்தி செய்து இன்னும் பல நூல்களை இலகுபடுத்திக் கதைகளாக்கித் தரவேண்டுமென்று விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

எஸ். உதயபாலன் எம்.ஏ
சைவசித்தாந்தம்
இந்துசமய கலாசார உத்தியோகத்தர்
கச்சேரி, யாழ்ப்பாணம்.

# என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 -1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும்

உரை விளக்கம் கதை என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 “அன்பானவர்களே, நெய்யிட்ட பாத்திரத்தில் தான் தொடர்ந்தும் நெய்யிடுவார்கள். ஏனென்றால் நெய்யினது வாசம் அதனுள் இடும் பொருட்களிலெல்லாம் வீசும். அதற்காக நெய்யிட்ட பாத்திரத்தில் தான் தொடர்ந்தும் நெய்யிடுவார்கள். அது போல அரசனாற் சிறந்தவர்கள் என்று பாராட்டப்பட்டவர்களே பெரியவர்களாலும் பாராட்டப்படுவார்கள், மக்களாலும் போற்றப்படுவார்கள்”

“வேப்ப மரக்காட்டில் வாழ்ந்த எருது ஒன்று மற்றைய மிருகங்களுடன் அன்புடன் பழகி வந்தது. மற்றவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தது. அத்துடன் அது வேத உபநிடதங்களைப் படித்தது. அதனால் அது காட்டு மிருகங்களின் குட்டிகளுக்கு இலவசமாகக் கற்பித்து வந்தது. அன்புடன் தனது மாணவர்களின் நலனில் அது அக்கறை கொள்ளும். கற்க முடியாத மிருகங்களின் குட்டிகள் வகுப்பிற்கு வராவிட்டால் அது அவற்றின் இருப்பிடங்களுக்குச் சென்று அன்புடன் பேசி அவற்றை அழைத்து வரும். அல்லது தூக்கி வரும். அதனால் மிருகங்கள் யாவும் எருதின் மீது அன்பு வைத்திருந்தன”

“காட்டின் அரசனான சிங்கம், எருதின் தன்நலமில்லாத சேவையை உணர்ந்து சகல வசதிகளுமுடைய ஒரு பாடசாலையைக் கட்டிக் கொடுத்தது, அரசனான சிங்கமும் மிருகங்களும் எருதின் மீது கொண்ட அன்பைக் கண்ட பன்றி ஒன்று தானும் ஒரு பாடசாலையை ஆரம்பித்தது. பன்றிக்குப் புகழ் பெற வேண்டும் என்ற எண்ணம் இருந்ததே தவிரக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம்

இருந்ததில்லை. அது தன்னிடம் வரும் மிருகங்களின் குட்டிகளைக் கொண்டு தனது வீட்டு வேலைகளைச் செய்விக்கும். அதிக நேரம் விளையாட விடும். அதனால் மிருகங்களின் குட்டிகள் பன்றியின் பாடசாலைக்கே செல்ல விரும்பின. ஆனால் மிருகங்கள் தங்கள் குட்டிகளைத் தண்டித்து எருதின் பாடசாலைக்கு அனுப்பின."

"சிங்கம், எருதின் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தது. எருது அன்புள்ளதாக நடந்து கொண்டாலும் கண்டிப்பு நிறைந்தது. தன்னிடம் படிக்கும் மாணவர்களை மிகவும் கண்டிப்புடன் கற்பிக்கும். ஒழுக்கம் தவறாத வகையில் நடந்து கொள்ள வைக்கும். ஒரு நாள் சிங்கம் எருதின் பாடசாலைக்கு வந்தது. பாடசாலை மிகவும் துப்புரவாகவும் அழகாகவும் இருந்தது. பாடசாலையெங்கும் அழகாக ரோஜாச் செடிகள் நின்றன. சிங்கத்தை மிகவும் அன்புடன் வரவேற்ற எருது தனது மாணவர்களுக்கு அதை அறிமுகம் செய்தது. மாணவர்கள் ரோஜாப் பூக்களைப் பறித்து அழகான மாலை ஒன்றைக் கட்டிச் சிங்கத்திற்குப் போட்டன. பின் நடனம், ஆடல், பாடல், நாடகம் என்பவற்றை நடத்திக் காட்டின. அது சிங்கத்திற்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது."

"சில தினங்களின் பின் சிங்கம் எருதைத் தனது அரண்மனைக்கு மேள தாளங்களுடன் அழைத்துச் சென்று அதை அரண்மனையில் பல நாட்கள் தனது விருந்தாளியாக வைத்திருந்தது. பின் அதற்கு ஒரு விழா எடுத்துப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது. பின் அது

இளவரசருக்கும் இளவரசிக்கும் பாடம் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. எருது பகல் வேளைகளில் காட்டு மிருகங்களின் குட்டிகளுக்குப் பாடங் கற்பிக்கும். இரவானதும் அது அரண்மனைக்குச் சென்று விடும். காலையில் வீட்டுக்கு வரும் எருதைக் காணப் பல பெரியவர்கள் காத்திருப்பார்கள். காட்டிலே உள்ள மன்றங்கள் எருதை மதித்துக் கௌரவித்தன. அரண்மனையில் ஏதாவது வேலை பெறவிரும்புவோர் எருதிடம் வந்து சிங்கத்திடம் வேலை பெற்றுத் தருமாறு கேட்பர். எருது அன்புடன் அவர்களை வரவேற்றுத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து வந்தது. அதனால் அன்பானவர்களே, நல்ல முறையில் நடந்து, தலைவரின் மதிப்பைப் பெற்றீர்களானால் உங்களை உலகில் உள்ள அனைவரும் மதிப்பர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வேந்தன் மதித்துவப்பப் பட்டாரைக் கொண்டேனை***
***மாந்தரும் ஆங்கே மதித்துணர்வர் - ஆய்ந்த***
***நலமென் கதுப்பினாய்! நாடின். நெய்பெய்த,***
***கலனேநெய் பெய்து விடும்.***

அரசினால் போற்றி மதிக்கப்பட்டவர்களை நாட்டிலுள்ள அனைவரும் போற்றி மதிப்பார்கள். **"நெய் பெய்த கலனே நெய்பெய்து விடும்"** என்பது பழமொழி.

2 “அன்பானவர்களே, யாரோடும் பகைத்துத் தீங்கான செயல்களைச் செய்யாதீர்கள். உங்களுடைய பிள்ளைகள் தீய செயல்களைச் செய்யும் போது அதைக் கண்டித்துத் திருத்துவது அவர்களுக்குப் பிடிப்பதில்லை. சிலர் மௌனமாக இருந்து தமது எதிர்ப்பைக் காட்டுவார்கள். சிலர் கோபித்து ஏசவும் செய்வார்கள். அப்படிப் பிள்ளைகளே செய்யும் போது பிறர் என்ன செய்வார்கள். அதனால் யாருக்கும் தீங்கு செய்யாது வாழப் பழகிக் கொண்டால் கோபம், சினம், விரோதம் உண்டாகாது. இவை உண்டாகா விட்டால் வாழ் நாள் முழுவதும் இன்பமாக வாழலாம்.”

“வேப்பமரக் காட்டில் வாழ்ந்த யானை ஒன்று பிறருக்கு ஆலோசனைகள் புத்திமதிகள் கூறி வந்தது. அது சோதிடம் கற்றது. அதனால் காட்டு மிருகங்களுக்குச் சோதிடமும் சொல்லி வந்தது. அதன் பிள்ளைகள் எருதிடம் கல்வி கற்றன. எருது வறிய மிருகங்களின் குட்டிகளுக்குக் கற்றல் உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கும். யானையின் குட்டிகள் பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், கற்றல் உபகரணங்களைக் கிழித்து விளையாடும். அதற்காக எருது யானைக் குட்டிகளுக்குச் சிறு சிறு தண்டனை கொடுக்கும். யானைக் குட்டிகள் தாய் யானையிடம் அடிக்கடி அப்பியாசப் புத்தகங்களும் பாடப் புத்தகங் களும் வாங்கித் தருமாறு கேட்கும். யானை வாங்கிக் கொடுப்பதில்லை. அதனால் எருது அப்பியாச் புத்தகங்கள் கொண்டு வராமல் பாடசாலைக்கு வரக்கூடாது என்று யானைக்குட்டிகளுக்குச் சொன்னது”.

“அதைச் சாட்டாக வைத்துக் கொண்டு யானைக் குட்டிகள் பாடசாலைக்குச் செல்லாது காட்டில் உள்ள குளத்தில் குளித்து விளையாடின. இதை அறிந்த எருது யானையிடஞ் சென்று குட்டிகளைப் பற்றிக் கூறியது. குட்டிகள் வந்ததும் யானை அவற்றைக் கண்டித்தது. குட்டி யானை துடுக்கானது. அளவுக்கதிகமாகப் பேசுவது. அது சொன்னது; “எனக்குப் படிக்க விருப்பமில்லை. இனிமேல் எனது விடயங்களில் தலையிட்டால், நான் வீட்டுக்கு வரமாட்டேன்” என்றது”

“இதை யானை எதிர்பார்க்கவில்லை. மகனே, கற்றவர்களின் முகத்தில் இருப்பவை தான் கண்கள். கல்லாதவன் கண்ணிருந்தும் குருடனாவான். கற்றவர் முன் கற்ற விரும்புவோர் ஏழைகள், தனவந்தர்களிடம் இரப்பதைப் போல இரந்து கற்றல் வேண்டும். ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியேயாகும். ஒருவர் கற்ற கல்வி அவர் எடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் மறுப்புச் சொல்லாது பாடசாலைக்குப் போ” என்றது”

“குட்டி யானைக்குக் கோபம் அளவுக்கதிகமாக வந்தது; “நான் இங்கிருந்தால் தானே நீங்கள் தொந்தரவு தருவீர்கள். நான் முல்லை வனத்திற்குச் செல்கிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டது. அதைக் கண்ட யானை சொன்னது ; “ மகனே, அவசரப் படாதே. கல்வி அழிவு வராமல் காக்கும் கருவியாகும். மனதைத் தன்

போக்கில் போக விடாமல் அதைத் தடுத்து நல்ல வழியில் வாழச் செய்வது கல்வி. கல்வியறிவுள்ளவர்களுக்குச் சொந்த நாட்டில் மட்டுமல்ல, அவர்கள் செல்லும் நாடுகளிலெல்லாம் மதிப்பும் மரியாதையும் உண்டாக்கும்....” என்று யானை சொல்லிக் கொண்டிருக்கும் போது குட்டி அதை கவனிக்காது வெளியே சென்றது”

“யானை மனவருத்தத்துடன் காட்டுப் பாதையாற் சென்றது. வழியில் அதன் நண்பனான பன்றி ஒன்று நன்றாகக் குடித்து விட்டுப் பாதைக்குக் குறுக்கே படுத்திருந்தது. யானை அதைத் தனது தும்பிக்கையால் தூக்கி ஓர் ஓரத்தில் கிடத்திவிட்டு அப்பாற் சென்றது. அதற்குப் புத்திமதி சொல்லப் போனால் வெறி மயக்கத்தில் கண்டபடி பேசும். எனது பிள்ளையே ஆராயாது பேசும்போது பிறர் பேச மாட்டார் என்று நினைப்பது தவறு” என்று நினைத்தவாறு அது குளிக்கச் சென்றது. ஆகவே அன்பானவர்களே, உங்கள் இரத்த உறவினர்கே புத்திமதிகள் சொன்னால் பிடிக்காது. அப்படியானால் பிற தீயவர்களுக்குப் புத்திமதி சொன்னால் பிடிக்குமா...? எனவே அவதானமாக நடந்து கொள்ளுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பூவுட்கும் கண்ணாய் ! பொறுப்பர் எனக் கருதி***
***யாவர்க்கே யாயினும் இன்னா செயல் வேண்டா***
***தேவர்க்கும் கைகூடாத் திண்ணன் பினார்க்கேயும்***
***நோவச்செய் நோயின்மை இல்.***

மிகவும் அன்பானவர்களே மனம் நொந்து பொறுமையை இழக்கும் போது, பிறர் பொறுப்பார்களென நினைப்பது தவறு. ஆகையால் பிறர் நோக்கும்படி நல்லவற்றைத் தன்னும் கூறக் கூடாது. **“நோவச்செய் நோயின்மை இல்”** என்பது பழமொழி.

3 “அன்பானவர்களே, முன்செய்த புண்ணியப் பலன் உள்ளவர்களுக்குச் சோற்றுக்குள் கறியானது தானாகவே வந்து விடும். அது போல எல்லாச் செல்வங்களையும் உடையவராக இருந்தாலும் கூட முன்செய்த புண்ணியப் பலன் வந்து சேராவிட்டால் அவரிடம் இருக்கும் பணம் கூட அவருக்குப் பயன்படாது போகும். இந்த உண்மையைப் புரியாதவர்கள் தான் மற்றவர்களைக் கேவலமாக எண்ணுவார்கள். பொருள் இழப்பதற்குக் காரணமான விதி ஒருவனை அறிவற்றவனாக்கும். பொருள் சேர்வதற்குக் காரணமான விதி அவனை அறிவாளியாக்கும். செல்வத்தைத் தேடும் முயற்சியில் விதிப்பயனால் நல்லவை தீயவை ஆகலாம். தீயவை நல்லவையாகலாம். கோடி கோடியாகப் பொருட்களைச் சேர்த்தாலும் அதை விதி இருந்தால் மட்டும் தான் அனுபவிக்க முடியும்”

“நாவல் நகரில் கந்தசாமி என்றொரு தனவந்தர் இருந்தார். அவரது மனைவி நோயாளி. அவரின் மகள் அபிராமி பட்டணத்தில் உள்ள பாடசாலையொன்றில் கற்று வந்தாள். கந்தசாமி மற்றவர்களை மதிப்பதில்லை. எல்லோருடனும் திமிராக நடந்து

கொள்வார். அவரின் வீட்டில் கூலி வேலை செய்பவன் நடராசா. அவனது மனைவி கோசலை. அவர்களுக்கு ஆரூரன், அமுதன் என்று இரு ஆண்பிள்ளைகள் இருந்தனர். நடராசா தான்படும் கஷ்டங்கள் தனது பிள்ளைகள் படக்கூடாதென்பதற்காகப் பட்டணத்தில் கந்தசாமியின் மகள் கற்கும் பாடசாலையில் தனது பிள்ளைகளைச் சேர்த்தான். ஆரூரனும் அபிராமியும் ஒரே வகுப்பில் கல்வி கற்று வந்தனர். அபிராமி பெரிதாகப் படிக்க மாட்டாள். ஆரூரன் வகுப்பில் முதல்தர மாணவன். அதனால் பெறாமைப்பட்ட அபிராமி ஆரூரனைக் கேலி செய்வாள். தமது வீட்டு வேலை செய்பவனின் மகன் என்பாள். ஆரூரன் அதை அலட்சியம் செய்வதே இல்லை. அவன் தனது படிப்பில் கவனமாக இருந்தான். ஏனைய மாணவர்கள் அபிராமி கேலி செய்வதைப் பற்றிக் கதைத்தால், "அவள் சொல்வது உண்மை தான் நான் அவளின் வீட்டில் வேலை செய்பவரின் மகன் தான். அதனால் அவள் எதையும் சொல்லட்டும்" என்பான்.

"கந்தசாமி, நடராசாவுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பதில்லை. அதனால் அவன் வேறு இடங்களுக்குச் சென்று தொழில் செய்வான். ஒரு நாள் கந்தசாமி நடராசாவிடம் சொன்னான்; "நடராசா, இப்ப நீ பெரியவராக வந்து விட்டதாக எண்ணுவதால் தான் எனது வீட்டு வேலைகளைச் செய்கிறாய் இல்லை. அத்துடன் உனது மனைவியும் வீட்டிற்கு வந்து சமைத்துத் தருவதில்லை" என்றார்."

“ஐயா, நான் வறியவன். அன்றன்று உழைத்து உண்பவன். நீங்கள் பணக்காரர். எனது கூலியைச் சரியாகத் தந்தால் நான் வந்து வேலை செய்வேன். மனைவி வந்து சமைத்துத் தருவாள். நாம் வேலை செய்து விட்டுக் கூலி பெறாவிட்டால் எம்மால் வாழ முடியாது” என்றான்”

“நேற்று உனது மனைவி வராததால் எனது குடும்பமே பட்டினி. எனது மகள் பசியைத் தாங்கமாட்டாள் என்பது உனது மனைவிக்குத் தெரியும். இருந்தும் அவள் திமிரில் வரவில்லை. காசு தேவையென்றால் கேட்க வேண்டியது தானே”

“கடன் கொடுத்தால்தான் கேட்டுப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். வேலை செய்தால், வேலை முடியச் சம்பளத்தைக் கொடுத்து விடல் வேண்டும்” என்றான் கந்தசாமி”

“எனக்கு புத்திமதி சொல்லும் தகுதிக்கு நீ வந்து விட்டாயா…?” என்று கோபித்த கந்தசாமி பணத்தை எடுத்து நடராசாவின் முகத்தில் வீசி விட்டு ; “போய் மனைவியை அனுப்பு” என்று சொல்லி விட்டுச் சென்றார்”

“பல வருடங்கள் கழிந்து விட்டன. ஆரூரன் வைத்தியராகவும், அமுதன் பொறியியலாளராகவும் வந்தனர். கந்தசாமியின் மகள் கற்காமையால் அவள் வீட்டில் இருந்து சமைத்து வந்தாள். ஆரூரன் பல இலட்ச ரூபா பெறுமதியான

மோட்டார் வண்டி ஒன்றை விலைக்கு வாங்கி அதில் தனது தகப்பனையும், தாயையும் ஏற்றிக் கொண்டு கோயிலுக்கு வந்து போவான். கந்தசாமி நடந்தே எல்லா இடங்களுக்கும் சென்று வந்தார். இப்பொழுது நடராசா ஊரில் பெரும் பணக்காரன். ஆகவே அன்பானவர்களே, பணம் இருக்கிறது என்று மற்றவர்களைக் கீழானவர்களாக நினைக்காதீர்கள். விதிவசத்தால் பணம் எல்லோரிடமும் வரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆற்றுந் தகைய அரசடைந்தார்க் காயினும்***
***வீற்று வழியல்லால் வேண்டினும் கைகூடா***
***தேற்றா சிறியர் எனல்வேண்டா ; நோற்றார்க்குச்***
***சோற்றுள்ளும் வீழும் கறி.***

கீழானவரும் விதி வசத்தால் மேலானவராதலும் கூடும். செல்வமுடைமையும் இல்லாமையும் ஊழ்வினைப் பயனே. **"நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி"** என்பது பழமொழி.

**4** "அன்பானவர்களே, நோயால் மிகவும் பாதிக்கப்பட்ட போதும் புலி ஒருபோதும் புல்லைத் தின்னாது. அது போல உயர்ந்தவர்கள் வறுமையால் வாடிய போதும் அவர்கள் தவறான காரியங்களைச் செய்ய மாட்டார்கள்."

"நாவல் நகரில் வேதாச்சலம் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் மிகவும் வறியவர். ஆனால் ஒழுக்கமானவர். விவசாயம் செய்து தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

விவசாயத்தால் வரும் வருமானம் போதாமல் இருந்ததால் தோட்டங்களில் அவர் கூலி வேலை செய்வார். அவர் மிகவும் துப்பரவாக வேலை செய்வார். அதனால் அவ்வூர் விவசாயிகள் எல்லோரும் அவரைக் கொண்டே தமது விவசாய நிலங்களில் வேலை செய்விப்பார்கள். அவரை நம்பி விவசாயிகள் எப்பொருளையும் கொடுப்பார்கள். பயிர்களுக்கு உரம் போடுவதானால் விவசாயிகள் பணத்தைக் கொடுப்பார்கள். வேதாச்சலம் கடைக்குச் சென்று உரம் வாங்கி வந்து பயிர்களுக்குப் போட்டு நீர் பாய்ச்சுவார். அவர் நிறை குறைத்து வாங்க மாட்டார். வாங்கிய உரத்தில் சிறிதளவாவது எடுத்துச் செல்லவும் மாட்டார்.”

“ஒரு நாள் விடியற்காலை அவர் சிவன் கோயிலுக்குச் சென்று சிவனைத் தரிசனம் செய்து விட்டு வரும் போது காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தார். அது ஒரு சேலையால் செய்யப்பட்ட பை. அதற்குள் ஏதோ இருந்தது. அவர் அதற்குள் என்ன இருக்கிறது என்று பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. அதைக் கொண்டு சென்று கிராம சேவகரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டார்.”

“அன்று மாலை கிராமசேவகரும் வேதாச்சலத்தின் இனத்தவரான கந்தையாவும் வேதாச்சலத்தின் வீட்டுக்கு வந்தனர். கிராமசேவகர் சொன்னார்; “வேதாச்சலம் , கந்தையா அம்பலவாணரிடம் ஓர் இலட்ச ரூபா ஏதோ தேவைக்காக வாங்கி வரும் போது வழியில் அது தவறி விட்டது. அதை நீ எடுத்து வந்து

என்னிடம் தந்தாய். நான் அதைப் பிரித்து எண்ணிப் பார்த்த போது அதில் எழுபத்தையாயிரம் ரூபா மட்டுமே இருந்தது. மிகுதி இருபத்தையாயிரம் ரூபா எங்கே?" என்று கேட்டார்."

"வேதாச்சலம் திகைத்துப் போனார்; "ஐயா, நான் எடுத்த முடிச்சைத் திறந்து கூடப் பார்க்கவில்லை. அதனுள் என்ன இருக்கிறது என்று கூட எனக்குத் தெரியாது" என்றார்"

"கந்தையா அதை நம்பவில்லை; "இவன் மிகவும் வறியவன். முடிச்சைப் பிரித்து எடுத்து விட்டு மிகுதியைத் தந்திருப்பான்" என்றான்."

"ஐயா, நான் எடுத்ததை யாரும் காணவில்லை. நான் பொருள் மீது ஆசை கொண்டிருந்தால் எடுத்த முடிச்சைத் திறந்து பார்த்திருப்பேன். உள்ளே பணம் இருக்கிறதென்று தெரிந்திருந்தால் நான் முழுப்பணத்தையும் எடுத்திருக்கலாமல்லவா?" என்று கேட்டான்."

"கிராமசேவகர் அதற்குப் பதில் சொல்லவில்லை. கந்தையா தான் சொன்னான்; "ஐயா, வறுமை என்ற பாவி ஒருவனைப் பிடித்தால், அவனது நல்ல குணங்கள் யாவும் போய் விடும். ஆசையும் அவாவும் வந்து விடும். வறுமையுள்ளவனைப் பெற்ற தாய்கூட நம்ப மாட்டாள் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் இவன் ஏதோ ஒரு நோக்கத்தோடு தான் இவ்வாறு

நடந்துள்ளான். இவனைக் கொண்டு சென்று காவல் துறையில் ஒப்படைத்தால் அவர்கள் கொடுக்கும் அடியில் உள்ளதைச் சொல்லி விடுவான்" என்றான் கந்தையா."

"அப்பொழுது அம்பலவாணர் அங்கே வந்து சொன்னார்; "கந்தையா, நீ கேட்ட ஓர் இலட்ச ரூபா என்னிடம் அப்போது இருக்கவில்லை. நான் அவசரமாக வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்ததால், என்னிடமிருந்த எழுபத்தையாயிரம் ரூபாவை மனைவியிம் கொடுத்து விட்டுச் சென்றேன். இப்போது தான் நான் வெளியூரால் வந்தேன். உன்னைத் தேடி வரும் போது நீயும் கிராம சேவகரும் வேதாச்சலத்தின் வீட்டில் இருப்பதைக் கண்டு விட்டு வந்தேன். இந்தா மிகுதிப்பணம்" என்று பணத்தை நீட்டினார் அம்பலவாணர்.

"கிராம சேவகர் திகைத்துப் போனார்.

"நீ பணத்தை வாங்கினால் எண்ணிப் பார்ப்பதில்லையா? வீணாக ஒரு நல்ல மனிதனைக் குற்றஞ் சாட்டினாய்" என்றார்."

"அதிகாலையில் சென்று வாங்கியமையால் நான் எண்ணிப் பார்க்கவில்லை. அத்துடன் அம்பலவாணர் மிகவும் நம்பிக்கைக்குரியவர்" என்ற கந்தையா, வேதாச்சலத்திடம் மன்னிப்புக் கேட்டார். அதற்கு வேதாச்சலம் சொன்னான்; "ஐயா, வறியவன் என்றால் அவன் திருடன் என்றா அர்த்தம்? வறியவர்களுள் நேர்மையானவர்கள் இல்லையா? நான் இது வரை

யாருக்காவது தீங்கு செய்திருக்கிறேனா...? எனது பூர்வீகத்தை ஆராயாது பிறர் பழி சொன்னால் பரவாயில்லை, எனது பூர்வீகத்தை அறிந்த எனது இனத்தவன் ஒருவன் பழி சொன்னதை என்னால் ஏற்க முடியாது. வறுமை இன்று வரும், நாளை போய்விடும். ஆனால் நல்ல குடிப்பிறந்தவனது குணம் எப்போதும் மாறாது" என்று தளதளர்த்த குரலில் கூறிவிட்டுச் சென்றான் வேதாச்சலம். அதனால் அன்பானவர்களே, ஒருவனைப் பற்றிக் குறைகூறுமுன் அவனைப் பற்றி நன்கு ஆராயுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒற்கத்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்***
***நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தால்***
***தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்***
***புன்மேயா தாகும் புலி.***

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதது போல, உயர்ந்தோர் வறுமையடைந்தாலும் இழிந்த செயல்களைச் செய்ய மாட்டார்கள். **"பசி பெரிதாயினும் புல்மேயாதாகும் புலி**" என்பது பழமொழி.

**5** "அன்பானவர்களே, பிறர் ஆராயாது பழித்துக் கூறிவிட்டார் என்பதற்காகச் சான்றோர் தாமும் சினங்கொண்டு எதிர்ப்பேச்சுப் பேச மாட்டார்கள். சாதுவான மிருகமான பசு குத்திவிட்டதென்று தாமும் குத்துவார் எவருமே இல்லை. ஆராய்ந்த அறிவினை உடையவர்களாக இல்லாதவர்கள் தான் பசுக்குத்தினாலும் திருப்பிக் குத்துவார்கள். கீழோரின் கீழ்த்தரமான பேச்சுக்களையோ,

நடத்தைகளையோ நல்லவர்கள் கருத்திற் கொள்ள மாட்டார்கள். அவற்றைக் கருத்திற் கொண்டால் வேண்டத்தகாத தீமைகளும் அவமானங்களும் வந்து சேரும். பழித்துரைக்கும் கீழோரைப் பகைக்கும் மேலோரைத் தான் உலகம் பரிகசிக்கும். கீழோர் நல்லறிவில்லாமையால் தம் மனங்கொண்டபடி நடந்து கொள்வார்கள்"

'வேதாச்சலத்திற்குக் கவலையாக இருந்தது. எனினும் அவர் அதைப் பற்றி நினையாது சின்னத்துரையின் வீட்டுக்கு வேலை செய்யச் சென்றார். அவனைக் கண்ட சின்னத்துரை சொன்னான்; "வேதாச்சலம், நீ கந்தையாவோடு எதுவும் பேசாமல் வந்தது பிழை. நானென்றால் அவனை அடித்து முறித்திருப்பேன். கந்தையா பழி பாவங்களுக்கு அஞ்சாதவன். எதையும் ஆராயாது பேசுபவன். அவனைத் திருத்துவதற்குச் சந்தர்ப்பம் வந்த போது நீ அதைக் கெடுத்து விட்டாய். காவல்துறையினரிடம் சொல்லி அவனது மானத்தைக் கெடுத்திருக்க வேண்டும் நீ மடையன் நல்லது செய்ய நினைத்து உனது வாழ்க்கையைக் கெடுத்துவிட்டாய்" என்றார்."

"அதற்குப் பதில் கூற வேதாச்சலம் விரும்பவில்லை. பதில் கூறாவிட்டால் சின்னத்துரை விடமாட்டார் என்பதற்காகச் சொன்னார்; "ஐயா, பசு குத்தி விட்டதற்காக நாமும் அதைக் குத்தலாமா? சாதுவான மிருகமான பசு தற்செயலாகக் குந்தியதற்காகக் கூட யாரும் திருப்பிக் குத்த மாட்டார்கள். கந்தையா புலியைப் போன்றவன். அவனைத் தாக்கினால் அவன் தொடர்ந்து எனக்குத்

தொந்தரவு தந்து கொண்டிருப்பான். கீழானவர்கள் தமது அறிவைப் பயன்படுத்துவதும் இல்லை, அறிவுள்ளவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதுமில்லை. தாம் நினைத்தது தான் சரியென்று நினைப்பார்கள். தீயவர்கள் தீங்கு செய்து பழக்கப்பட்டவர்கள். அவர்கள் எதையும் ஆராயமற் செய்வார்கள். தாம் செய்யும் தீமைகள் ஒரு நாள்த் தம்மை வந்தடைந்து வருத்தும் என்பதை அறிந்தும் அஞ்சாது தீமைகளைச் செய்து இன்பம் அடைவார்கள். நான் ஏழை. அதனால் நான் வறியவன் என்று நினைத்து மற்றவர்களுக்குத் தீமை செய்தால் மேலும் நான் வறியவனாகி விடுவேன். துன்பம் செய்யும் தீவினைகள் தம்மை வருத்துவதை விரும்பாத நல்லவர்கள் பிறருக்குத் தீமை செய்ய மாட்டார்கள். இப்பொழுது நான் வறுமையால் துன்பப்படுகிறேன். இந்நிலையில் மற்றவர்களுக்குத் தீமை செய்து மேலும் துன்பமடைய நான் விரும்பவில்லை” என்றார் வேதாச்சலம்”

“அதைக் கேட்ட சின்னத்துரை சொன்னார்; “இவ்வாறு மன்னிப்பதால் தான் கந்தையா தொடர்ந்து தீமைகளைச் செய்து வருகிறான். ஒருமுறையாவது யாராவது அவனுக்குப் பாடங் கற்பித்தல் வேண்டும்.”

“ஐயா, நல்லவர்கள் தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள். தீயவர்கள் மற்றவர்கள் பழிக்கிறார்கள் என்பதற்காக தாம் செய்யும் தீய செயல்களைக் கைவிட மாட்டார்கள். இது உலக இயல்பு. தண்டனைகள் மூலம் திருத்தலாமென்றால் ஊரில் பல தீய

செயல்களைச் செய்வோர் அரசின் தண்டனைக்குட்பட்டிரு – க்கிறார்கள். ஆனால் தண்டனையின் பின்பும் அவர்கள் மிகவும் மோசமான தீய செயல்களைத்தானே செய்கிறார்கள். அதனால் ஒருவன் தன் மனதால் நினைத்துத் திருந்துதல் வேண்டும்” என்றார். ஆகையால் அன்பானவர்களே, தீய செயல்களைச் செய்யாதீர்கள். மற்றவர்கள் செய்தால் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்குக்***
***காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்? தீந்தேன்***
***முசுக்குத்தி நக்கு மலைநாட! தம்மைப்***
***பசுக்குத்தின் குத்துவார் இல்.***

அறிவற்றோர் செய்யும் தீய செயல்களைச் சான்றோர் பொறுத்துக் கொள்வார்களே தவிர, அவர்களுக்குத் தீமை செய்ய மாட்டார்கள் ‘**பசுக்குத்தின் குத்துவார் இல்**’ என்பது பழமொழி.

**6** “அன்பானவர்களே, செல்வங்களின் மூலம் சிறப்புப் பெறுவது அரசர்க்கு அழகல்ல. ஆண்மையை நிரூபிப்பதே அரசர்க்கழகாகும். ஒரு மன்னன் மக்களின் நலன்களைப் பேணுபவனாகவும், அவர்களது குறை நிறைகளை உடனுக்குடன் போக்குபவனாகவும், ஏழை எளியவர்கள் கூடத் தமது குறைகளை நிறைகளை முறையிட நேரிற் காணக் கூடியவனாகவும், குடிமக்களுக்குத் தன்னாலும் திருடர்களாலும் அமைச்சர்களாலும் துன்பம் வராமற் காப்பவனாகவும் இருந்தாலும், பகைவர்கள்

வலியிழந்து சிதறி ஓடும்படி செய்து அவர்களைத் துரத்திச் சென்று வெல்பவனாக இருக்கா விட்டால், அம்மன்னன் மக்கள் மீது கொண்டுள்ள அளவற்ற பாசத்தால் எந்த விதமான நன்மைகளும் உண்டாக மாட்டா. உறுப்புக்கள் அனைத்தும் அமைந்திருந்து எதிர்க்கும் பகைவர்களை அஞ்சாது தோல்வியடையச் செய்வதே உண்மையான படையாகும். அது தான் அரசனின் பெருஞ்செல்வமுமாகும். போரில் எதிர்பாராத அழிவால் வல்லமை குன்றினாலும், அதைப் பொருட்படுத்தாது அஞ்சாது வீரமுடன் முன்சென்று பகைவரை அழிப்பதே சிறந்த படையாகும். எலிகள் போலப் பெருமளவில் கூடிக் கூச்சலிடாது, பாம்பைப் போலச் சீறிச் சென்று பகைவரை அழிப்பதே படையின் நோக்கமாக இருத்தல் வேண்டும். யமன் தான் எதிரியாக முன் வந்து நின்றாலும், அவனைத் துரும்பாக நினைத்துத் துணிவுடன் போர் செய்வதே சிறந்த படையாகும். போர் செய்யும் துணிவும், பகைவரைத் தடுக்கும் ஆற்றலும் இல்லாத படைவெறும் அலங்கார அணிவகுப்புக்கு மட்டுமே உதவும்".

"சிவபுரி மன்னன் மார்த்தாண்டன், மக்களைத் தன்னைப் போல மதிப்பவன். அதனால் அவர்களுக்கு எந்தவிதமான துன்பங்களும் வராமற் காப்பவன். மலையில் இருந்து பாய்ந்து கடலுக்குள்ச் செல்லும் அருவியை அணை கட்டித் திருப்பிக் குளங்களுள்ப் பாய விட்டதால் வருடம் பூராகவும் சிவபுரியில் பயிர்ச்செய்கை நடைபெறும். அதனால் உணவுக் களஞ்சியம் எப்போதும் நிறைந்திருக்கும். மக்கள் இயல், இசை, நாடக

விழாக்களை நடத்தி மகிழ்ந்திருந்தனர். தமக்கு ஏதாவது குறைகள் இருப்பின் அவர்கள் மன்னனைச் சந்தித்து முறையிடுவர். மன்னன் காலதாமதம் செய்யாது அவற்றைத் தீர்த்து வைப்பான்.”

“மன்னன் மக்களின் நலனில் செலுத்தும் அக்கறையை அவர்களது பாதுகாப்பில் செலுத்துவதில்லை. முதலமைச்சரும் படைத் தளபதிகளும் மன்னனைச் சந்தித்துப் படைக்கு ஆள்திரட்டுதல் வேண்டும் குதிரைகளையும், யானைகளையும் வாங்குதல் வேண்டும். ஆயுதங்களைச் செய்தல் வேண்டும் என்று கூறும் போது மன்னன் ஒப்புக் கொள்வானே தவிர அதில் அக்கறையோ, ஆர்வமோ காட்டுவதில்லை. அதனால் முதலமைச்சரும் படைத்தளபதிகளும் அரசருக்குச் சொல்வதை விட்டு விட்டனர்”.

“சிவபுரிக்கு அருகில் உள்ள நாடு நாகபுரி. நாகபுரி வளம் குறைந்த நாடு. அதனால் அந்நாட்டு மக்கள் சிவபுரிக்கு வந்து வயல்களில் வேலை செய்வது வழக்கம். நாகபுரியின் ஏழ்மை நிலை கண்டு வருந்திய மார்த்தாண்டன் உணவுப் பொருட்களை நிவாரணமாகக் கொடுப்பான். நாகபுரி மன்னன் சித்திராங்கன் சிவபுரியைக் கைப்பற்றினால் தாம் வளமாக வாழலாம் என நினைத்துப் படையைத் தயார் செய்து, சிவபுரி மீது படையெடுத்தான். நாகபுரி வறிய நாடு, சிறிய படையைக் கொண்டது என்று மார்த்தாண்டன் நம்பிப் போர்தொடுத்தான். பயிற்சியின்மையும், ஆயுதத் தட்டுப்பாடும், போதிய வீரர்களும் இன்மையாலும் சிவபுரிப்

படைகள் பின் வாங்கின. மார்த்தாண்டனும் படைத்தளபதிகளும் நாட்டை விட்டுத் தப்பி ஓடினர். ஆகவே அன்பானவர்களே, வாய்ச் சொல்லில் வீரர்களாக இருக்காதீர்கள். பொருளைத் தேடினால் மட்டும் போதாது அதைப் பாதுகாத்தால் தான் அதனால் நன்மையடையலாம் எனத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கொடையும் ஒழுக்கமும் கோளுள் உணர்வும்***
***உடையர் எனப்பட்டு ஒழுகிப் பகைவர்***
***உடையமேற் செல்கிற்கும் ஊற்றம் இலாதார்***
***படையின் படைத்தகைமை நன்று***

படைப்பலம் இல்லாத வேந்தன் பிற ஆற்றல்கள் பல இருந்தாலும் அதனால் நன்மையடைய மாட்டான். **"படையின் படைத்தகைமை நன்று"** என்பது பழமொழி.

**7** "அன்பானவர்களே, ஒவ்வொரு வரும் ஒழுக்கமாக வாழ்தல் வேண்டும். ஒழுக்கமாக வாழ்பவவர்களைத்தான் கடல் சூழ்ந்த உலகத்தில் உள்ள அனைவரும் விரும்புவார்கள். ஒழுக்கம் தான் இம்மைக்கும் மறுமைக்கும் உயிர்களோடு கூட வந்து உதவி செய்யும். ஆதலால் ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் உயிரிலும் மேலாகக் கருதுதல் வேண்டும். சான்றோர்கள் துன்பம் வந்த காலத்திலும் ஒழுக்கம் தவற மாட்டார்கள். ஒழுக்கமில்லாதவரின் வாழ்க்கை உயர்ந்ததாகவும் சகல செல்வங்களையும் உடையதாகவும் இருந்தாலும் அது நிலைத்து நிற்காது. நல்லொழுக்கம் இன்பமான வாழ்க்கைக்கு எப்போதும் உதவி,

அந்நெறியில் வழுவாது ஒழுகுபவரைக் கடவுளென மதிக்க வைக்கும். ஒழுக்கமில்லாதவர்கள் சிறந்த பல நூல்களைக் கற்றிருந்தாலும், அவர்கள் அறிவில்லாதவர்களாகவே உலகத்தவரால் கருதப்படுவார்கள். ஒழுக்கம் குடிப்பிறப்பால் வருவது. அதைப் பேணிக்காப்பது மக்களின் கடனாகும்."

"வேதவனம் என்ற கிராமத்தில் வாழ்ந்த குதிரை நல்லொழுக்கம் உள்ளது. மற்றவர்களுக்கு உதவி செய்வது. காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டுக் குளிக்கும். பின் கடவுளை வணங்கி விட்டுத் தனது எசமான் இட்ட கடமைகளைச் செய்யும். பின் தன்னோடு இருக்கும் மிருகங்களுக்கு உதவி செய்யும். எசமான் பன்றிகளையும், முயல்களையும், காளை மாடுகளையும், நாய்களையும் வளர்த்து வந்தார். நாய்கள் எப்பொழுதும் எசமானின் பின்னே திரியும். அவர் நாய்களின் மீது அதிக அன்பு வைத்திருந்தார். நாய்கள், தினமும் பசுக்களுக்கும் முயல்களுக்கும் வைக்கும் உணவுகளைத் தின்ன விடாது தாமும் தின்று அசுத்தப்படுத்தி உணவை நிலத்தில் கொட்டும். காளை மாடு, நாய்கள் அருகிற் சென்றால் தனது கொம்புகளாற் குத்தும். தூக்கி வீசும். அதனால் நாய்கள் காளை மாட்டிற்கு அருகே செல்லப் பயப்படும். குதிரை நாய்க்குத் தினமும் அறிவுரை சொல்லும் ; "நண்பரே உமக்கு எஜமான் வயிறு நிறைய உணவு தருகிறார். இருந்தும் நீர் திருடித் தின்கிறீர். பசுக்களையும், முயல்களையும் வெருட்டியும், கடித்தும் உண்கிறீர். இது சரியல்ல. திருடுவது பாவம். நீர் நேற்றுப் பசுவுக்கு வைத்த உணவை அசிங்கப்படுத்தியதோடு

நிலத்தில் சிந்தி விட்டீர். அதனால் பசு உண்ணவில்லை. அது பசியால் வாடியது. தயவு செய்து பிறருக்குத் துன்பம் செய்யாது ஒழுக்கமாக வாழும். உமக்கு உணவு போதா விட்டால் எசமானைக் கேளும். இல்லா விட்டால் என்னிடம் வாரும் தருகிறேன். பசு சாதுவான மிருகம். அதைக் கேட்டால் தரும். அதை விட்டு விட்டு அதன் உணவை எச்சிற்படுத்தியும், சிந்தியும் விடுவது நியாயமல்ல...?" என்று சொல்லும் போது நாய் சொன்னது ; " நீ உனது வேலையைப் பார். ஒழுக்கமாக வாழ்ந்தால் எனது வயிறு நிரம்பாது . நான் இரவில் நன்றாக உண்டால் படுத்து நித்திரையாகி விடுவேனாம். அதற்காகத் தான் எனக்கு இரவில் உணவு தரப்படுவதில்லை. இது நியாயமோ...? நீ உனது வேலையைப் பார்" என்றது"

"குதிரை அதன் பின் பேசவில்லை. அன்று மாலை நேரம் பசுவிற்கு வைத்த உணவை நாய் தின்ன வந்தது. பசு சொன்னது ; " நண்பா, நீ எனது உணவை எச்சிற்படுத்துவதாலும்; நிலத்தில் கொட்டுவதாலும், நான் தினமும் பசியால் துடிக்கிறேன். உனக்கு நான் எனது உணவில் சிறிதளவைத் தருகிறேன். எனது உணவை எச்சிற்படுத்தாதே" என்றது"

"அதை நாய் கேட்கவில்லை. அது பசுவின் உணவை உண்ண வந்தது" அதனால் பசு கோபத்துடன் இடித்தது. அதனால் கோபம் கொண்ட நாய் பசுவைக் கடித்தது. பசு அலறும் சத்தம் கேட்டு ஓடோடி வந்த எசமான், பசுவின் முகத்திலிருந்து இரத்தம்

வருவதைக் கண்டு நாயைப் பார்த்துச் சொன்னார்; “உனக்கு வீட்டில் உணவு வைத்தாலும் தினமும் பசுவின் உணவை உண்கிறாய். அதனால் தினமும் பசு உண்ணாமல் இருப்பதால் பால் குறைவாகத் தருகிறது. அத்துடன் நீ முயல் குட்டிகளையும், பன்றிக்குட்டிகளையும் கொன்று உண்கிறாய். அதனால் உன்னை உயிருடன் வைத்திருத்தல் கூடாது” என்றார்”

“குதிரை அதைக் கேட்டு அதிர்ந்து போனது; “எசமானாரே, நாய் துட்டக் குணங்களை உடையதென்பதற்காக அதைத் தயவு செய்து கொல்ல வேண்டாம். பாவம் அதை விடுங்கள்” என்றது”

“குதிரையே, நீ மிகவும் ஒழுக்கமானவன். துன்பமான வேளைகளிலும் மனம் சலியாமல் வேலை செய்பவன். பிறருக்கு உதவி செய்பவன். ஆலோசனைகள் சொல்பவன். அதனால் உனது சொல்லை நான் கேட்கிறேன். அடுத்த பிறப்பில் நீ எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும். நீ தேடித் தந்த இந்தச் சொத்துக்களையெல்லாம் உனக்கே நான் எழுதித் தரல் வேண்டும்” என்று கண்கலங்கச் சொன்னார். பின் ; “உனக்காக நான் நாயைக் கொல்லாமல் விடுகிறேன். அதை அருகில் உள்ள காட்டில் கொண்டு சென்று விட யோசிக்கிறேன்” என்றார்”

“குதிரைக்குத் துக்கமாக இருந்தது. எனினும் எசமான் அதை மன்னிக்க மாட்டார் என்று நினைத்தது. இருப்பினும் சொன்னது ; “எசமானாரே, பாவம். அப்படிச் செய்யாதீர்கள். தீயவர்களைத் திருத்துவது தான் முறை. நாயைத் திருத்தப் பாருங்கள்” என்றது.

எசமான் அதற்குச் சம்மதித்தார். அதன் பின் அவர் நாயை எந்நேரமும் கட்டி வைத்திருந்தார். ஒரு நாள் நாயை அவிழ்த்து விட்ட போது நாய் குதிரையிடம் வந்து சொன்னது ; "நண்பா, உன்னை நான் மதிப்பதில்லை. இருந்தும் மிகவும் நல்லவனான நீ எனக்கு உதவி செய்துள்ளாய். இனிமேல் நான் உன்னைப் போல ஒழுக்கமாக வாழ முடிவெடுத்துள்ளேன். அதை எசமானுக்குச் சொல்" என்றது. ஆகவே அன்பானவர்களே ஒழுக்கம் தான் உயர்வைத் தரும் என்பதை உணர்ந்து ஒழுக்கமாக வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்

*ஓதநீர் வேலி உலகத்தார் அந்நெறி*
*காதலர் என்பது அறிந்தல்லால் - யாதொன்றும்*
*கானக நாட! பயிலார் ; பயின்றது*
*வானகம் ஆகி விடும்*

உலகோர் விரும்பும் நல்லொழுக்க நெறியில் வாழ்பவர்கள், இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழ்வார்கள். "**பயின்றது வானகம் ஆகிவிடும்"** என்பது பழமொழி.

8 "அன்பானவர்களே, பண்பில்லாத கயவர்களுடன் தேவர்கள் கூடப் பேசமாட்டார்கள். அப்படியிருக்க அவர்களுடன் மக்கள் எப்படிப் பேசலாம்? சபை நடுவே கயவர்கள் வந்து குதர்க்க வாதம் பேசினால், அவர்களுக்கு விளக்கமளிக்கக் கூடாது. அவர்கள் இருக்குமிடத்திற் சென்று அமராமல் விலகி இருத்தல் வேண்டும். நூல்களைப் பற்றி அறிந்தவர்கள் போலக் குதர்க்க வாதம் பேசும் புல்லறிவாளர்களை விடப் பைத்தியக்காரன் மேலானவன்.

ஏனென்றால் அவன் என்ன பேசுகிறான் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் புல்லறிவாளர்கள் தாம் என்னென்ன பேசவேண்டு மென்று திட்டமிட்டு வந்து அவையைக் குழப்புவார்கள். தாம் நினைத்தது தான் சரியென்று வாதிடுவார்கள். இவர்களுக்குக் கடவுளே வந்து சொன்னாலும் ஏற்க மாட்டார்கள். அதனால் அறிவுடையவர்கள் அவர்களை ஒதுக்கி வைப்பர்”

“முல்லை வனத்திலே வாழ்ந்த மிருகங்கள் பௌர்ணமி தினத்தன்று ஒரு கருத்தரங்கு வைக்கும். அதற்கு அருகில் உள்ள காடுகளில் வசிக்கும் மிருகங்களெல்லாம் ஆவலுடன் வந்து சேரும். யானை, குதிரை, காளை மாடு என்பன சகல நூல்களையும் கற்றிருந்தன. யானையின் பேச்சைக் கேட்க முல்லை வனத்தில் உள்ள மிருகங்களும் அயல் வனங்களில் உள்ள மிருகங்களும் மிகவும் விரும்பும். யானை பேசும் போது கேட்பவரைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவரைக் கேட்கத் தூண்டக் கூடியதாகவும் பேசும். சொற்களின் வலிமையை அறிந்து, கேட்பவரின் தகுதியையும் அறிந்து, தான் சொல்கின்ற சொல்லை வெல்லக் கூடிய வேறு சொல் எதுவும் இல்லை என்பதை அறிந்த பிறகே அது பேசும். அதனால் அது இன்னும் சிறிது நேரம் பேசாதா என மிருகங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும்”

“குதிரை திருமுறைகளைத் தாளம் தப்பாது இனிமையாகப் பாடும். ஒரு சங்கீத வித்துவானைப் போல அது பாடத் தொடங்கினால் மிருகங்கள் யாவும் மெய்மறந்து கேட்கும்”

“காளை மாடு அழகாக நடனமாடும். அத்துடன் நவரச பாவங்களையும் வெளிப்படுத்தி நடிக்கும். அதன் நடிப்பையும் நடனத்தையும் அடிக்கடி காட்டின் ராசாவான சிங்கம் தனது அரச சபையில் நடத்தி அதைக் கௌரவித்துப் பரிசுகள் வழங்கும்”

“அன்று முல்லை வனத்தில் பௌர்ணமிக் கருத்தரங்கு என்று கேள்விப்பட்டதும் முல்லை வனத்து மிருகங்களும் அயல்வனங்களில் வாழும் மிருகங்களும் வந்து கூடின. சிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற அவ் விழாவில் யானை ; “திருக்குறளில் உள்ள இன்பத்துப் பாலில் உள்ள அறக் கருத்துக்கள்” என்ற விடயம் பற்றி மிகவும் ஆழமாகப் பேசிக் கொண்டிருந்தது.”

“அப்பொழுது பன்றி பட்டுப் பீதாம்பரங்கள் அணிந்து சபைக்கு வந்தது. அது எப்பொழுதும் தன்னை உயர்த்திப் பேசும். தனது கல்வியின் தரத்தைப் பற்றிப் பேசும். யானையின் தரத்தைப் பற்றிப் பேசும். யானையிலும் பார்க்கத் தான் கூடுதலாகப் படித்ததாகக் கூறும். தலைக்கனம் மிக்க பன்றியை மிருகங்கள் மதிப்பதில்லை.”

“குற்றமில்லாத சில சொற்களைக் கூடச் சொல்லத் தெரியாதவர்களே பயனற்ற சொற்களை நீண்ட நேரம் ஆராயாது பேசுவார்கள். பன்றி வந்து சபையைக் குழப்பப் போகிறது” என்றது குரங்கு”

“திருக்குறளில் இன்பத்துப் பாலில் என்ன அறக்கருத்து இருக்கிறது. அறியாமை மிகுந்த யானை எடுத்த தலைப்பே பிழையானது. அதைக் கூடியிருந்து கேட்பவர்கள் மூடர்கள்” என்று கூறிச் சிரித்து விட்டுச் சொன்னது ; “சொல் வேந்தன் யானை என்று புனை பெயரை வைத்துள்ள யானை நான் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த பதிலை இன்றுவரை தரவில்லை. திருக்குறளில் ஏராளமான பிழைகள் இருக்கிறது”.

“தெய்வம் தொழா அள் கொழு நன் தொழுது எழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை” என்று வள்ளுவர் சொல்லியுள்ளார். எங்கே யானையைக் கொண்டு மழையைப் பெய்வியுங்கள் பார்க்கலாம். இன்னொரு குறள், வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி, மிச்சில் மிசைவான் புலம்” இங்கே கூறப்பட்டது போல வித்து இடாமல் விளைச்சலைப் பெற்றுத் தரும்படி யானைக்குக் கூறுங்கள். அதைவிட வள்ளுவர் தெய்வத்தை இகழ்கிறார் ; “தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்” என்ற குறள் மூலம் தெய்வத்தால் எதுவும் ஆகாது என்று கூறித் தெய்வத்தை இகழ்கிறார்” என்று பன்றி கூறும் போது குரங்கு எழுந்து சென்று மேசைக்கருகில் இருந்த மரத்தில் ஏறி இருந்து யானையின் பேச்சைக் கேட்டது”.

“புறாவும், மயிலும், கொக்கும் பறந்து சென்று குரங்கிற்கு அருகே இருந்தன. பன்றி அருகில் யாரும் இல்லாமையால் எழுந்து மானின் அருகே சென்று, முன்பு குரங்கு அமர்ந்திருந்த ஆசனத்தில்

அமர்ந்தது. இவ்வாறு பன்றி எழுந்து சென்று அமர அமர அருகில் இருந்த மிருகங்கள் எழுந்து இடம்மாறின".

"இவர்களுக்கு அறிவாளிகளின் பேச்சுப் பிடிக்காது. அதன் அர்த்தமும் புரியாது" என்று கழுதைக்குச் சொன்னது பன்றி. கழுதை பெரிதாகப் படிக்கா விட்டாலும் பெரியவர்களின் பிரசங்கங்களைக் கேட்பதில் தவறுவதில்லை. அதனால் அது சொன்னது ; "சொற்களின் வகை தொகைகளை அறிந்தவர்கள் பேசும் போது சபையோர் கேட்கிறார்களா என அவதானித்த பின்பே பேசுதல் வேண்டும். கேட்பவனின் மனநிலையை அறியாமற் பேசுபவர்கள், ஒழுங்காகக் கற்காதவர்கள். அவர்களுக்குச் சொற்களின் அர்த்தம் புரியாதது போலக் கேட்பவரின் மனநிலையும் புரியாது. தன்னையும் புரியாது பிறரையும் புரியாது பேசுபவர்கள் பைத்தியக்காரர்கள்" என்று கூறிவிட்டு எழுந்து சென்றது".

"ஒழுங்காகக் கற்காதவர்களுக்கு அறிவுரை கூறக்கூடாது" என்று நினைத்தவாறு பன்றி எழுந்து சென்றது. ஆகையால் அன்பானவர்களே, சொற்களின் அர்த்தங்களைப் புரியமாற் பேசுவோருக்குப் பதில் கூறாது ஒதுக்கி விடுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கல்லாதும் கேளாதும் கற்றார் அவைநடுவண்***
***சொல்லாடு வாரையும் அஞ்சற்பாற்று – எல்லருவி***
***பாய்வரை நாட! பரிசழிந் தாரோடு***
***தேவரும் மாற்றல் இலர்.***

கற்றவர் அவையில் இருந்து குதர்க்க வாதம் செய்யும் ஒருவரைக் கண்டால்,அவருக்குஅஞ்சி ஒதுங்குதல் வேண்டும். **பரிசழிந்தாரோடு தேவரும் மாற்றல் இலர்**” என்பது பழமொழி.

9 “அன்பானவர்களே, நாவை அடக்கியவன் தான் உண்மையான ஞானி. நாவானது சுவையான உணவு வகைகளை உண்ண தூண்டி ஆசை, அவா என்பவற்றை வளர்க்கும். அதைவிட மற்றவர்களுடன் பயனில்லாத சொற்களைத் திமிருடன் பேச வைத்து ஒருவனது ஒழக்கம், நல்லநடத்தை போன்றவற்றைக் கெடுத்துக் கேட்பவர்களெல்லோரையும் வெறுக்க வைக்கும். கொடிய வார்த்தைகளைக் கூறும் தீயவனது நாக்கைப் பருந்து கூடக் கொத்தித் தின்னாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். ஒருவரது செயலை, நடத்தையை, அறிவை, ஒழுக்கத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவது நாக்கு, எனவே நாவைப் பாதுகாப்பதன் மூலம் ஒருவர் தாம் விரும்பிய பயன் முழுவதையும் அடையலாம்”

“கடலூரில் வாழ்ந்த சிதம்பரம் என்னும் பெருந்தனவந்தன் தனது பணத்திமிரினால் யாரையும் மதிப்பதில்லை. பெரியவர்களானாலும் அவன் அவர்களைக் கேலி செய்து மகிழ்வான். பலரின் முன்னிலையில் ஒருவரைக் கேலி செய்வது அவனுக்கு மிகவும் விருப்பமானது. அவனது கையாட்கள் அவன் கொடுக்கும் பொருளிற்காக அவன் கேலி செய்யும் போது பெரிதாகச் சிரித்து மகிழ்வதோடு பின் அவனில்லாத இடத்திலும் அதைப் பேசி மகிழ்வர். அறிவுள்ள பலரும் கேட்டு வெறுக்கக் கூடிய பயனில்லாத

சொற்களைப் பேசும் சிதம்பரத்தை மக்கள் வெறுத்தனர். ஒருவன் தான் செய்யும் தீமைகள் எல்லாவற்றையும் விடப் பிறரை அவமதித்துப் பேசுவது தீயது என்று உணராத சிதம்பரம் தனது நண்பர்களையும் பெரியவர்களையும் இகழ்ந்து பேசுவான். பயனில்லாத சொற்களை ஆராயாது திரும்பத் திரும்பக் கூறுவது ஒரு நாள் ஆபத்தை உண்டாக்கும் என்பதை உணராத அவன் தனது மனம் போன போக்கிற்குக் கதைத்து வந்தான். ஊரில் உள்ளவர்கள் அவனைக் கண்டால் அஞ்சி ஒதுங்கி விடுவர். அதை அவன் பெரியவர்களின் பலவீனமாகவும் தனது பலமாகவும் எண்ணி இறுமாப்படைந்திருந்தான்.'

"ஒரு நாள் ஒரு அப்பாவி மனிதன் வீதியால் வந்து கொண்டிருந்தான். அவன் திருமணம் செய்யவில்லை. அவன் காதலித்த பெண்ணைப் பெற்றோர் பலவந்தமாக இன்னொருவனுக்குத் திருமணம் செய்து கொடுத்து விட்டனர். வீதியோரத்தில் தனது சகாக்களுடன் நின்ற சிதம்பரம் அந்த மனிதன் தனக்கருகில் வந்த போது சொன்னான் ; "டேய், இங்கே வா. ஒரு பெண் இல்லாவிட்டால் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்யலாம் தானே. உன்னைக் காதலித்தவள் உனது இயலாமை காரணமாகத் தான் இன்னொருவரைத் திருமணம் செய்தாள். தைரியமிருந்திருந்தால் நீ அவளை அழைத்துச் சென்றிருப்பாய். தைரியமில்லாத நீ வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தாலும் அவளுக்கு உழைத்துக் கொடுக்க மாட்டாய்" என்று கூறி விட்டுப்

பலமாகச் சிரித்தான். அதைக் கேட்ட அவனது சகாக்களும் பெரிதாகச் சிரித்தனர்".

"அந்த மனிதனுக்கு அதைக் கேட்க அவமானமாக இருந்தது. அத்துடன் சிதம்பரத்திற்கு உறைக்கக்கூடியதாக ஏதாவது சொன்னால் தான் அவன் திருந்துவானென நினைத்துச் சொன்னான் ; "ஐயா, காதலிப்பவன் துணிவுள்ளவனாகவும் தைரியமானவனாகவும் மானமுள்ளவனாகவும் இருக்கா விட்டாலும், அவன் காதலித்த பெண்ணைப் பொருளுக்காக ஏற்கும் உன்னைப் போன்ற பொருளாசை மிக்க மானங்கெட்டவர்கள் உள்ளவரை யாரும் காதலில் வெற்றி பெற முடியாது" என்றான்".

"சிதம்பரம் தடுமாறிப் போனான். தனது மனைவி இன்னொருவனைக் காதலித்தாளா? அதை மறைத்தா எனக்குத் திருமணம் செய்து தந்தனர்' என்று யோசித்தான். கூடி நின்றவர்கள் பலமாகச் சிரித்தனர். மறுநாள் ஊர் முழுவதும் அதே பேச்சாக இருந்தது. சிதம்பரம் வாலிபனாக இருக்கும் போது பெருந்தனவந்தனல்ல. கல்யாணத் தரகன் தான் பெரிய தனவந்தனின் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். உண்மையில் அவனது மனைவி இன்னொருவனைக் காதலிக்கவில்லை. அவள் தூய்மையானவள். அவன்வேண்டு மென்றே அப்படிக் கூறினான். அதன் பின் சிதம்பரம் பைத்தியக்காரனைப் போலானான். ஆகவே அன்பானவர்களே, நீங்கள் பிறரைக் கேலி செய்தால் என்றாவது ஒரு நாள் பெரும்

அவமானப்படுவீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உரைத்தவர் நாவோ பருந்தெரியா தென்று***
***சிலைத் தெழுந்து செம்மாப் பவரே – மலைத்தால்***
***இழைத் திகவா தவரைக் கனற்றிப்***
***பலிப்புறத் துண்பார் உணா.***

இகழ்ந்து பேசுவதை வழக்கமாகக் கொண்டவர் என்றாவது ஒரு நாள் பெரும் அவமானப்படுவர். '**பலிப்புறத்து துண்பார் உணா”** என்பது பழமொழி.

**10** “ அன்பானவர்களே, தன் பெற்றோர் மனைவி மக்கள் சுற்றத்தவருடன் நல்வழி நின்று வாழ்வது தான் இல்வாழ்க்கை. அறவழியில் பொருள் தேடி, அதை நல்ல வழியில் செலவு செய்து சகலருடனும் இன்பமாக வாழும் இல்வாழ்க்கையை இல்லத்திலிருந்து செய்யும் தவம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவ்வாறு நல் வழியில் வாழும் இல்வாழ்வான் தான் உலகில் வாழும் உயிர்களுக்குத் துணையானவன். தவம் செய்பவர்களைத் தமது வழியில் வாழ வைத்து, தானும் தவ வழியிலே வாழும் வாழ்க்கை தவ வாழ்க்கையை விடச் சிறப்பு மிக்கதாகும். உலகில் வாழ வேண்டிய முறையில் வாழ்ந்து வருபவனைத் தெய்வம் என்று உலகத்தவர்கள் போற்றுவார்கள். ஆனால் சிலர் துறவை விரும்புவார்கள். வன்மையான நெஞ்சம் கொண்ட தீயவர்களுடன் சேர்வதால் மனிதப் படைப்பின் நோக்கம்

இல்லாமற் போய்விடும். மணவாழ்க்கை துன்பமுடையது. திருமணம் செய்த ஒருவன் தனக்காகவும், தனது மனைவி பிள்ளைகள், பெற்றோர், சுற்றத்தினரின் நல்வாழ்வுக்காகவும் உழைத்தல் வேண்டும். அப்படி உழைத்தாலும் குடும்பத்தில் உள்ள எவரும் நன்மை சொல்ல மாட்டார்கள். உழைத்து உழைத்துப் பொருள்தேடு என்றே சொல்வார்கள். மனம் எப்பொழுதும் அவாப்பட்டுக் கொண்டேயிருக்கும். அதைத் திருப்திப்படுத்தவே முடியாது. அதனால் இல்வாழ்க்கையைத் துறந்து துறவறம் செல்வதே மேலானது”

“துன்பம் இல்லாத நிலை வேண்டுமென்றால், பொருள்களின் மீதுள்ள ஆசையை நீக்க வேண்டும். முற்றும் துறந்தவரே துறவிகளுள் உயர்ந்தவர். அவ்வாறு துறக்காத மற்றவர்கள் அறியாமை என்ற வலையில் அகப்பட்டுத் தவிப்பவர்கள் ஆவர்”

“நாவல் நகரில் வேலாயுதம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏழு பிள்ளைகள். அதில் மூவர் பெண்கள். வேலாயுதத்துடன் அவரது பெற்றோரும், மனைவியின் பெற்றோரும், வாழ்விழந்த அவரது சகோதரியும் பிள்ளைகளும் வாழ்ந்து வந்தனர். அவரது சம்பாத்தியம் அக்குடும்பத்திற்குப் போதாது. அவரது வயது வந்த இருமகன்மார் குடும்பத்தின் மீது அக்கறை இல்லாமல் ஊரைச் சுற்றி வந்தனர். அவரது மூத்த மகள் சாதியில் மிகவும் குறைந்த ஒருவனைக் காதலித்து அவனுடன் ஓடி விட்டாள். அவள் காதலிக்கும்

போது வேலாயுதம் தனது மகளைக் கண்டித்தார். அதற்கு அவள் சொன்னாள் ; "அப்பா, உங்களால் எமக்குப் போதியளவு உணவு கூடத் தர முடியவில்லை. அப்படியிருக்க எப்படி எனக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறீர்கள். உங்களுடன் வாழ்வதைவிட நான் விரும்பியவருடன் செல்வது மேல்" என்றாள். வேலாயுதத்தால் எதுவும் பேசமுடியவில்லை. அவள் தான் காதலித்தவனுடன் சென்று ஒரு வருடம் கழிந்த பின்பு ஒரு குழந்தையுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். காதலித்துக் கை பிடித்தவன் இன்னொரு பெண்ணைத் திருமணஞ் செய்து விட்டான். இதனால் மிகுந்த கவலை கொண்ட வேலாயுதம் அருகில் உள்ள சுவாமியார் ஒருவரிடம் சென்றார்"

"சுவாமியாரோடு அவ்வூரில் உள்ள பெரும் தனவந்தர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார் ; "சுவாமி என்னிடம் வேண்டியளவு சொத்திருக்கிறது. எனக்கு ஏழு பிள்ளைகள். அவற்றில் ஐந்து பேர் ஆண்கள். அவர்கள் நன்றாகக் குடிக்கிறார்கள், சூதாடுகிறார்கள். தீய செயல்கள் பலவற்றையும் செய்கிறார்கள். எனது பெண் பிள்ளைகளுக்கு வயது வந்தும் திருமணமாகவில்லை. பொருளை அள்ளிக் கொடுத்தாலும் நல்ல மாப்பிள்ளை கிடைக்கிறானில்லை" என்று அழுதார்."

"அதற்குச் சுவாமியார் சொன்னார் ; "அன்பனே, பொருளால் ஒருவர் நினைத்ததைச் சாதிக்க முடியாது. குடும்பம் என்பது ஒருவரை நற்கதிக்குச் செல்ல விடாது. ஓயாது துன்பங்களும் பிரச்சினைகளும் வந்து மனிதனுக்குப் பிணைப்பைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். மனிதன் இன்பமடைய வேண்டுமானால்

குடும்பத்தில் உள்ள தளைகளை அறுத்தல் வேண்டும். அப்படி அறுப்பதற்குப் பற்றில்லாதவனாகிய இறைவனைப் பற்றுதல் வேண்டும். அப்படிப் பற்றினால் தான் மெய்யான பொருட்களைப் பொய்யான பொருட்கள் என்று எண்ணும் எண்ணம் வராது. மயக்கத்தைத் தரும் அறியாமை நீங்கும். எதையும் சந்தேகம் இல்லாமல் தெளிவாக அறியக்கூடிய நிலை உண்டாகும். ஐம்புலன்களால் உண்டாகும் பற்று, பாசம் , மோகம் என்பன இல்லாமற் போகும். எந்தப் பொருளாக இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காத தன்மை உண்டாகும். இவர்கள் கற்க வேண்டியவற்றைக் கற்று, உணர வேண்டிய உண்மைப் பொருட்களை உணர்ந்து நித்தியமான இன்பமான பேரின்பத்தை அனுபவிப்பார்கள். இந்நிலையை அடைந்தவர்களுக்கு மீண்டும் பிறப்பென்பதே இல்லை. பிறவித் துன்பத்திற்குக் காரணம் அறியாமை. இவ்வறியாமையை நீக்க நாம் தெய்வத்தை அடைதல் வேண்டும். தெய்வத்தை அடைந்தவர்களுக்குப் பொருள்களின் மீது பற்று இராது. ஆசை, சினம், அறியாமை ஆகிய குற்றங்கள் அடியோடு அழிந்து விடும். ஆசை தான் பிறவிக்கு வித்து. இந்த ஆசை குடும்பத்தவனுக்குப் பெருகிக் கொண்டே போகும். ஆகையால் நித்திய இன்பத்தைப் பெற விரும்புபவர்கள் குடும்பத்தை வெறுத்துத் துறவு வாழ்க்கையில் ஈடுபட வேண்டும்" என்றார் ஆகவே அன்பானவர்களே, குடும்ப வாழ்வு தான் ஆசைகளை வளர்ப்பது. மனிதனைப் பிறப்புக்குள்ளாக்குவது. குடும்பத்தவர்கள் பற்றில்லாமல் ஞானியைப் போல வாழவேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வன்னெஞ்சி னார்பின் வழிநினைந்து செல்குவை***
***என்னெஞ்சே! இன்றிழிவை யாயினாய் - சென்னெஞ்சே!***
***இல்சுட்டி நீயும் இனி துரைத்துச் சாவாதே***
***பல்கட்டப் பெண்டிர் மகார்***

குடும்பம், துறவு வாழ்க்கைக்குச் செல்ல விடாது தடுக்கும். **'பல்கட்டப் பெண்டிர் மகார்"** என்பது பழமொழி **"பெண்டாட்டி கால் விலங்கு பிள்ளையோ சுள்ளாணி"** எனவும் ஒரு பழமொழி உண்டு.

**11** "அன்பானவர்களே, தற்போது ஒருவர் வாழும் வாழ்க்கைக்கும் அவர் செய்யும் செயல்களுக்கும் தொடர்புள்ளதாக நினைத்து யாரும் ஏமாறக்கூடாது. முதல் வருடத்தில் ஏராளமான பசளையிட்ட வயலானது மறு வருடம் பசளையிடாது பெரும் விளைச்சலைத் தருவது போல, முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலனானது இப்பிறப்பில் வந்து உதவும். ஒருவர் எவருக்கும் எதுவும் வழங்காதவராகவும், எந்த விதமான வலிமையும் இல்லாதவராகவும், பொல்லாங்கை மிகுதியாகச் செய்பவராகவும், ஒருவருக்குத் துன்பம் வந்த போதும் அவருக்கு உதவாதவராகவும் வாழும் ஒருவர் பெரும் செல்வந்தவராகவும், பெரும் மதிப்புள்ளவராகவும், சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்கிறாரென்று பலர் எண்ணுவார்கள் இதெல்லாம் அவர் செய்த முன்ஜென்மப் பாவ புண்ணியங்களே தவிர வேறு எதுவும் இல்லை"

“நாவல் நகரில் ஏகாம்பரம் என்றொரு பெரிய தனவந்தர் இருந்தார். அவர் எச்சிற் கையாற் கூடக் காகம் கலைக்க மாட்டார். மிகுந்த துன்பப்படும் ஒருவனுக்குக் கூட உதவ மாட்டார். அவரது சகோதரி மிகவும் ஏழை. அவளுக்குப் பத்துப் பிள்ளைகள். அப்பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று  கல்வி கற்காது கூலி வேலை செய்தனர். ஏகாம்பரம் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலையில் தனது பிள்ளைகளைக் கற்பித்தார். அவரது சகோதரியின் கணவன் நோயாளி. அவருக்கு மருந்து வாங்கக் கூட ஏகாம்பரம் பணம்  கொடுக்க மாட்டார். “விதி வலியதாக இருந்தால் அவரின் நோய் குணமாகி விடும்” என்பார். கோயிற் கட்டிட வேலைக்கு யாராவது சென்றால்; “கோயிலைப் பெரிதாகக் கட்ட வேண்டாம். கடவுளை மனதில் இருத்தி வழிபடுங்கள்” என்பார்”

“அவர் ஒரு நாள் பட்டணத்திற்குச் சென்ற போது ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டை வாங்கி வந்தார். அதற்கு முதற்பரிசாக பத்து இலட்சம் ரூபா கிடைத்தது. அப்பணத்தில் அவர் பெரியதொரு தென்னந் தோப்பை வாங்கினார். அவரின் நண்பன் தணிகாசலம். அவன் தினமும் கோயிலுக்குச் செல்வான். தான தர்மங்கள் செய்வான். நலிந்தவர்களுக்கு உதவுவான். ஊரில் உள்ள வறிய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லா விட்டால்,  அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுத்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவான். இதைக் கண்ட ஏகாம்பரம் அவனை ஏசுவார்;” உழைப்பதற்குச் சோம்பற்படுவோர் தான் கஷ்டப்படுகிறார்கள். உழைக்காது இருந்து அவர்கள் உன் போன்ற

அறிவில்லாதவர்களை ஏமாற்றித் தமது கருமங்களைச் செய்கிறார்கள். நீ முழு விசரன். உனது பிள்ளைகளுக்கு நல்ல உணவில்லை, ஆடம்பரமான உடைகள் இல்லை. அணிகலன்கள் இல்லை. அவற்றை வாங்கிக் கொடுப்பதை விட்டு விட்டு ஊரவர்களுக்கு உழைத்துக் கொடுக்கிறாய். உன்னைப் போன்ற பைத்தியங்கள் இருக்கும்வரை சோம்பேறிகள் திருந்த மாட்டார்கள்" என்பார்"

"தணிகாசலம் ஏகாம்பரம் அப்படிச் சொல்லும் வேளைகளில் சினப்பாரே தவிரக் கதைக்க மாட்டார். ஒரு நாள் ஏகாம்பரத்தின் பேச்சைப் பொறுக்க முடியாது சொன்னார் ; "ஏகாம்பரம், உலகில் பாவம், புண்ணியம் என்று இரண்டுண்டு, முற்பிறப்பில் புண்ணியம் செய்தவன் இப்பிறப்பில் வசதியாக வாழ்கிறான். அவன் அடுத்த பிறப்பிலும் வசதியாக வாழ வேண்டும் என்று கருதினால் அவன் வாழும் போது புண்ணியம் செய்தல் வேண்டும். நீ முற்பிறப்பில் செய்த புண்ணிய பலனை அனுபவிக்கிறாய். நான் முற்பிறப்பில் செய்த பாவத்தை அனுபவிக்கிறேன். அடுத்த பிறப்பிலாவது வசதியாக வாழ வேண்டும் என்று நினைத்து இப்பொழுது புண்ணியஞ் செய்கிறேன். நீ அதிஷ்ட இலாபச் சீட்டின் மூலம் கிடைத்த பணத்திற்குச் சிவராசாவின் தென்னந் தோட்டத்தை வாங்கினாய். நீ பசளை போடவில்லை. சிவராசா முன்பு போட்ட பசளையின் காரணமாகத் தென்னை மரங்கள் நன்றாகக் காய்க்கின்றன. அது போன்றது தான் வாழ்க்கை" என்றார் தணிகாசலம். ஆகவே அன்பானவர்களே,

ஒருவன் இப்பிறவியில் புண்ணியஞ் செய்யாது பெரு வாழ்வு வாழ்கிறானென்றால் அது அவன் முன்பு செய்த புண்ணிய பலனால் வந்தது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வழங்கார், வலியிலார், வாய்ச் சொல்லும் பொல்லார்***
***உழந்தொருவர்க்கு உற்றால் உதவலும் இல்லார்***
***இழந்ததில் செல்வம் பெறுதலும் இன்னார்***
***பழஞ்செய்போர் பின்று விடல்***

முன்னிட்ட பசளை பிற்காலத்தில் பயன்தருவது போல, ஒருவரின் முன் ஜென்மப் புண்ணியப் பயனே இப்பிறப்பில் அவர் வசதியாக வாழக் காரணமாகும் **"பழஞ்செய் போர் பின்று விடல்**" என்பது பழமொழி.

12 "அன்பானவர்களே, இரப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும். அது போலக் கொடுப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும். எல்லோரும் கொடுக்க மாட்டார்கள். கரும்பின் சக்கையை, வைக்கோலை எப்படித்தான் கசக்கிக் கசக்கிப் பிழிந்தாலும் ஒரு துளி நீரைக் கூடப் பெற முடியாது. கேட்கத் தக்கவர்கள் யார் என்று அறிந்தே பிச்சை கேட்க வேண்டும். மறைக்காமல் கொடுக்கும் உள்ளமும், இரக்க உணர்ச்சியும் உள்ளவர்களிடமல்லாது மற்றவர்களிடம் மறந்தும் கூட இரக்கக் கூடாது. குறை சொல்லாமலும், இழித்துப் பேசாமலும் கொடுப்பவரைக் கேட்பது பாவம் அல்ல. கேட்டவுடன் கொடுக்கும் இரக்கமுள்ளவர்களிடம் கூட இரப்பது பாவம். இரப்பவன், மரத்தைப் போல உணர்ச்சியற்றவராக

இருக்கும் வன்மையான உள்ளம் கொண்டவரிடம் யாசித்தால் எதுவும் தரமாட்டார். அப்படி அவரிடம் கேட்பது, இரந்து உண்ணும் சமண முனிவர்களிடம் கேட்பதைப் போன்றதாகும். சமண முனிவர்கள் தேவையேற்படும் போது மட்டும் தேவையானதையே இரப்பார்கள். அதைத் தவிர அவர்களிடம் ஒரு போதும் எவையும் இருப்பதில்லை. அதனால் அவர்களை இரப்பவர் யாரும் இல்லை.”

“முல்லை வனத்திலே நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது பெரும் தனவந்தன். வட்டிக்குப் பணம் கொடுத்துப் பணத்தைத் தேடி வைத்திருந்தது. அத்துடன் விவசாயம் செய்து ஏராளமான தானியங்களைச் சேமித்து வைத்திருந்தது. அது உண்ணும் போது தனது வேலையாட்களைப் படலையடியில் காவல் வைத்து விட்டே உண்ணும். அப்படி அது உண்ணும் போது யாராவது வந்தால் வேலைக்காரர்கள் நரி வெளியூருக்குச் சென்று விட்டதாகச் சொல்வார்கள். வட்டிக்குப் பணம் பெறுவோர்கள் வந்தால் அவர்களை நரியின் வீட்டுப் படலையோரத்தில் நிற்கும் வேப்ப மர நிழலில் இருக்கச் சொல்வார்கள். நரி ஆறுதலாக உணவைச் சுவைத்து உண்டு விட்டுப் படலையடிக்கு வந்து வேப்பமர நிழலில் உட்கார்ந்து வந்தவரை விசாரிக்கும். அவர் பணம் பெற வந்தால், அது உடனே கொடாது ; “ இப்பபோ என்னிடம் பணம் இல்லை. இரண்டு தினங்கள் கழித்து வா பார்ப்போம்” என்று கூறும். வந்தவருக்கு நரியின் குணம் தெரியும் ; “வட்டி கூடுதலாகத் தருகிறேன்” என்று சொல்ல நரி கூடுதலான வட்டியுடன் முதலில் முதல் மாத வட்டிக்காசையும் கழித்துக் கொண்டு கொடுக்கும்.

நரியின் வீட்டுக்கு யாரும் இரக்கப் போவதில்லை. உற்றார், உறவினர் எவரும் கொண்டாட்டங்களுக்குக் கூடச் சென்றதில்லை”

“நரியின் சகோதரியின் கணவன் ஒரு முறை விபத்துக்குள்ளாகி விட்டது. அது உழைக்கும் போது சேமித்து வைப்பதில்லை. அதனால் நரியின் வீட்டுக்கு அதன் சகோதரியும் கணவனும் வந்தனர். அப்போது நரி அங்கே இருந்தது. சகோதரியும் கணவனும் தன்னிடம் இரப்பதற்காக வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்ட நரி சொன்னது; “உழைக்கும் போது பிற்காலத்தில் இப்படியான சம்பவங்கள் வருமென்று நினைத்துச் சேமிக்க வேண்டும். தன் சொந்த உழைப்பால் கிடைத்த தெளிந்த நீர் போன்ற கூழானாலும், அதை உண்பதே உழைப்பாளியின் இலட்சியமாக இருத்தல் வேண்டும் வறுமையைப் போக்கப் பிச்சை எடுப்பது தான் ஒரே வழி என்றெண்ணி உழைக்காமல், யார் தேடி வைத்திருக்கிறார்கள் அவர்களிடம் சென்று அவர்களை ஏமாற்றி வாழலாமென்று உலகில் உள்ள எல்லோரும் நினைத்தால் உலகில் உழைப்பது யார்? பசுவிற்கு நீர் தேவையென்று கூட மற்றவர்களிடம் நீர் கேட்பதே பாவம். இதை உணராத நீங்கள் இப்போது இங்கே வந்திருக்கிறீர்கள். உங்களைப் போல நானும் உழைக்கும் காலங்களில் சேமிக்காது வாழ்ந்திருந்தால் இப்போ நானும் உங்ளைப் போலப் பிச்சை எடுக்கத் திரிதல் வேண்டும்” என்றது நரி”

“சகோதரிக்கும் கணவனுக்கும் நரியின் பேச்சு அவமானத்தைக் கொடுத்தது. அதனால் சகோதரி சொன்னது;

“எனது பிள்ளைகள் எம்மைக் காப்பாற்றுவர். நாம் உங்களது சுகத்தை விசாரித்து விட்டுப் போவோம் என்று வந்தோம்” என்று கூறி விட்டுப் புறப்பட்டன. ஆகவே அன்பானவர்களே, வாழ்வில் இரக்கக் கூடாது. தவறுதலாகக் கூட இரப்பதனால் இரப்பவரது தன்மையை அறிந்தபின் இரவுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மரம்போல் வலிய மனத்தாரை முன்னின்று***
***இரந்தார் பெறுவதொன் றில்லை – குரங்கூசல்***
***வள்ளியி னாடும் மலை நாட ! அஃதன்றோ***
***பள்ளியுள் ஐயம் புகல்***

சமண முனிவர்கள் இரந்துண்பவர்கள். வன்னெஞ்சனிடம் இரப்பது இரந்துண்ணும் சமண முனிவர்களிடம் இரப்பதைப் போன்றதாகும். **‘பள்ளியுள் ஐயம் புகல்”** என்பது பழமொழி.

13 “அன்பானவர்களே, பகை ஒரு பொழுதும் நீங்காது. மழை பெய்ததும் நிலத்தில் மறைந்திருக்கும் புற்களின் கிழங்குகள் முளை கொள்வதைப் போல, மனதுள்ப் புதைந்து மறைந்திருக்கும் பகையானது சந்தர்ப்ப சூழ்நிலைகள் வந்த போது வெளிப்பட்டுத் தாக்கும். பகை என்ற உயிரைக் கொல்லும் பண்பற்ற தீய செயலை ஒருவர் விளையாட்டாகக் கருதக் கூடாது. தான் தனியே இருந்து கொண்டு பலரையும் பகைத்துக் கொள்பவன் பைத்தியக்காரனை விட மோசமானவனாவான். சிலர் பகைவநன நண்பனாகக் கொண்டால் பகை நீங்கும் என்று நினைப்பர். பகைவனை

நண்பனாகப் பெருந்தன்மையுள்ள சான்றோரே ஏற்பர். சிறுமைக்குணம் உள்ள தீயவர்கள் பகைவரைத் தந்திரமாக நட்பாக்கிக் காலம் வரும் போது தமது பகையைத் தீர்த்துக் கொள்வார்கள். வாளைப் போலக் கண்ணுக்குத் தெரிந்த பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் நண்பரைப் போல உடனிருந்து வெளிப்படையாய்த் தெரியாமல் நடிக்கும் பகைவர்களுக்கு அஞ்சியேயாக வேண்டும். போத்தலும் அதன் மூடியும் போல வெளியே பார்ப்பதற்கு வேற்றுமை தெரியாமல் சேர்ந்திருப்பது போல, உட்பகை உள்ளவர்கள் நண்பர்கள் போலத் தோன்றினாலும் உள்ளத்தால் ஒத்திருக்க மாட்டார்கள் . எள்ளின் பிள வளவு தன்னும் உட்பகை இருந்தாலும் அது அவனது குடியை அழித்து விடும். ஆகையால் பகைவர்கள் ஒரு போதும் நட்பினராக மாட்டார். அதனால் அவரை விரும்பிச் சென்று நண்பராக எண்ணிப் பழகுதல் கூடாது."

"வேதநாயகத்திற்கும் ஆறு முகத்திற்கும் வெகுநாட்களாகக் காணிப் பிரச்சினையில் பகை இருந்தது. இருவரும் இரத்த உறவினர்கள். வேதநாயகம் அடிக்கடி காணி வழக்குச் சம்பந்தமாக நீதிமன்றம் சென்று வந்தார். அது அவருக்கு மன உளைச்சலையும் பணச்செலவையும் கொடுத்தது. அதனால் பிரச்சினைக்குரிய காணியை அவர் ஆறுமுகத்திற்கு விலைக்குக் கொடுத்து விட்டார். அதனால் மகிழ்ந்த ஆறுமுகம் வேதநாயகத்துடன் நட்புப் பூண்டார். இருவரும் நண்பர்களாயினர். அதன் பின் இருவரது வீட்டில் நடைபெறும் விசேடங்களுக்குக் குடும்பமாகச் சென்று வந்தனர்.

அதனால் முன்பு நடந்த பிரச்சினைகளை ஆறுமுகம் மறந்து விட்டார். ஆறுமுகத்தின் மகன் வேதநாயகததின் மகளைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். ஆறுமுகத்திற்கு ஒரே ஒரு மகள். ஆறுமுகம் பெரும் வசதிகள் கொண்டவரல்ல. ஆறுமுகத்தின் மகள் மீனாம்பாளுக்குச் செவ்வாய் தோஷம் இருந்தது. அதனால் பேசப்படும் திருமணங்கள் சாதகப் பொருத்தமின்மையால் குழம்பின. சாதகம் பொருந்திய சம்பந்தங்கள் சீதனப் பிரச்சினையால் குழம்பின. இது ஆறுமுகத்திற்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. மீனாம்பாளுக்கு முப்பத்தி மூன்று வயது. அதனால் திருமணம் இனி நடைபெறாது என ஆறுமுகம் கலங்கினார்."

"திடீரென்று அயலூரில் உள்ள பெரும் வணிகனின் மகனின் சாதகம் மீனாம்பாளின் சாதகத்துடன் பொருந்தியது. அந்த வர்த்தகன் சீதனம் எதுவுமில்லாமல் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்பினான். அந்த வர்த்தகன் வேத நாயகத்தின் நண்பன் என்று யாருக்கும் தெரியாது. வேதநாயகத்தின் மனதில் இருந்த உட்பகை வளர்ந்து மலையாகிச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது. அந்த வர்த்தகனின் வீட்டுக்குச் சென்ற வேதநாயகம் சொன்னார் ; "நண்பா, எனது ஊரில் உனது மகனுக்குத் திருமணம் பேசுகிறாய். உயிர் நண்பனான என்னைக் கேளாமல் விட்டு விட்டாய். நான் உனது நண்பன். அதனால் சொல்கிறேன். மீனாம்பாள் முன்பு ஒருவனைக் காதலித்து அவனுடன் சென்று வாழ்ந்தவள். பெற்றோர் நாலைந்து தினங்களின் பின் அவர்களைப் பிரித்தனர். இதைத்

தெரியாமல் உறவு வைத்துள்ளாய். இதைப் பற்றி நான் சொன்னதாகச் சொல்லாதே” என்றார். அந்த வர்த்தகன் அதை நம்பி விட்டான். அதனால் திருமணம் தடைப்பட்டது. திருமணம் தடைப்பட்டதால் வேத நாயகத்தின் பகை தீர்ந்தது. அதனால் அவர் பெரும் மகிழ்ச்சியடைந்தார். ஆகவே அன்பானவர்களே, பகை கொண்டவன் பல காலம் சென்ற பின்பும் தன் பகையைத் தீர்த்துக் கொள்வான் என்பதை மறவாதீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தழங்கு குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்***
***கிழங்குடைய வெல்லாம் முறைக்குமோ ராற்றால்***
***விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா***
***பழம்பகை நட்பாதல் இல்.***

பகைவர் நட்பின் மூலம் தமது பகைமையைத் தீர்த்துக் கொள்ள முற்படுவர் ; **‘பழம் பகை நட்பாதல் இல்**” என்பது பழமொழி.

14 “அன்பானவர்களே, ஒருவர் மிகவும் நுணுக்கமாக ஆராயாது எவரையும் நம்பி இரகசியங்களைக் கூறுதலாகாது. அப்படி ஆராயாமல் சொல்வது தான் சாவதற்கே காரணமான நஞ்சை உண்பது போன்றதாகும். ஒருவனது குணத்தையும், அவனது குடிப்பிறப்பையும், அவனிடமுள்ள குறை, நிறைகளையும், அவனைச் சேர்ந்தவர்களின் இயல்புகளையும் அறிந்த பின்பே இரகசியமான தகவல்களை அவனுக்குச் சொல்லலாமா எனத் தீர்மானித்தல் வேண்டும். உயர்ந்த குடியிற் பிறந்து, தனக்கு

வருகின்ற பழிக்கு அஞ்சுபவனை நம்பி எதையும் கூறலாம். ஓர் இடத்தில் நல்ல உறவினர்கள் கூடியிருக்கும் போது, அவ்விடத்தில் மனதின்கண் மாண்பல்லாத ஒருவர் இருந்தால், அவரின் முன் இரகசியமான செய்திகளைப் பேசக்கூடாது. தவறிப் பேசினால், அங்கு பேசப்பட்டதெல்லாம் பறையிடத்தே குறுந்தடியிட்டு அடித்து ஊர் முழுவதும் கேட்கச் செய்தது போல எங்கும் பரப்பப்பட்டு விடும்"

"முருகவனத்தின் அரசனான சிங்கத்திற்கு வேல்வனத்தின் இளவரசி மீது காதல் இருந்தது. வேல் வனத்தின் இளவரசியை அது வேட்டையாடச் சென்ற போது கண்டு காதலுற்றது. முருகவனம் செழிப்பு மிக்கது. வேல் வனம் பாலை நிலம். அதனால் வேல் வனத்தின் அரசன் பெருமகிழ்வுடன் முருக வனத்தரசனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தான். வேல் வனம் பாலை நில மாதலால் திருமணம் முடிந்த பின்பு வேல் வனத்தில் வாழும் மிருகங்கள் முருகவனத்திற்கு வந்துவிடுமென்று ஏனைய மிருகங்கள் அஞ்சின. வேல் வனத்தின் மிருகங்கள் வந்தால் உணவுப் பற்றாக்குறையும் குடியிருப்புப் பிரச்சினைகளும் வரும் என்று யானை நினைத்தது. அதையே ஏனைய மிருகங்களும் நினைத்தன. அது பற்றிக் கலந்துரையாட அவை யானையின் இருப்பிடத்தில் கூடின. மிருகங்களெல்லாம் குசுகுசுத்துப் பேசியபடி செல்வதைக் கண்ட நரிக்குக் காட்டில் ஏதோ பிரச்சினை வரப்போகிறது என்ற எண்ணம் தோன்றியது. அதனால் அது மிருகங்களின் பின்னால் வந்தது. மிருகங்கள் யாவும் யானையின் தலைமையில் கூடின. யானை மிருகங்களோடு சேர்ந்து நரி இருப்பதைக் கண்டது. நரி சிங்கத்தின்

எடுபிடி. இல்லாத பொல்லாதவற்றைச் சிங்கத்துக்குக் கூறித் தான் நன்மைபெறும். இது எல்லா மிருகங்களுக்கும் தெரியும். ஆகையால் யானை சொன்னது ; “அன்பானவர்களே, எமது அரசருக்கும் வேல்வன இளவரசிக்கும் அடுத்த வாரம் மிகவும் கோலாகலமாகத் திருமணம் நடைபெறவுள்ளது. எமது அரசருக்கு நாம் பெரும் மரியாதை செய்தல் வேண்டும். திருமணம் முடித்து மணமக்கள் எமது வனத்திற்கு வரும் போது எமது கலைஞர்கள் வேல் வனத்தின் எல்லையில் இருந்து பெரும் வரவேற்புடன் அழைத்து வர வேண்டும்”. என்று யானை கூறிக்கொண்டிருக்கும் போது நரியைக் காணாத எருமை பலமாகக் கத்தி விட்டு எதையோ சொல்ல வாயுன்னியது. உடனே குதிரை தனது காலால் உதைத்து நரியைக் காட்டியது. நரியைக் கண்ட எருமை நிலைமையை உணர்ந்து கொண்டது”

“குரங்குகள் மேளமடிக்க வேண்டும். மயில்கள் நடனமாடுதல் வேண்டும். குயில்கள் பாட்டுப் பாடுதல் வேண்டும். கழுதைகள் நிலபாவாடை விரித்தல் வேண்டும்” என்று யானை சொல்லிக் கொண்டிருக்கும் போது அதைச் சிங்கத்திடம் சொல்ல நரி புறப்பட்டது. அது சென்ற பின்பு யானைசொன்னது ; “நரியிருக்கும் போது நாம் ஏதாவது சொன்னால் அது உடனே சிங்கத்திற்குத் தெரிவித்து விடும். அதனால் தான் நான் அப்படிப் பேசினேன். இனி நீங்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்” என்றது”

“அரசர் யாரையும் திருமணம் செய்யட்டும். ஆனால் எமது பிரதேசத்துக்குள் வேல் வனத்தில் வாழும் மிருகங்கள் வரக்கூடாது. அரசரின் உறவினர்கள் வேண்டுமானால் அரண்மனைக்கு விருந்தாளிகளாக வந்து போகட்டும்” என்றது குதிரை”

“அதை யானை ஏற்றுக் கொண்டது. யானை ஏற்றமையால் ஏனைய மிருகங்களும் ஏற்றுக் கொண்டன. அரசரின் உறவினர் அரண்மனையில் தங்கலாம். வனத்துள்த் தங்கினால் நடவடிக்கை எடுப்போம்” என்றது யானை” ஆகவே அன்பானவர்களே, இரகசியங்களைக் காப்பாற்ற முடியாதவர்கள் இருக்குமிடங்களில் எதையும் பேசாதீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வெள்ளமாண் பெல்லாம் உடைய தமரிருப்ப***
***உள்ளமாண் பில்லா ஒருவரைத் தெள்ளி***
***மறைக்கண் பிரித்தவரை மாற்றா தொழிதல்***
***பறைக்கண் கடிப்பிடு மாறு.***

குடும்ப இரகசியங்கள் பேசப்படும் இடத்தில், உள்ளத்தில் செப்பமில்லாதவர்கள் இருந்தால், அவரைத் தந்திரமாக அனுப்பி விட்டு இரகசியங்களைப் பேசுதல் வேண்டும். “**பறைக் கண் கடிப்பிடுமாறு**” என்பது பழமொழி.

## 15

“அன்பானவர்களே, உங்களோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத் துன்பமேற்பட்டால் நீங்கள் கட்டாயம் அவருக்கு உதவுதல் வேண்டும். உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அவருக்கு நேர்ந்த துன்பத்தை எம்மாற் போக்க முடியுமா என்று சிந்தித்த பின்பே அவருக்கு வாக்குறுதி கொடுத்தல் வேண்டும். தன்னிடம் உள்ள பொருளின் அளவு, தனது வலிமை, தனது குடும்பத்தாருடைய தன்மை, தனக்கு வேண்டியவருக்கு உண்டான துன்பத்தின் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்த பின்பே அவருக்கு உதவுவதாக ஒப்புக் கொள்ளல் வேண்டும். அதை விட்டு விட்டு நெருங்கிப் பழகும் உறவு முறையாலேயோ அல்லது அவர் குறை நினைத்து விடுவார் என்பதற்காகவோ வெறும் வார்த்தைகளால் உதவிகள் செய்வதாகக் கூறக்கூடாது. அவ்வாறு சொல்வது, பனி பெய்து குளம் நிரம்புவதைப் போன்றதாகும். தன்னால் எதைச் செய்ய முடியும் என்பதையும், எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் தெரியாதவர்கள் மற்றவர்களுக்கு உதவ நினைத்து வாய்ச் சொற்களால் உறுதியளித்தல் கூடாது. தன்னுடைய வலிமையைப் புரியாதவன், தன்னைப் புரியாதவனாவான்.”

“கருணாகரனுக்கு ஒரே ஒரு மகள். அவர் அவளை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார். விவசாயியான அவர் தனது விவசாய நிலத்திற்கு அருகில் இருந்த நிலம் விற்பனைக்கு வந்ததால் பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து அதை வாங்கினார். அந்த நிலத்தை வாங்கிய சில நாட்களுள் அவரது

மகளுக்குத் திருமணம் பேசி வந்தது. அந்த நிலத்தை வாங்குவதற்காக அவர் பெருந்தொகைப் பணத்தைக் கடனாகவும் பெற்றிருந்தார். மாப்பிள்ளை வெளி நாடொன்றில் பெரும் உத்தியோகத்தில் இருந்தான். மாப்பிள்ளையின் தந்தையார் தனது மகனின் திருமணத்திற்காக நன்கொடையாகப் பெருந்தொகைப் பணம் கேட்டார். நல்ல இடம், அதைச் செய்யுங்கள் என்று இனத்தவர்களும் நண்பர்களும் வற்புறுத்தினர். கருணாகரனுக்கு விருப்பம் இருந்த போதும் பணமில்லாததால் அவர் தயங்கினார். அவர்கள் கேட்ட பணத்திலும் பார்க்கப் பெறுமதி மிக்க தனது விவசாய நிலங்களைத் தருவதாகக் கூறினார். அதை மாப்பிள்ளையின் தந்தை ஏற்கவில்லை. அதனால் அந்தத் திருமணத்தைக் கைவிட விரும்பினார்."

"அவரது நண்பன் குலசிங்கம். அவன் மாப்பிள்ளையின் இனத்தவன். அவன் வந்து சொன்னான்; "கருணாகரா, எனக்கு மாப்பிள்ளையைச் சிறுவயதிலிருந்தே தெரியும். நல்ல பையன். இப்போ சம்மதம் சொல். பிறகு மாறிச் செய்யலாம். நான் காணியை விற்பதற்கு ஒழுங்கு செய்கிறேன். என்னிடமும் பணம் இருக்கிறது தருகிறேன்" என்றான். அதை நம்பிக் கருணாகரன் திருமணத்திற்குச் சம்மதித்தார்."

"நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. குலசிங்கம் கருணாகரனைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தான். ஒரு நாள் குல சிங்கத்தைத் தேடிக் கருணாகரன் குலசிங்கத்தின் வீட்டுக்குச்

சென்றார். அப்போது குலசிங்கம் வீட்டில் இருக்க வில்லை. அவனது மனைவி சொன்னாள் ; “ஐயா, இவருடன் நெடுங்காலமாகப் பழகுகிறீர்கள். இவரின் குணங்கள் உங்களுக்குத் தெரியாதா...? இவர் வாய்ச்சொல்லில் தான் வீரர். இருக்கிறத்தைப் பறக்கிறதென்பார், இல்லாததை உண்டென்பார், எதையும் ஆராயாது, அதன் தாக்கத்தை உணராது உற்சாகப்படுத்துவார். இவரது வார்த்தைகளை நம்பியவரகள் பல துன்பங்களுக் காளாகியிருக்கிறார்கள்” என்றார்”

“கருணாகரன் மிகுந்த துயரத்தோடு வந்தார். திருமணத்தை மறுத்திருந்தால் இப்போ இவ்வாறு துன்பப்பட வேண்டியதில்லை” என்று நினைத்தவாறு வந்தார். வழியில் அவரது இனத்தவரான துரைசிங்கம் வந்து கொண்டிருந்தான். அவன் கருணாகரனைக் கண்டதும் ; “திருமணத்திற்கு இன்னும் நாலைந்த தினங்களே உள்ளன. உனது முகத்தைப் பார்த்தால் ஏதோ பெரியதொன்றை இழந்தது போல இருக்கிறது. என்ன நடந்தது?” என்று கேட்டான்”

“கருணாகரன் துயரத்துடன் குலசிங்கத்தைப் பற்றிச் சொன்னார்; “கருணாகரா, நீ குலசிங்கத்தைப் பற்றி அறியவில்லையா..? அவன் நல்லவன். கொடுத்துதவ விரும்புகின்றவன். ஆனால் அவனது மனைவி எதற்கும் விடமாட்டாள். அது ஊரவைக்குத் தெரியும். அவனைப் போய் நீ நம்பியிருக்கிறாய்” என்றான்”

“கருணாகரன் அதிர்ந்து போனார். அவரால் பேச முடியவில்லை ; “நல்லவர்களை நம்ப வேண்டும். நான் உனக்குத் தேவையான பணத்தைத் தருகிறேன். விவசாய நிலங்களை எனக்குத் தா” என்று கூறிவிட்டுத் துரைசிங்கம் சென்று விட்டார். அன்று மாலை துரைசிங்கம் பணத்தைக் கொண்டு வந்து கருணாகரனிடம் கொடுத்தார். குறிப்பிட்ட தினத்தில் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. திருமணத்திற்கு வந்த குலசிங்கம் சொன்னான் ; “ நான் தான் உனது நிலைமையைப் பற்றித் துரைசிங்கத்திற்குச் சொல்லி ஏற்பாடு செய்தேன்”

“கருணாகரன் எதுவும் பேசவில்லை. ஆகவே அன்பானவர்களே, தன்னுடைய வலிமை என்ன என்பதைச் சரிவர அறியாமல் பிறருக்கு உதவுவதாக வாக்குக் கொடுக்கக் கூடாது. அத்துடன் வாக்களிப்பவனின் தன்மையை ஆராயாமல் அவனை நம்பக் கூடாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்”

***இனியாரை உற்ற இடர்தீர உபாயம்***
***முனியார் செயினும் மொழியால் முடியா***
***துணியால் திரையுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!***
***பனியால் குளநிறைதல் இல்.***

வாய்ச்சொல்லை நம்புவதால் பயனில்லை. பொருளாலும் செயலாலும் உதவுதல் வேண்டும். “**பனியால் குளநிறைதல் இல்”** என்பது பழமொழி.

16 “அன்பானவர்களே, ஒருவன் பனங்காயில் பணிகாரம் செய்துண்ண விரும்பினால் அவன் பனம் விதையை எடுத்துச் சென்று அதை நட்டு அது முளைத்து வளர்த்து காய்த்துக் கனியும் வரை காத்திருப்பதில்லை. அது போல ஒருவனது பெருந் தேவையானது பலகாலம் செல்ல நிறைவேறுவதிலும் பார்க்க சிறிதாக உடனே நிறைவேறுவது தான் சிறந்தது. பசியென்று வருவபவனுக்கு அவன் உற்ற உறவினனாக இருந்தாலும் சரி உடனே வீட்டில் இருப்பதைக் கொடுப்பதே சிறந்தது. அது அவனது பசியை ஆற்றும். அதைவிட்டு விட்டுச் சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வந்து சமைத்துக் கொடுக்கு முன் அவனது உயிர் பிரிந்து விடும். எனவே எதையும் காலமறிந்து செய்வதே சிறப்பானதாகும்”

“வேலாயுதபிள்ளை தனது மகள் தாட்சாயணிக்கு ஒரு பட்டதாரி மாப்பிள்ளையைத் திருமணம் செய்து வைப்பதென்று அவள் பிறந்த போதே முடிவெடுத்தார். இப்போது அவளுக்கு இருபத்து மூன்று வயது. அவர் மிகவும் நல்லவர். ஒழுக்கமாக வாழ்பவர் ; நில புலன்களுக்கு உரிமையானவர் ; ஒரு பட்டதாரி மாப்பிள்ளைக்கு கொடுக்க வேண்டியளவு சீதனப் பணமும். தங்க ஆபரணங்களும் தேடி வைத்திருந்தார். தாட்சாயணிக்கு ஊரில் இருந்தும் வெளியூர்களில் இருந்தும் பல திருமணங்கள் பேசி வந்தன. வேலாயுத பிள்ளை பட்டதாரி மாப்பிள்ளையைத் தவிர வேறு எவரையும் தாட்சாயணிக்குத் திருமணம் செய்வதில்லை என்று

அறுதியிட்டுக் கூறிவிட்டார். அதனால் கல்யாணத் தரகர் அவரின் வீட்டுக்குத் திருமணம் பேசிச் செல்வதில்லை.”

“செல்லையா அவ்வூரில் வாழ்ந்த தனவந்தர். அவரிடம் ஏராளமான விவசாய நிலங்களும், வாகனங்களும் இருந்தன. சீதனமில்லா விட்டாலும் நல்ல தொரு குடும்பப் பெண்ணைத் தனது மகனான நந்தகுமாரனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார். அதற்காக அவர் வேலாயுத பிள்ளையின் வீட்டுக்குச் சென்றார். வேலாயுதபிள்ளை செல்லையாவை அன்புடன் வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினார்.”

“ஐயா, எனது மகன் பயிற்றப்பட்ட ஆசிரியர். தற்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பு படிக்கிறான். அவன் பட்டதாரியாக எப்படியும் மூன்ற வருடங்கள் செல்லும். இப்பொழுதுதே அவனுக்கு வயது முப்பது. என்னிடம் போதிய சொத்து இருக்கிறது. அதனால் அவனுக்குத் திருமணம் செய்து ஒரு பேரப்பிள்ளையைப் பார்க்க விரும்புகிறேன். நல்ல குடும்பத்தில் பிறந்த உத்தமியான உங்கள் மகளை எனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறேன்” என்றார் செல்லையா”

“வேலாயுதபிள்ளை பூரிப்புடன் சிரித்து விட்டுச் சொன்னார் ; “நான் எனது மகளை ஒழுக்கமாக வளர்த்துள்ளேன். அத்துடன். நானும் ஒழுக்கமாக வாழ்கின்றேன். அவளுக்குப் பட்டதாரி

மாப்பிள்ளை ஒருவனைத் திருமணம் செய்வது தான் எனது நோக்கம். தங்கள் மகன் பட்டதாரியான பின் வேண்டுமானால் செய்யலாம்” என்றார்”

‘ஐயா, பனை வளர்த்துக் கள்ளுக் குடிப்பவன் உலகில் யாரும் இல்லை. பெறுமதியான ஒரு பொருளைக் காலங்கடந்து பெறுவதிலும் பார்க்க தினையளவேயான அதே பொருளை உடனே பெறுவது தான் சிறப்பு. எனது மகன் கெட்டிக்காரன். பட்டதாரிகளுக்கான முதலாம் வருடப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டான். இப்பொழுது அவன் பட்டதாரிதான்” என்றார் செல்லையா”

‘வேலாயுதபிள்ளை அதை விரும்பவில்லை. அதனால் செல்லையா இன்னொரு பெண்ணை நந்தகுமாருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அடுத்த வருடம் நந்தகுமாரனுக்கு ஓர் அழகான ஆண்குழந்தை பிறந்தது. இரண்டு வருடங்களின் பின் அவன் பட்டதாரியானான். ஐந்து வருடங்களின் பின் அவனுக்குக் கலாநிதிப்பட்டம் கிடைத்தது. அத்துடன் மூன்று குழந்தைகளும் பிறந்தன.”

“வேலாயுத பிள்ளையின் மகள் தாட்சாயணி திருமணம் செய்யும் போது முப்பத்தைந்து வயது முடிந்து விட்டது. நாற்பத்தொரு வயதான பட்டதாரி ஆசிரியர் ஒருவரை வேலாயுதபிள்ளை தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். நந்தகுமாரன் ஐந்து வருடங்களின் பின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக

நியமிக்கப்பட்டான்” ஆகவே அன்பானவர்களே, பெரியதொரு பொருள் காலங்கடந்து கிடைப்பதிலும் பார்க்கச் சிறிய பொருள் உடனே கிடைப்பது பயன் மிகுந்தது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எனைப்பலவே யாயினும் சேய்த்தாற் பெறலின்***
***தினைத்துணையே யாயினும் அணிகோடல் நன்றே***
***இனக்கலை தேன்கிழிக்கும் மேகல் சூழ் வெற்ப!***
***பனைப்பதித்து உண்ணார் பழம்.***

காலங்கடந்து வரும் பெரும் பயனை விட உடனே கிடைக்கும் சிறு உதவியே சிறந்தது. “**பனைப் பதித்து உண்ணார் பழம்”** என்பது பழமொழி.

**17** “ அன்பானவர்களே, ஒரு செயலின் வலிமையென்பது செய்பவனுடைய மன வலிமையேயாகும். மனம் மாறாமல், செய்யும் தொழிலில் தடைகள் வந்த போதும் மனம் சலியாமல் தொடர்ந்து முயற்சிப் பவன் வெற்றியடைவான். செயலைத் தொடங்கு முன்பே அச்செயலின் தன்மைகளை அறிந்து கொள்பவன், அத்துன்பங்கள் யாவும் செயல்களைச் செய்யும் போது தன்னை வந்து தாக்கிச் செயலைத் தடைப்படுத்து மென்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன் தடைகளையும் தாமதங்களையும் தாங்கி அதை எதிர்த்து முன்னேறிச் சென்று வெற்றியடைவான். செயல்களைச் செய்யு முன் அச்செயலைப் பற்றி அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள

வேண்டும். அப்படித் தெரிந்து கொண்ட பின் செய்யும் செயலில் வெற்றி பெற்றால், அது செய்தவனின் வெற்றியே தவிர செயலை ஏவியவனின் வெற்றியல்ல. பலர் செயலைத் தெரிந்த பலரிடம் செயலைச் செய்வது பற்றி விளக்கங் கேட்பார்கள். ஆனால் செய்யும் போது மனங்கலங்கி காலந்தாழ்த்தி தளராத முயற்சியோடு செய்யமாட்டார்கள். இதுவும் செய்பவனின் பிழையே தவிரச் செய்யச் சொன்னவனின் பிழையல்ல. பனம்பழமானது முற்றிவிட்டால், அது தாய்ப்பனையின் தாளின் மேலே விழுந்து விடும். இதுபோல ஒருவன் ஏவலாற் சென்று செயலைச் செய்தாலும், செயல் வெற்றி பெற்றால், செய்தவனுக்கே புகழும் வருமானமும் உண்டாகும்"

"கஜானனன் சிவன் கோயிலுக்கு வந்து சிவனை வணங்குபவன். சிவன்கோயிற் சுவர்களில் வெளியூரில் இருந்து வந்த ஓவியர் ஒருவர் அழகான சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தார். கஜானனுக்கும் சித்திரம் வரைய வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவன் பட்டதாரி. இன்னும் வேலை கிடைக்கவில்லை. அவன் தன்னை ஓர் அடியவன் என்று ஓவியருக்குச் சொல்லி அவருக்கு உதவிகள் செய்து வந்தான். ஆறு மாதங்கள் அவ் ஓவியர் அங்கு தங்கியிருந்து சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தார். அவருக்கு அவன் சுவைாகச் சமைத்துக் கொடுப்பான். அவர் ஓவியம் தீட்டிய பின் அவரது தூரிகைகளைக் கழுவிக் கொடுப்பான். அவன் ஓவியத்தின் மீது கொண்டுள்ள அக்கறையை அறிந்த ஓவியர் அவனைத் தனது உதவியாளனாக ஏற்றுக் கொண்டார். கஜானனன் மிகவம் அக்கறையுன் அவர் ஏவும்

செயல்களைச் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் அந்த ஓவியர் கோயிலின் வடக்குச் சுவரில் பிரம்மாவும் விஷ்ணுவும் ஒளிப்பிழம்பின் அடி முடி தேடிய கதையைச் சித்திரமாக வரையும் படி கஜானனுக்குப் பணித்தார். பின்பு அதை வரையும் முறைகளைச் சொல்லிக் கொடுத்தார். வர்ணங்கள் கலக்கும் முறைகளையும் சொல்லிக் கொடுத்தார். கஜானனன் சித்திரம் வரைய ஆரம்பித்தான். சில நாட்களில் அவன் சித்திரத்தை அழகாக வரைந்து முடித்தான்"

"அதைக் கண்ட ஓவியர் திகைத்துப் போனார். தான் மேற்குப் பக்கச் சுவரில் முருகன் பிரம்மாவிற்கு பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்டுத் தலையில் குட்டிய கதையில் வரைந்த சிவனையும், பிரம்மாவையம் விடக் கஜானனன் வரைந்த சிவனும் பிரம்மாவும் மிகவும் அழகாக இருந்தனர். புராணங்களிற் கூறப்பட்ட சிவ வடிவம் அப்படியே சுவரில்காட்சி கொடுத்தது. ஓவியரும் கோயில் நிர்வாகத்தினரும் கஜானனைப் பெரிதாகப் பாராட்டினர்"

"அதை விரும்பாத கஜானனன் சொன்னான் ; "ஐயா, எல்லாம் எனது குருவின் கை வண்ணம். அவர் ஏவியபடி தான் நான் சித்திரங்களை வரைந்தேன். இதில் எனது திறமை எதுவும் இல்லை" குரு சிரித்தார் பின்பு சொன்னார் ; "மகனே, இவ்வாறு சொல்வது உனது அடக்கத்தைக் காட்டுகிறது. நான் ஏவியபடி நீ செயலைச் செய்தாலும், நீ வரைந்த ஓவியங்கள் உண்மையில் எனது ஓவியங்களை விட மிகச் சிறப்பாக இருக்கின்றன. செயலைச் செய்பவன் திறமையானவனாக இருந்தாலும் செயலைச் செய்யும்

போது பலவீனனாகி விட்டால் செயலை முடிக்க முடியாது. நீ உனது திறமையால் தான் சித்திரங்களை வரைந்தாய். அதன் புகழ் முழுவதும் உனக்கே" என்றார் குரு. ஆகவே அன்பானவர்களே, திறமையானவர்கள் ஏவினாலும் அதைச் செய்பவன் மனவுறுதி இல்லாதவனாக இருந்தால் செய்யும் செயல் பயனளிக்காது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உவப்ப உடன்படுத்தற் கேய கருமம்***
***அவற்றவற் றாந்துணைய வாகிப் பயத்தால்***
***வினைமுதிரின் செய்தான் மேல் ஏறும் ; பனைமுதிரின்***
***தாய் தாண் மேல் வீழ்ந்து விடும்.***

ஏவலாற் சென்று செயலைச் செய்தாலும் செயல் வெற்றிபெற்றால், அச் செயலைச் செய்தவனே புகழடைவான். எனவே எடுத்த செயலைத் திறமையாக முடித்தலில் ஈடுபடவேண்டும் '**பனை முதிரின் தாய் தாண் மேல் வீழ்ந்து விடும்"** என்பது பழமொழி.

**18** "அன்பானவர்களே, பிறர் அறியக் கூடாத அரிய இரகசியத்தை அறியாமை சிறிதும் இல்லாத சான்றோர்கள் காப்பார்கள். ஆனால் சலன புத்தியடைய சிறியோர் அரிய இரகசியத்தை அறிந்தால் பனையின் உச்சியில் வைத்த பஞ்சுப் பொதி காற்றினால் தள்ளப்பட்டு ஊர்முழுவதும் பரவுவது போலப் பரப்பி விடுவார்கள். ஓர் இரகசியத்தைச் சொல்லு முன், சொன்னால் உண்டாகும் நன்மை, தீமைகளை ஆராய்தல் வேண்டும். சொன்ன பின் நடக்கும் செயல்களையும், அதனால் வரும் பயன்களையும்

அறிந்த பின்பே செல்லுதல் வேண்டும். ஓர் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதவர்களுக்கு அவர்கள் பொன்னைக் கொட்டித் தந்தாலும் சொல்லக் கூடாது. தீயவர்கள் பொருளைக் கொடுத்து அரிய இரகசியங்களை அறிந்து ஊர் முழுவதிலும் பரப்புவார்கள். இது முரசறைந்து செய்திகளை அறிவிப்பதை ஒக்கும். சொற்களின் அர்தத்தைத் தெரிந்து கொள்ளாத மூடர்களுக்கும் இரகசியத்தைச் சொல்லக் கூடாது. தமக்கு இழிவேற்படக்கூடாது என்று எச்சரிக்கையோடு நினைப்பவர்கள், ஆராய்ந்து அறியும் அறிவில்லாதவர்களுக்கு இரகசியத்தைச் சொன்னால் அது சொன்னவருக்கு அவமானத்தையும் பழியையும் உண்டு பண்ணும்"

"அன்று முல்லை வனத்தின் அரசனான சிங்கத்தின் தலைமையில் அரச சபை கூடியது. அன்று அக்காட்டு மிருகங்கள் பல அரச சபைக்கு வந்திருந்தன. முல்லை வனத்திற்கு அருகே உள்ள தில்லை வனத்து விலங்குகள் பலவும் முல்லை வனத்துள் நுழைந்து முல்லை வன மிருகங்களின் குட்டிகைளைப் பிடித்துக் கொன்று உண்டு வந்தன. தில்லை வனம் வளம் குறைந்த காடு. அங்கே பருவ மழை ஒழுங்காககப் பெய்வதில்லை. பருவ மழை பெய்யும் காலங்களிலும் தில்லை வன விலங்குகள் கூட்டம் கூட்டமாக முல்லை வனத்துள் நுழைந்து அட்டகாசம் செய்யும். முல்லைவன அரசனான சிங்கம் நீதியான முறையில் முல்லை வனத்தை ஆண்டு வந்தது. அது யாராக இருந்தாலும் அவர்களின் குற்றத்தை ஆராய்ந்து யாருக்கும் இரக்கம் காட்டாமல் நடுவு நிலையில் நின்று தக்க தண்டனை அளிக்கும். வனவிலங்குகள்

அனைத்தும் தனது செங்கோலை நம்பியே வாழ்கின்றன என்று தெரிந்த சிங்கம் தனது வனவிலங்குகளைத் தனது கண்களைப் போலப் பேணிப் பாதுகாத்து வந்தது.

“விலங்குகள் யாவும் தமது குறைநிறைகளைக் கூறின; “அரசே, தில்லை வன யானைகள் எமது வனத்திற்குள் புகுந்து எமது பயிர்களையெல்லாம் அழிக்கின்றன” என்றது குதிரை”

“தில்லை வனத்தில் வாழும் நரிகள் எமது குட்டிகளைப் பிடித்துக் கொன்று உண்கின்றன” என்றது பன்றி”.

“காட்டு மரங்களைக் குரங்குள் அழிக்கின்றன” என்றது யானை”

“எப்டியும் அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று எண்ணிய சிங்கம் சபையைப் பார்த்தது. அதில் இருந்தவர்கள் மத்தியில் முக்கியமன இரகசியங்கள் பேசக்கூடாது என்று நினைத்தது ; “ அன்பான எனது சகோதரர்களே, வறியவர்களுக்கு உதவுவது தான் பொருள் உள்ளவர்களின் கடமை. தில்லை வனம் பாலை நிலம். மழை பெய்யா விட்டால் அங்குள்ள மிருகங்களுக்கு நீர் கூடக் கிடைக்க மாட்டாது...” என்று சிங்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போது யானை குறுக்கிட்டுச் சொன்னது ; “அரசர் சொல்வதில் நியாயம் இருக்கிறது. தில்லை வன விலங்குகளுக்கு உணவும் நீரும் கொடுப்பது பிரச்சினை இல்லை. ஆனால் அவை

எமது சகோதர விலங்குகளின் குட்டிகளைப் பிடித்துண்பது எந்த வகையில் நியாயம்” என்றது. அதைக் கேட்டுப் பன்றியும் முயல்களும் விம்மி விம்மி அழுதன”.

“சிங்கம் சொன்னது ; “ நான் தில்லை வன அரசனுக்கு அப்படிச் செய்ய வேண்டாமென்று தூதுவர்கள் மூலம் அறிவிக்கிறேன்” அதைக் கேட்ட மிருகங்கள் மனவருத்தத்துடன் சென்றன. நரி மட்டும் சந்தோசத்துடன் எழுந்து தில்லை வனத்து அரசனுக்கு அதைச் சொல்லச் சென்றது. அப்படிச் சொல்வதன் மூலம் நரி பணம் சம்பாதித்து வந்தது”

“அன்றிரவு முல்லை வன அரசனான சிங்கத்தின் தலைமையிற் சென்ற மிருகங்கள் தில்லைவன அரசனைச் சிறைப்பிடித்தன. அப்போது நரியும் அகப்பட்டுக் கொண்டது. மறு நாள் நரியை ஊர்வலமாக அழைத்து வந்த சிங்கம் அதைப் பாதாளச் சிறையில் அடைத்தது”

“அரசர், நரி சபையில் இருந்தமையால் தான் அப்படிப் பேசினார். அதை நான் தவறாக எடுத்து விட்டேன்” என்று வருந்தியது முயல்”

“நானும் தான்” என்றது பன்றி. சிறுமையான புத்தியுள்ளவர்களுக்கு இரகசியங்களைச் சொல்லக் கூடாது. சொன்னால் அவர்கள் பனையின் உச்சியில் வைத்த பஞ்சுப் பொதியைப் போல ஊர்முழுவதும் பரப்பி விடுவார்கள். எமது அரசர்

புத்திக் கூர்மையுள்ள தந்திரசாலி. அதனால் தான் மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு இன்னொன்றைச் சொன்னார். அதை நம்பிய நரி, அதைத் தில்லைவன அரசனுக்குச் சொன்னது. அதனால் தில்லைவன அரசன் மகிழ்ந்து நிம்மதியாக இருந்தான். என்றது குதிரை. ஆகவே அன்பானவர்களே, நீங்கள் இரகசியம் பேசும் போது சிறுமையான புத்தியுள்ளவர்கள் அருகில் இருக்கிறார்களா என்று கவனித்து விட்டுப் பேசுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*பெருமலை நாடா! பிறரறிய லாகா*
*அருமறையை ஆன்றாரே காப்பார் - அருமறையை*
*நெஞ்சிற் சிறியார்க்கு உரைத்தல் பனையின்மேல்*
*பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று.*

அரிதான ஓர் இரகசியத்தை அறிவுடையவர்களான சான்றோர் வெளியிட மாட்டார்கள். ஆனால் சிறுமை மனம் படைத்த கீழோர் ஊர் முழுவதும் பரப்புவார்கள். **"பனையின் மேல் பஞ்சி வைத்தெஃகி விட்டற்று"** என்பது பழமொழி.

**19** "அன்பானவர்களே, உறுப்புக்கள் அனைத்தும் கொண்ட படையே சிறப்பான படையாகும். ஓர் அரசன் படைப் பலத்தை எப்பொழுதும் பெருக்கி வைத்திருத்தல் வேண்டும். படைப்பலமில்லாத அரசன் வேறு திறமைகள் பலவிருந்தாலும் அவன் போர் வரும் போது பெரும் தோல்வியையே அடைவான். போரில் எதிர்பாராத வகையால் போர் வீரர்களின் வல்லமை

குன்றலாம். அப்பொழுது படை வீரர் அதிகமாக இருப்பனின் கையே மேலோங்கும். திறமைகள் பல விருந்தும் படைப்பலம் குன்றிய அரசன் பல அரசர்கள் ஒன்று சேர்ந்து வரும் போது பலவீனமடைவான். படையின் ஒரு பகுதியைப் பகைவர் ஒன்று கூடி அழிக்கும் போது படைப் பெருக்கமுள்ள அரசன் அழியும் படைக்குப் பதிலாகப் புதிது புதிதாகப் படையினரைப் போரில் ஈடுபடுத்தல் வேண்டும். பெரும்படை வீரர்களை அரசன் வைத்திருந்தாலும் அவை வீரமுள்ளவையாகவும், ஆயுதப் பற்றாக் குறை இல்லாதவையாகவும் இருந்தால் தான் எதிரிகள் ஒன்று கூடி வரும் போது அவர்களைத் தாக்கி அழிக் கமுடியும்"

"போர் செய்யும் வீரமும், பகைவர்களை முன்னேறாமல் தடுக்கும் ஆற்றலும் பெரும் தொகையான வீரர்களைக் கொண்ட படைக்கே உண்டு. போரினால் அழியும் படை வீரருக்குப் பதிலாக அவர்களுக்குச் சமமான வீரர்களைப் போர்க் களத்திற்கு அனுப்பும் வல்லமை பெரும் படை வீரர்களைக் கொண்ட மன்னனுக்கு மட்டுமே உண்டு."

"சிவபுரி ஒரு சிறிய வளம் மிக்க நாடு. சிவபுரி மன்னன் சிங்கார வேலன் பெரும் வீரன். அவன் நாட்டின் வளம் அரச படைகளில் தான் தங்கியுள்ளதென்று நினைத்துப் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்குப் போர்ப்பயிற்சி அளிப்பான். அதனால் நாட்டில் உள்ள அத்தனை பேரும் ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தனர். சிவபுரி வளமான நாடு. அங்கு மாதம்

மும்மாரி பொழிவதால் வருடத்தில் மூன்று போகங்களும் பயிர்ச்செய்கை நடைபெறும். விவசாயிகள் ஏர் உழுவது போல ஆயுதங்களைக் கையாள்வர். சிவபுரியில் பஞ்சம் என்பதே இல்லை"

"சிவபுரிக்கு அயலில் உள்ள நாடு தேவி புரம். அந்நாடு சிவபுரியை விடப் பத்து மடங்கு பெரியது. எனினும் வளங்குறைந்த நாடு. எந்நாளும் அந்நாட்டு மக்கள் பசியுடனும் பட்டினியுடனும் வாழ்ந்து வந்தனர். சிவபுரி அரசனுடன் தேவிபுர அரசன் சிவமாறன் அடிக்கடி பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தான். நீதியான முறையில் சிங்கார வேலன் எடுத்துச் சொன்ன போதும் தேவிபுர மன்னனான சிவமாறன் அதை ஏற்றுக் கொள்ளாது பிரச்சினைகள் கொடுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று தேவிபுரப் படைகள் சிவபுரிக்குள் அத்துமீறி நுழைந்தன. சிவபுரி சிறிய நாடு என்றும் அவர்களிடம் பெரும் படை இருக்கமாட்டாதென்றும் சிவமாறன் நினைத்தே போர் தொடுத்தான். எதிர்பாராத வேளையில் போர் தொடுக்கப்பட்டதால் சிவபுரியின் படைகள் பின் வாங்கின. சிங்காரவேலன் நாட்டு மக்கள் அனைவரையும் போரில் ஈடுபடுத்தினான். படை வெள்ளம் போல புறப்பட்டது. தேவிபுரப் படைகளை விடப் பன்மடங்கு படை வீரர்கள் ஆயுதங்களுடன் போரில் ஈடுபட்டனர். நிலையான வீரர்கள் பலரையும், போர் முறைகளையும் நன்கு அறிந்த படைத்தளபதிகள் பலர் இருந்தமையால் பெரும் எடுப்போடு தாக்குதலில் ஈடுபட்டிருந்த தேவிபுரப் படைகளைச் சிவபுரப் படைகள் தோற்கடித்தன."

“ஐந்து நாட்கள் நடைபெற்ற யுத்தத்தில் தேவிபுர அரசன் சிவமாறன் கைது செய்யப்பட்டான். தேவிபுரம் சிவபுரப் படைகளின் வசமானது. ஆகவே அன்பானவர்களே, நாடு சிறிதாக இருந்தாலும் படை வீரர்கள் அதிகமாக இருந்தால், எந்தப் பெரிய நாட்டு மன்னனையும் வெற்றி கொள்ளலாம்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்***
***தன்னை எனைத்தும் வியவற்க – துன்னினார்***
***நன்மை யிலராய் விடினும், நனிபலராம்***
***பன்மையிற் பாடுடைய தில்.***

பலர் கூடி எதிர்த்து வந்தால் எத்தகைய பெரும் வீரனும் அவர்களை அழிக்கத் தயங்குவான். அத்துடன் அவன் தோல்வியும் அடைவான். ஆதலால் என்றும் வெற்றியடைய வேண்டும் என்று நினைக்கும் அரசன் தனது படையைப் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். **“பன்மையிற் பாடுடைய தில்”** என்பது பழமொழி.

**20** “அன்பானவர்களே, அறிஞர்கள் கூடியுள்ள சபையில் அடக்கமாக இருந்து ஆராய்ந்து பேசுபவனே அறிவுடையவனாவான். பகைவர்கள் நிறைந்த போர்க்களத்திற்கு அஞ்சாமற் செல்லலாம். ஆனால் அறிவு நிரம்பிய அறிஞரின் சபைக்குச் சென்று பேச வேண்டுமானால் அஞ்சியே தீரவேண்டும். வாய் தவறிக் கூட அர்த்தமில்லாத சொற்களைப் பேசக்கூடாது. தான் கற்றவற்றைச்

சபையில் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். அத்துடன் கற்றவர்கள் சபையில் பேசுவதை அவதானமாக இருந்து கேட்டுக் கிரகித்த பின்பே ஆராய்ந்து கருத்துக் கூறுதல் வேண்டும். சபையில் பேச அச்சப்படுபவர்களும், அர்த்தமில்லாது சபையில் பேசுபவர்களும் தீராத அவமானத்திற்குட்படுவர். தான் விரிவாகக் கற்றவற்றை அச்சமில்லாமலும் அர்த்தத்துடனும் பேச முடியாதவன் அவையில் அடக்கமாக இருந்தால் மதிப்பைப் பெறுவான். உயர்ந்த நூல்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்திருந்தாலும் அவையோரை மதித்து, அவர்களின் மனதை வெல்பவன் தான் உண்மையான அறிவாளி. தாம் கற்றறிந்த கருத்துக்களை அவையோர் புரிந்து கொள்ளும் படி தெளிவாகச் சொல்ல முடியாது வீணான வார்த்தைகளைப் பேசுவோரும் அவமானப்படுவர். இது இசையறிவில்லாத ஒருவர், இசையறிவில் வல்லவர்களான பாணர்களின் குடியிருப்பிற் சென்று பாடுவதை ஒக்கும்.”

“ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலன்றும் முல்லை வனத்தில் பௌர்ணமிக் கலைவிழா நடைபெறும். குயில் இனிமையாகப் பாட, மயில் தனது அழகான தோகையை விரித்து ஆடும். யானையின் தலைமையில் பட்டிமன்றம் நடக்கும். குதிரையின் தலைமையில் கவிதை அரங்கு நடக்கும். முயல் எல்லா நூல்களையும் தான் படித்ததாகக் கூறிப்பட்டிமன்றம், கவிதை அரங்கு போன்றன நடைபெறும் போது குதர்க்க வாதம் பேசும். யானை சொல்வதைப் பிழையென்று சொல்லும். கவிதைகளில் பொருள் இல்லை என்று சொல்லும். இதனால் எழும் வாக்கு

வாதங்களால் விழா சில சமயங்களில் அடிபாடுகளுடன் முடிவடையும்”

“திட்டமிட்டு மிகுந்த பொருட்செலவில் செய்யப்படும் விழா அரைவாசியில் குழம்புவதையிட்டு யானை கவலைப்படும். பலரும் கேட்டு வெறுக்கத்தக்க அர்த்தமில்லாத சொற்களைப் பேசிச் சபையைக் குழப்பும் முயலை முல்லை வனத்தில் வாழ்ந்த எல்லா மிருகங்களும் வெறுத்தன.யானை முயலுக்கு புத்திமதி கூறிப் பார்த்தது. அதன் புத்தி மதிகளை முயல் கேட்பதில்லை. அதனால் யானை ஒரு திட்டம் போட்டது. அதன்படி பௌர்ணமி தினத்தன்று கொண்டாடப்படும் முத்தமிழ் விழாவில் கவிதை அரங்கிற்கு முயலைத் தலைவராக யானை நியமித்தது. விழாவன்று முயல் பட்டுப் பீதாம்பரங்கள் அணிந்து மேடையில் வந்து அமர்ந்தது”

“கவிதை அரங்கம் ஆரம்பமானது. முதலில் குதிரை ஒரு கவிதையைப் பாடியது.வேண்டுமென்றே அக்கவிதையில் பொருட்பிழை இருப்பதாக யானை சொன்னது. அதை ஆமோதித்த எருமை, கவிதை அரங்கத்திற்குத் தலைமை தாங்கும் முயலே தீர்ப்புக் கூற வேண்டும்” என்றது. முயலுக்குக் கவிதை புரியவில்லை. அதை விட அதைப்பற்றிச் சொல்ல வார்த்தைகள் எவையும் வரவில்லை. அதனால் அது ; “குதிரையின் கவிதை இலக்கியத் தரமானது” என்றது. உடனே யானை சொன்னது ; “இலக்கியத்தரத்தைப் பற்றிப் பின்பு பேசலாம். இப்பொழுது

கவிதையில் உள்ள பொருட் குற்றத்தைப் பற்றிக் கூறுதல் வேண்டும். அதற்காக அதன் பொருளைக் கூறுதல் வேண்டும் என்றது”

“முயலால் சரியாகப் பொருளைக் கூறமுடியவில்லை. அதனால் சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. “முயலுக்கு எதுவும் தெரியாது” என்று கழுதை பலமாகக் கூறியது. “ஆமாம் முயல் எதுவும் படிக்கவில்லை. அத்துடன் எதுவும் அதற்கு விளங்கமாட்டாது” என்று கூச்சலிட்டது” யானை”

“முயலுக்குப் பெரும் அவமானமாக இருந்தது. அது அதன் பின் பௌர்ணமி விழாக்களுக்கு வருவதில்லை; “அறிவில்லாதவர்களுடன் பேசுவது அறிஞர் களுக்கு அவமானம்” என்று சொல்லித்திரிந்தது. ஆகவே அன்பானவர்களே, சரியாகப் பொருள் தெரியாவிட்டால் சபையில் அடக்கமாக இருத்தல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்

***அகலம் உடைய அறிவுடையார் நாப்பண்***
***புகலியார் புக்கவர் தாமே - இகலினால்***
***வீண்சேர்ந்த புன்சொல் விளம்பல் அதுவன்றோ***
***பாண்சேரிப் பற்கிளக்கு மாறு!***

பாணரின் குடியிருப்புக்குச் சென்று இசையை அறியாத ஒருவன் இசைக் கச்சேரி வைத்தால் அவன் பெரும் அவமானம் அடைவான். அது போலக் கற்றோர் அவையில் பயனில்லாத சொற்களைப் பேசுவோனும் அவமானமடைவான் “**பாண் சேரிப் பற்கிளக்கு மாறு**” என்பது பழமொழி.

21 “அன்பானவர்களே, ஒன்றின் இனமே அதன் இனத்தைப் பற்றி நன்கறியும். மற்றவர்களால் அதைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள முடியாது. பாம்பிற்குக் கால்கள் இல்லை. ஆனால் அதன் கால்களைப் பாம்புகளே அறிந்து கொள்ளும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நல்லவர்களைப் பற்றி நல்லவர்களே அறிவார்கள். கற்ற அறிவுடையவர்களைப் பற்றிக் கற்ற அறிவுடையவர்களே அறிந்து கொள்வார்கள். அது போலத் தீயவர்களைப் பற்றித் தீயவர்களே அறிந்து கொள்வார்கள்”

“பல திருடர்களுக்குத் தலைவனாகப் பெருந் திருடன் ஒருவன் இருந்தான். அவன் திருட்டுக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவான். வீடு பிரித்துக் கொள்ளை அடிப்பதற்கு ஒருவன் வழிப்பறி செய்ய இன்னொருவன். மாடுகள் திருட வேறொருவன் என்று அவன் தீர்மானித்து வைத்திருக்கிறான். வீடு உடைத்துத் திருடுபவனை மாடு களவெடுக்க அனுப்ப மாட்டான். ஒவ்வொரு திருடர்களைப் பற்றியும் அவன் பூரணமாக அறிந்து வைத்திருந்தான்”

“சுந்தர வனத்தில் வாழ்ந்த மிருகங்களின் தலைவனான யானை, தனக்குக் கீழ் வாழும் மிருகங்களின் கல்வி, சுபாவம் என்பவற்றை நன்கறிந்திருந்தது. அதனால் அக்காட்டில் நடைபெறும் நன்மை தீமைகளில் ஈடுபடுவோரைப் பற்றி அது ஆராயாமலே சொல்லும்”

“சுந்தர வனத்தின் எல்லையில் மனிதக் குடியிருப்புக்கள் இருந்தன. அவர்கள் காட்டிலிருந்து பாயும் ஆற்று நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தனர். அப்பிரதேசம் மிகவும் செழிப்பான மண்ணைக் கொண்டிருந்தால் பயிர்கள் பச்சைப் பசேலென எந்நேரமும் இருக்கும். அதைப் பார்த்து ஆசைப்படும் காட்டு மிருகங்கள் அப்பயிர்களைத் திருட்டுத் தனமாக மேயும். விவசாயிகள் பெரும் மனவருத்தத்துடன் வந்து அதை யானைக்கு முறையிடுவார்கள். யானை எல்லா மிருகங்களையும் அழைத்துப் புத்திமதிகள் கூறும். இருப்பினும் யானையின் சொல்லைக் கேளாது பயிர்களை மேயும் மிருகங்களை விவசாயிகள் கொன்று விடுவதும் உண்டு”

“அன்று இரவு களவாக மேயச் சென்ற பன்றியை மனிதர்கள் கொன்று விட்டனர். அதனால் பன்றியின் பதினாறு குட்டிகளும் பாலில்லாமல் தவித்தன.அக்காட்டில் இன்னொரு பன்றி குட்டி ஈன்றிருந்தது. அது இரக்க மிகுதியால் இறந்த பன்றியின் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்தது. இதைக் கண்டு வருந்திய யானை எல்லா மிருகங்களையும் அழைத்துச் சொன்னது ; “அன்பான சகோதரர்களே, தயவு செய்து பிறரின் சொத்தைத் திருடாதீர்கள். திருடினால் அதற்கான தண்டணை கிடைக்கும். இப்பொழுது பன்றி இறந்தமையால் அதன் குட்டிகள் பாலில்லாமல் துன்பப்படுகின்றன. இதை நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறீர்கள். எனவே தயவு செய்து இனிமேல் தவறு செய்யாதீர்கள்” என்றது”

“ஒரு மாதத்தின் பின் விவசாயி ஒருவன் வந்து தனது பயிர்களைக் காட்டு மிருகங்கள் அழித்து விட்டன” என்று கூறி மனவருத்தப் பட்டான். அன்று யானை சில மிருகங்களை அழைத்துக் கொண்டு வயற்கரைக்குச் சென்று பார்த்தது. பின் காட்டுக்குத் திரும்பியது. காட்டுக்கு வந்ததும் யானை மிருகங்களை அழைத்து விசாரித்தது. மிருகங்கள், “தாம் அழிக்கவில்லை” என்று கூறின. அப்பொழுது எருது ஒன்று சொன்னது ; “ இதை அழித்தது எருதுகள் தான்” என்றது.

“எருதுகள் சொன்ன எருதின் மீது கோபம் கொண்டன. அது சொன்னது ; “பாம்பின் காலைப் பாம்பறியும். அது போல வயல்களில் உள்ள காலடிகளை நான் அறிந்தமையால் தான் சொன்னேன்” என்றது. எருதுகள் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டன. யானை அவற்றை எச்சரித்து அனுப்பியது”

“சுந்தர வனத்திற்கு அருகே உள்ளது வேல் வனம். வேல் வனத்தில் உள்ள யானைக்குத் தொல்காப்பியம் என்ற நூலின் சில பகுதிகள் புரியவில்லை. அதனால் தொல்காப்பியத்தைப் பற்றி அறியச் சுந்தர வனத்திற்கு வந்து அதன் தலைவனான யானையைச் சந்தித்துத் தனது எண்ணத்தைச் சொன்னது. உடனே யானை, குதிரையை அழைத்து யானையின் சந்தேகத்தைத் தீர்க்கச் சொன்னது. குதிரை யானையின் சந்தேகம் முழுவதையும் தீர்த்து வைத்தது. ஆகையால் அன்பானவர்களே, அறிஞர்களின்

சிறப்புக்களை அறிஞர்களே அறிந்து உணர்ந்து பாராட்டுவார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*புலமிக் கவரைப் புலமை தெரிதல்*
*புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க*
*பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே*
*பாம்பறியும் பாம்பின் கால்*

அறிஞரின் சிறப்பை அறிஞரே அறிவர். பிறர் அவர்களின் அறிவையும் செழுமையையும் உணர மாட்டார்கள். **“பாம்பறியும் பாம்பின் கால்”** என்பது பழமொழி.

22 “அன்பானவர்களே, நன்மை தீமை ஆகிய இரண்டையும் நன்கு ஆராய்ந்து அறிந்து, நன்மையானவற்றைக் காலந் தாழ்த்தாது செய்து முடிப்பவனே செயல் வீரனாவான். அவன் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றியளிப்பதோடு, அவன் பெருவாழ்வும் வாழ்வான். இப்படியானவன் ஒரு செயலைத் தானே செய்து முடிப்பவனாகவும் இருப்பான். அவன், ஒரு செயலை அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், ஆசையில்லாமை ஆகிய குணங்களையும், தவறாது ஏற்ற கடமையைச் சரிவரச் செய்து முடிப்பவனையும் கூட நம்பித் தனது செயலை ஒப்படைக்க மாட்டான். தான் செய்யாத செயல் எப்பொழுதும் ஒரு முழம் கட்டையாகவே இருக்கும். அதனால் தன்னால் செய்து முடிக்கக் கூடிய செயல்களைத் தானே முயன்று செய்தலே முறையாகும் என நினைப்பான். தமது செயலைச் செய்ய முடியாது சோம்பியிருப்பவர்கள் அதனை வேறொருவரைக் கொண்டு

செய்யலாம் என்று கருதினால் அது சில சமயங்களில் நிறைவேறாதும் போகும். இது வெந்நீரில் குளிக்கப் பயந்தவர்கள். தீயில் நடப்பதைப் போன்றதாகும். அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடைய அறிவில்லாதவனின் குடும்பம் அவனுக்கு முன்னாலேயே அழிந்து போய்விடும். காலதாமதம் மறதி, சோம்பல், அளவுக்கதிகமான தூக்கம் ஆகிய நான்கும் ஒருவனை ஒரு செயலைச் செய்ய விடாது. நாட்டை ஆளுகின்ற அரசனது நட்புக் கிடைத்தாலும் கூடச் சோம்பலுள்ளவனால் நல்ல முறையில் வாழ முடியாது."

"நாவலன் நல்ல அறிவாளி. அதனால் கோயில்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றில் நடைபெறும் விழாக்களுக்கு அவனைப் பேச வரும்படி அழைப்பார்கள். அவன் அதற்கு ஒப்புக் கொள்வான். அவன் ஒரு மறதிக்காரன். எதையும் குறித்து வைப்பதில்லை. அதனால் அவன் குறிப்பிட்ட நிகழ்வுகளுக்குச் சில சமயங்களில் செல்வதில்லை. விழாவுக்கு வந்த மக்கள் அவனின் வருகைக்காகக் காத்திருப்பார்கள். சிலர் வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். அதன் பின் பிரசங்கத்தை ஒழுங்கு செய்தவர்கள் அவனைத் தேடிச் செல்வார்கள். அவன் வீட்டில் இருக்க மாட்டான். பலருடன் தொடர்பு கொண்டு தான் அவன் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தல் வேண்டும். சில சமயங்களில் தான் ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறிதொருவரை அனுப்புவான். அதனாலும் பல சிக்கல்கள் தோன்றும். அதனால் அவனை விழாவுக்கழைப்பதை அவ்வூர் மக்கள் நிறுத்தி விட்டனர்"

“அவன் ஒரு பட்டதாரி ஆசிரியன். கல்வி நிர்வாக சேவைக்குப் பரீட்சை நடைபெற்றது. அவன் இரவு பகலாக விழித்திருந்து படித்தான். விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பும் இறுதி நாள் அன்று அவன் விண்ணப்பப் பத்திரத்தைச் சரியான முறையில் நிரப்பினான். அவன் அன்று பாடசாலைக்குச் சென்றபோது ஆசிரியர் ஒருவர் விடுப்பெடுத்து வெளியே சென்றார். அவரிடம் அவன் தனது விண்ணப்பப் பத்திரத்தைக் கொடுத்து அவதானமாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து விட்டுப் பற்றுச்சீட்டைக் கொண்டு தருமாறு கூறினான்.”

“நாவலா, நான் ஒரு மரண வீட்டிற்குச் செல்வதற்காகத் தான் விடுப்பு எடுக்கிறேன். மரண வீட்டுக்குச் சென்று வந்த பின்பு தான் அனுப்புவேன்” என்றான். அந்த ஆசியர் அதற்கு நாவலன் சம்மதித்தான். நான்கு தினங்களாக அவ் ஆசிரியர் விடுப்பில் இருந்தார். அவர் மரண வீட்டுக்குச் சென்று வரும் போது விபத்துக்குள்ளானமையால் அவர் வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்கு வைத்தியர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் நாவலனால் அவரைச் சென்று பார்க்க முடியவில்லை. மேலும் ஒரு வாரம் கழிந்த பின் அவரைப் பார்க்க வைத்தியர்கள் அனுமதித்தனர். நாவலன் உள்ளே சென்றான். அவ் ஆசிரியரால் பேச முடியவில்லை. அவரது மனைவி சொன்னாள் ; “ அவர் சில முக்கிய ஆவணங்களைக் கைப் பைக்குள் வைத்துச் சென்றவர். விபத்து நடந்து மூன்றாவது நாள்த்தான் தெருவோரத்தில் இருந்த பற்றைக்குள்ளிருந்து அப்பை

கண்டெடுக்கப்பட்டது. அதற்குள் உங்களின் கடிதம் ஒன்று இருந்தது" என்றாள்"

"நாவலன் தடுமாறிப் போனான். நான் விடுப்பெடுத்துச் சென்று அக்கடிதத்தை அனுப்பியிருந்தால் கல்விப் பணிப்பாளராக வந்திருக்கலாம் என்று எண்ணினான். ஆகவே அன்பானவர்களே, உங்களாற் செய்யக் கூடிய செயல்களைப் பிறரிடம் ஒப்படைக்காதீர்கள். ஒப்படைத்தால் அது நிறைவேறாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தம்மால் முடிவதனைத் தாமாறிச் செய்கலார்,***
***'பின்னை ஒருவரால் செய்வித்தும்' என்றிருத்தல்,***
***சென்னீ! அருவி மலைநாட! பாய்பவோ***
***வெந்நீரும் ஆடாதார் தீ.***

தன்னால் முடிந்தவற்றைத் தானே செய்தல் வேண்டும். பிறரால் செய்விக்கலாம் என்று நினைத்தால் அக்கருமம் நிறைவேறாது **"பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ"** என்பது பழமொழி.

23 "அன்பானவர்களே, விவசாய நிலம் , வர்த்தக நிலையம் என்பவற்றைக் குத்தகைக்குக் கொடுப்போர் அதனால் வரவேண்டிய வரிப்பணத்தையோ, குத்தகைப் பணத்தையோ காலங்கடத்தாமல் பெற்றுக் கொள்ளல் வேண்டும். உரிய தவணையில் பெறாவிட்டால் அறவிடப்பட வேண்டிய தொகை அதிகரித்து விடும். அதனால் அப்பணத்தை உடனுக்குடன் பெற்று

விடல் வேண்டும். காலங் கடத்தலால் பணம் சேர்ந்தால் அதை வாங்கிக் கொள்வதில் சிரமம் ஏற்படும். சில சமயங்களில் கிடைக்காதும் போகலாம். சேர விட்டு வாங்குவோம் என நினைப்பது தவறானது. அது பசுவினது பாலைச் சேரவிட்டுக் கறக்கலாம் என்று நினைப்பதை ஒத்தது. உரிய நேரத்தில் பசுவில் பால் கறக்கா விட்டால் அது வற்றி விடும். அத்துடன் பாலூறுவதும் நிறுத்தப்பட்டு விடும். அது போல வரிப்பணத்தை உரிய நேரத்தில் கால தாமதம் செய்யாது வசூலித்து விடல் வேண்டும்”

“கடம்பவனத்தின் அரசனான சிங்கம் தனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாய நிலங்களில் உரிய முறையில் வரியை வசூல் செய்து விடும். வரி கட்டமுடியாத மிருகங்களின் வயல்களில் சூடடிக்கும் போது உரிய அதிகாரிகளை அனுப்பி நிலுவையாக இருக்கும் வரியையும் சேர்த்து வசூலிக்கும். இதனால் கடம்பவனத்தில் வரிப்பணம் ஒரு போதும் நிலுவையில் இருப்பதில்லை. வரி வசூலித்து முடிந்ததும் சிங்கம் குளங்களைப் புனரமைக்கும், நீர் ஓடும் வாய்க்கால்களைச் செப்பனிடும். வயல்களுக்குத் தேவையான உரங்களை மானிய விலையில் கொடுக்கும். விவசாயிகளான மிருகங்களின் குட்டிகள் கற்கப் பணம் கொடுக்கும். அதனால் கடம்பவனம் எப்பொழுதும் செல்வச் செழிப்புடன் காணப்படும்”

“கடம்பவனத்திற்கு அருகில் உள்ள வனம் கந்தவனம். கந்தவனத்தின் அரசனான யானை வரி வசூலிப்பதில் அக்கறை

காட்டுவதில்லை. வரி வசூலிக்கும் அதிகாரிகள் வந்தால் மிருகங்கள் தமது ஏழ்மை நிலையைக் கூறும். அதிகாரிகள் அதை யானைக்குக் கூறுவார்கள். யானை அடுத்த முறை சேர்த்து வசூலிக்கும் படி கூறும். அடுத்த முறையும் மிருகங்கள் அதையே கூறும். அதனால் வரி நிலுவையில் இருக்கும். கந்தவனத்தின் பொக்கிச அறையுள் பணம் இருப்பதில்லை. அது போலத் தானியக் களஞ்சியங்களில் தானியங்கள் இருப்பதில்லை. அங்கு குளங்களைப் புனரமைப்பதோ, வாய்க்கால்களைச் செப்பனிடுவதோ இல்லை. அதனால் விளைச்சல் மிக மிகக் குறைவடைந்தது. அதனால் கந்தவனத்தில் வசித்த மிருகங்கள் கடம்பவனத்திற்குள் வந்து குடியேறின".

"சிங்கம் அவற்றிற்குக் குடியிருப்புக்களையும், விவசாய நிலங்களையும் வழங்கியது. அறுவடை நாளன்று வரி வசூலிக்கும் அதிகாரிகள் வந்து வரியாகச் சேர வேண்டிய நெல்லை எடுத்துச் செல்வார்கள். யார் எதைக் கூறினாலும் இரக்கப்பட மாட்டார்கள். கடம்பவனத்தில் உள்ளோர் வரியாகச் சேரவேண்டியவ ற்றைச் சாக்குப் போக்குச் சொல்லாது மிகவும் மகிழ்ச்சியுடன் கொடுப்பதைக் கண்ட கந்தவனத்தின் மிருகங்கள் ஆச்சரியப்பட்டன. யானை சொன்னது ; " அரசன் வரியை நிலுவையில்லாமல் வசூலித்தால் தான் அவனால் மக்களுக்கு உதவிகள் செய்ய முடியும். மக்களிடம் பொருள் இருந்தால் அவர்கள் ஆடம்பரமாக வாழ விரும்புவார்களே தவிர விவசாய நிலங்களையோ, குளங்களையோ கவனிக்க மாட்டார்கள். அதை உணர்ந்த எமது மன்னர் வரியை

நிலுவையின்றி வசூலித்துப் பின் எமது முன்னேற்றத்திற்காகச் செலவு செய்கிறார். உங்கள் வனத்தில் உள்ள அரசனான யானை வரியை ஒழுங்காக வசூலிக்காததால் அதனால் மிருகங்களின் தேவையைக் கவனிக்க முடியவில்லை" என்றது. ஆகவே அன்பானவர்களே வரியாக, குத்தகையாகக் கொடுக்கவேண்டிய பணத்தை நிலுவையில்லாமல் கொடுக்கப் பழகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பாற்பட்டு வாழ்ப எனினும் குடிகள் மேல்***
***மேற்பட்ட கூட்டு மிகநின்றல் வேண்டாவாம்;***
***கோற்றலையே யாயினும் கொண்டீக; காணுங்கால்***
***பாற்றலைப் பாலூறல் இல்.***

அரசனானவன் வரியை நிலுவையில்லாது வசூலிக்க வேண்டும். **"பற்றலைப் பாலுறல் இல்"** என்பது பழமொழி.

24

"அன்பானவர்களே, ஒருவருக்கு நோய் வந்தால் கால தாமதம் செய்யாது வைத்தியம் பார்த்தல் வேண்டும். இல்லாவிட்டால் சிறிதாக இருந்த நோய் பெருத்து அவனின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும். அது போலப் பழியேற்பட்டால் உடனே அதைத் தொடர்ந்து செய்யாது நிறுத்தித் திருந்தி வாழ வேண்டும். இல்லா விட்டால் அதுவும் நோயைப் போலப் பெருத்து உயிருக்குத் தீங்கைச் செய்யும். ஒழுக்கம் உயிரைப் போன்றது. ஒழுக்கம் தவறினாலும் அதைத் திரும்பப் பெற முடியாது. அது போல உயிர் பிரிந்தாலும்

அதைத் திரும்பப் பெற முடியாது. பிராமணர்கள் தாம் ஓதும் வேதத்தை மறந்தால் அதைக் கற்று ஓதலாம். ஆனால் ஒருவன் தனது குலத்திற்குரிய ஒழுக்கத்திலிருந்து தவறி நடந்தால் அவன் இழிந்தவனாகவே கருதப்படுவான். ஒழுக்கம் தவறுவதால் பல குற்றங்கள் ஏற்படும். அதனால் ஒழுக்கம் தவறாது வாழப் பழகல் வேண்டும்; தீயசெயல்களைச் செய்ய அஞ்சுதல் வேண்டும். அஞ்சாது ஒரு தீய செயலைச் செய்தால், அத்தீய செயலால் உண்டாகும் இன்பம் அடுத்தடுத்துத் தீயசெயல்களைச் செய்யத் தூண்டும். வறுமை காரணமாகத் தீய செயல்களைச் செய்தால், அத் தீய செயல் மேலும் மேலும் செய்பவனை வறியவனாக்கும்”

“முல்லை வனத்தில் ஒரு யானை வசித்து வந்தது. அது தனது குட்டி யை ஒழுக்க சீலனாக வளர்க்க விரும்பியது. யானைக்குட்டி பாடசாலைக்கு ஏனைய மிருகங்களின் குட்டிகளோடு சென்று வரும். பன்றிக் குட்டியொன்று வகுப்பில் மாணவர்களின் பொருட்களைத் திருடும். ஒரு நாள்க் குதிரைக் குட்டி பகல் உணவிற்காகக் கொண்டு வந்த சுவையான பலகாரத்தைப் பன்றி திருடித் தின்றது. அதை யானைக் குட்டி கண்டு விட்டது. அதனால் பயந்த பன்றிக்குட்டி, “குதிரைக் குட்டி கொண்டு வரும் உணவு மிகவும் சுவையானது. பன்றிக்குட்டி அது தனது வீட்டில் சுவையான பலகாரங்களைச் செய்தால் எனக்கும் கொண்டு வந்து தரும். இன்று சுவையான பயற்றம் பணியாரம் செய்து கொண்டு வந்து தந்துள்ளது. மிகவும் சுவையாகச் செய்ய எனது தாயாரால் முடியாது.

இந்தா தின்று பார். உனது தாயார் இப்படிச் சுவையாகப் பலகாரம் செய்து தருவாரா என்று சொல்" என்றது"

"யானை குட்டி அதை வாங்கி உண்டது. உண்மையில் பன்றிக் குட்டி சொன்னது போல் அப்பணியாரம் மிகவும் சுவையாக இருந்தது ; "இப்படியான சுவை மிகுந்த பணியாரத்தை நான் இதுவரை உண்டதில்லை. எனக்கும் இனிமேல் கொண்டு வந்து தரச் சொல்லிக் குதிரைக்குட்டிக்குச் சொல்ல வேண்டும்" என்று யானைக் குட்டி சொல்லிக் கொண்டிருக்கும் போது குதிரைக் குட்டி அங்கே வந்து தனது உணவுப் பொதியைத் தேடியது. அதைக் காணாமையால் அது அழுதது. ஆசிரியருக்குத் தனது உணவு காணாமற் போனது பற்றிச் சொன்னது"

"ஆசிரியரான எருது எல்லா மாணவர்களையும் அழைத்து; "யார் குதிரைக் குட்டியின் உணவை எடுத்து உண்டது..? உண்மையைச் சொல்லா விட்டால் கடுமையான தண்டனை தருவேன்" என்று வெருட்டியது'

"பன்றிக்குட்டி உடனே எழுந்து அழுதழுது ; "யானை தான் பன்றிக் குட்டியின் உணவைத் திருடியது. அதை நான் உங்களிடம் சொல்வேன் என்று கூறினேன். அது சொல்ல வேண்டாம் என்று கூறி எனக்கும் தந்தது" என்றது"

“எருது கோபத்துடன் யானைக்குட்டியைத் தண்டித்தது; “உனது பெற்றோர் ஒழுக்கமானவர்கள்; பெரும் தனவந்தர்கள்; மற்றவர்களுக்கு உதவி செய்பவர்கள். நீ அந்தக் குலத்தின் மானத்தைக் கெடுக்க வந்திருக்கிறாய். இளமையில் தெரியாத் தனமாகச் செய்யும் திருட்டுக்கள் வளர்ந்த பின்பு பழக்கமாகி விடும். இனிமேல் இப்படி நீ திருடினால் பாடசாலையை விட்டு நீக்கி விடுவேன்” என்று கூறிவிட்டு, அதை யானைக்குட்டியின் பெற்றோருக்குச் சொன்னது”

“யானைக் குட்டியின் தாய் தனது செல்ல மகனை அணைத்து முத்தமிட்டு விட்டுச் சொன்னது ; “எனது அன்பான மகனே, நீ திருடி யிருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். இருப்பினும் நீ குற்றம் செய்யாவிட்டாலும் குற்றம் செய்யும் தீயவர்களுடன் சேர்ந்திருந்தால், பெரியவர்கள் உன்னையும் குற்றவாளியாகக் கருதுவர். அதனால் இனிமேல் நீ தீயவர்களுடன் சேராதே” என்றது” ஆகவே அன்பானவர்களே, குழந்தைகள் அறியாமையாற் செய்கின்ற தீயசெயல்களை அன்றன்றே திருத்துதல் வேண்டும். இல்லாவிட்டல் அது பழக்கமாகி விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*பொருந்தாப் பழியென்னும் பொல்லாப் பிணிக்கு*
*மருந்தாகி நிற்பதாம் மாட்சி – மருந்தின்*
*தணியாது விட்டக்கால், தண்கடல் சேர்ப்ப!*
*பிணியீ டழித்து விடும்.*

நோயைத் தீர்ப்பது மருந்து. அது போலப் பழியை நீங்குவது நல்லொழுக்கம். குற்றங்களை உடனுக்குடன் களைய வேண்டும். **“பிணியீடழித்து விடும்”** என்பது பழமொழி.

25 “அன்பானவர்களே, பல்வேறு சமயத்தினரும் தமது கொள்கைகளைப் பல்வேறு வடிவங்களிற் கூறுவார்கள். அதையிட்டு யாரும் அஞ்ச வேண்டியதில்லை. அவற்றில் எது நன்மை தரக் கூடியது என்று ஆராய்ந்தறிந்து ஒன்றை மேற்கொள்ளவும். அதுதான் எல்லையில்லாத பெருமையைத் தரவல்லது. பிரம்பூதி என்றும் ஒரு வகை நெல்லை விதைத்தால் அது ஒன்றுக்கு ஏழாக விளைச்சலைத் தரும். எனவே விவசாயிகள் தமக்கு எல்லையில்லாத இலாபத்தைத் தரும் பிரம்பூரி என்ற இன நெல்லையே விதைத்துப் பயன் பெறுவர். அது போல மக்களும் தமக்கு நன்மை தரும் சமயக் கொள்கை எது என ஆராய்ந்து அறிந்து அதையே பின்பற்றி நன்மையடைதல் வேண்டும்”

‘வேதவனம் என்ற காட்டிலே வாழ்ந்த யானை ஒன்று பன்னசாலை அமைத்துத் தவம் செய்து வந்தது. அதன் தரிசனம் பெறக் காட்டு மிருகங்கள் பன்னசாலைக்கு வரும். வரும் மிருகங்கள் எவற்றையும் கவனியாது யானை பிரார்த்தனையிலீடுபடும். தனது பிரார்த்தனை முடிந்ததும் அது தனது ஆச்சிரமத்திற்கு வந்துள்ள மிருகங்களுடன் உரையாடும். அந்த மிருகங்களுக்கு எழும் சந்தேகங்களைத் தீர்க்கும். வந்தவர்களுக்கு உண்ண ஏதாவது

கொடுக்கும். யானையின் ஆச்சிரமத்திற்கு மிகவும் குறைவான மிருகங்களே வரும்”

“யானையின் ஆச்சிரமத்திற்குச் சிறிது தூரத்தில் எருமை ஒன்று ஆச்சிரமமமைத்துச் சமயப்பணிகள் செய்து வந்தது. காலையில் இருந்து மாலை வரை வரும் மிருகங்களுக்கெல்லாம் அது உணவு வழங்கும். சோதிடம் சொல்லும், கழிப்புக் கழிக்கும், பிரசங்கங்கள் செய்யும், சாந்தி செய்யும். இதற்கெல்லாம் பணம் வசூலிக்கும். எருமை சொல்லும் சோதிடம் உண்மையானது என்று நம்பி வேதவன விலங்குகளும், அயலில் உள்ள வனங்களில் வசிக்கும் மிருகங்களும் எருமையின் ஆச்சிரமத்திற்கு வந்தது. எருமையிடம் சோதிடம் கேட்பதனால் முன் கூட்டியே அனுமதி பெறல் வேண்டும். அனுமதிக்காக மிருகங்கள் பல நாட்கள் காத்திருக்கும்”

“யானையின் ஆச்சிரமத்திற்கு வருவோர் மிகவும் குறைவு. குதிரை, யானை மீது அதீத பற்றுக் கொண்டது. அது எந்நேரமும் யானையின் ஆச்சிரமத்தில் இருக்கும். பன்றி ஆரம்பத்தில் யானையின் ஆச்சிரமத்திற்கு வந்தது. அங்கு உண்பதற்குப் பெரிதாக எதுவும் கொடுக்காமையால் அது அங்கு வருவதை நிறுத்தி விட்டு எருமையின் ஆச்சிரமத்திற்குச் சென்று வந்தது. பல நாட்களாகப் பன்றியை யானையின் ஆச்சிரமத்தில் காணாத குதிரை பன்றியைத் தேடிச் சென்றது. பன்றி, எருமையின் ஆச்சிரமத்தில் நன்றாக உண்டு விட்டு வீட்டாருக்கும் உணவு கொண்டு சென்றது.

அதைக் கண்ட குதிரை; "நண்பா, நீ ஏன் இப்பொழுது யானையின் ஆச்சிரமத்திற்கு வருவதில்லை"? என்று கேட்டது"

"எருமையின் ஆச்சிரமத்திற்குச் சென்றால் வயிறார உணவு கிடைக்கும். வீட்டாருக்கும் அது போதியளவு உணவு தரும். யானையிடம் வருவதானால் உழைத்து வைத்து விட்டுத் தான் வருதல் வேண்டும். யானையின் பிரார்த்தனை முடிய நாம் எதை உண்பது?" என்று கேட்டது பன்றி"

"குதிரை எதுவும் சொல்லவில்லை. அதனால் பன்றி சொன்னது; "யானைக்கு ஆணவம் அதிகம். அது மற்றவர்களை மதிப்பதில்லை. ஞானத்தின் மூலம் கடவுளை அடைய வேண்டும் என்று சொல்லி எம்மை ஏமாற்றுகிறது. எருமை அப்படியல்ல. பிறருடன் அன்பாகக் கதைக்கிறது. தானம் வழங்குகிறது. எல்லோரையும் சமமாக மதிக்கிறது. கடவுளைப் பற்றிக் கூறுகிறது. அதனால் தான் நான் எருமையின் ஆச்சிரமத்திற்குச் செல்கிறேன். யானையின் ஆச்சிரமத்தில் கிடைக்காத நிம்மதி எனக்கு அங்கு கிடைக்கிறது" என்றது"

"மதங்கள் எல்லாம் ஒன்றையே கூறுகின்றன. அவை ஒவ்வொன்றும் கூறுபவை வித்தியாசமாக இருந்த போதும் அடிப்படை ஒன்று தான். எந்த ஒரு ஞானியின் உரையும் நன்மை அளிப்பதாக இருந்தால் அவற்றைப் பின்பற்றலாம். அது அவரவர் விருப்பம்" என்றது குதிரை. ஆகவே அன்பனவர்களே, எந்த

மதத்தையும் நிந்தனை செய்யாதீர்கள். உங்களுக்குப் பிடித்த மதக் கொள்கைகளைப் பின்பற்றி நன்மை அடையுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்***
***நிரம்பிய காட்சி நினைந்தறிந்து கொள்க***
***வரம்பில் பெருமை தருமே; பிரம்பூரி***
***என்றும் பதக்கேழ் வரும்.***

மதவெறி கொள்ளாது எல்லா மதங்களும் சொல்பவற்றுள் நன்மையானவற்றைப் பின்பற்றி மேன்மையடைதல் வேண்டும். **"பிரம்பூரி என்றும் பதக்கேழ் வரும்"** என்பது பழமொழி.

26 "அன்பானவர்களே, தீயவர்கள் தம்மைப் போலவே எல்லோரும் தீயவர்கள் என்று தான் நினைப்பார்கள். தான் திருடன் பிறரை நம்பான்' என்றும் காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்' என்றும் முதுமொழிகள் உண்டு. தோற்றத்தில் பார்ப்பதற்கு நல்லவர்களும் தீயவர்களும் ஒரே மாதிரித்தான் காணப்படுகின்றார்கள். அவர்களைப் போல ஒத்திருப்பவர்களை வேறெந்த இருவகைப் பொருட்களிடத்திலும் காண முடியாது. நன்மையை அறியாத தீயவர்கள் நன்மையானவற்றைப் பிறர் செய் தாலும் அதைத் தீயதாகவே நினைப்பார்கள். இழிந்த செயல்களைச் செய்வோர், தம்மைப் போலவே எல்லோரும் இழிந்த செயல்களைச் செய்கிறார்களென்றே நினைப்பார்கள். இது உலக இயல்பு. இதைத் தீயவர்களால் மாற்ற

முடியாது. நல்லவர்கள் எல்லோர் மீதும் இரக்கங் கொண்டு, அவர்கள் தீயவர்களாக இருந்தாலும் கூட உதவுவார்கள். ஆனால் தீயவர்கள் தனக்கு உதவி செய்தவர்களுக்கும் இலாபம் கருதாமல் உதவ மாட்டார்கள். இத்தகைய தீயவர்கள் தமக்குத் துன்பம் வந்தால், அதை நீக்க எதிரிகளின் கால்களிற் கூட விழுந்து வணங்குவார்கள்”

“வேலன் காட்டில் வாழ்ந்த யானை தன்னைப் போல பிற மிருகங்களையும் நேசிக்கும். மிகவும் நல்ல குணமுடைய அது துன்பப்படுபவர்களுக்கு வலியச் சென்று உதவி புரியும். அது அடக்கமுள்ளது. யார் எதைச் சொன்னாலும் அதற்காகக் கவலைப்படுவதில்லை. அத்துடன் தான் உதவி செய்தவர் தனக்குதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் இல்லை. தன்னைவிடத் தாழ்ந்தவர்களையும் மதித்து நடக்கும். அப்படியானவர்கள் தனக்குத் துன்பம் செய்தாலும் அவர்களுக்கு உதவிகள் செய்யும்”.

“அக்காட்டில் வாழ்ந்த எருமை நன்றி இல்லாதது. தீய செயல்கள் அனைத்தையும் ஆராயாமற் செய்வது. தனக்கு உதவி செய்தவர்களுக்கும் ஆபத்து வந்தாலும் பலன் கருதியே உதவி செய்யும். ஒரு நாள் எருமை வேடர்கள் விரித்த வலையில் அகப்பட்டு விட்டது. அதனால் வலையிலிருந்து விடுபட முடியவில்லை. அதனால் அது பெரிதாக அலறியது. வெகு தூரத்தில் நின்ற யானைக்கு அதன் அலறல் சத்தம் கேட்டது. அது விரைவாக ஓடி

வந்தது. அவ்வழியாற் சென்ற நரி, எருமை அலறும் சத்தம் கேட்டு அவ்விடத்திற்கு வந்தது. அது வலையில் அகப்பட்டுத் துன்பப்படும் எருமையைக் கண்டது. வேடர்கள் வந்து வலையை நீக்க முன் எருமை இறந்தால் அதன் இறைச்சியை உண்ணலாம் என நினைத்து மகிழ்ந்தது. வெகுநேரமாக வேடர்களைக் காணவில்லை. அதனால் அது எருமைக்கு உதவி செய்வது போல வலையின் அருகே வந்து வலையை நீக்கி விட்டு அதன் காலைக் கடித்தது. காலிலிருந்து வந்த இரத்தம் அதற்குச் சுவையாக இருந்தது. அதனால் அது மீண்டும் மீண்டும் கடித்து இரத்தத்தைச் சுவைத்தது. எருமை வேதனையால் துடிதுடித்தது ; "காலைக் கடிக்காதே" என்று" அழுதது"

"நண்பா நான் உனது காலைக் கடிக்கவில்லை. வலையைத் தான் கடிக்கிறேன். தற்செயலாகப் பல்லுப் பட்டு விட்டது" என்றது. அப்பொழுது யானை வந்து வேடனின் வலையை அறுத்து எருமையை விடுவித்தது. நரி எருமையுடன் நட்பாக இருந்தது. நரி சொன்னது ; "நண்பா, யானை வராவிட்டாலும் நான் உன்னைக் காப்பாற்றியிருப்பேன். நீ யானை தான் காப்பாற்றியது என்று எண்ணாதே" என்றது"

"எனக்கு யானையைப் பற்றித் தெரியும். தான் தான் காட்டில் மிகவும் நல்லவன் என்றும் எல்லோருக்கும் உதவி செய்பவன் என்றும் நினைத்துக் கர்வப்படும். அது புகழுக்காகத் தான் மிருகங்களுக்கு உதவி செய்கிறது" என்றது எருமை"

“யானை தன்னைப் பெரியவனாகக் காட்டித் தான் காட்டின் அரசனாக வர எண்ணுகிறது. நீ வீரன். அறிவாளி, நீ ஏன் அரசனாக வரக்கூடாது” என்று நரி.”

“எனது நீண்ட வளைந்த கொம்பினால் யானையைக் குத்திக் கொன்று விடுவேன்” என்றது எருமை.”

“யானை, தான் காட்டின் அரசனாக வேண்டும் என்பதற்காகத் தான் மிருகங்களுக்கு உதவி செய்வது போல நடிக்கிறது. இனிமேல் நானும் யானையைப் போல உதவி செய்ய விரும்புகிறேன்” என்ற எருமை, யானையைப் போல உதவிகள் செய்தது. அதற்கு அது கூலியை எதிர்பார்த்தது. மிருகங்கள் கொடாமையால் அது நரியின் உதவியை நாடியது. நரி மிருகங்களிடம் பெருந்தொகைப் பொருட்களைப் பெற்று அதில் அதிகமானவற்றைத் தான் எடுத்துக் கொண்டு மிகுதியை எருமைக்குக் கொடுத்தது. “எல்லோரும் தமது நன்மைக்காகத் தான் எதையும் செய்வார்கள்” என்று நரி நினைத்தது. எல்லோரும் தமது தேவையை நிறைவேற்றத் தரகர்கள் மூலம் பொருள் கொடுக்கிறார்கள். யானைக்கும் தரகர் ஒருவர் இருப்பார். யானையுடன் இரவுபகலாகத் திரிவது மான். மான் மிருகங்களிடம் பொருள் வாங்கி யானைக்குக் கொடுக்கும்” என்று நினைத்தது எருமை”

“மான் யானைக்கு வாங்கும் பொருட்களில் பெரும் பகுதியை எடுத்ததால் தான் அது ஆடம்பரமாக வாழ்கிறது. நல்லதொரு வீட்டைக் கட்டி வருகிறது. நானும் ஓர் ஆடம்பரமான வீடு கட்ட வேண்டும்” என்று நினைத்தது நரி. அதனால் அன்பானவர்களே, ஒரு போதும் உங்களைப் போல மற்றவர்களை நினைக்காதீர்கள். அவர்களது குணவியல்புகளை நன்றாக ஆராய்ந்து நடுவுநிலையில் நின்று தீரமானம் எடுத்த பின்பு முடிவு செய்யுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்”.

***தெரியாதார் சொல்லும் திறனின்மை தீதாப்***
***பரியார், பயனின்மை செய்து பெரியார்சொல்***
***கொள்ளாது, தாம்தமைக் காவாதவர், பிறரைக்***
***கள்ளராச் செய்குறு வார்.***

தீயவர்கள் தம்மைப் போலவே எல்லோரும் தீயசெயல்களைச் செய்து வாழ்கிறார்கள் என்று நினைப்பார்கள். ‘**பிறரைக் கள்ளாரச் செய்குறுவார்**’ என்பது பழமொழி.

27 “அன்பானவர்களே, தீயவர்களது நட்பு என்றும் தீமையையே தரும். தீயவர்கள் அன்பின் மிகுதியால் நலம் செய்பவர்களைப் போல நடிப்பார்கள். இவர்கள் தமக்குப் பயன் உள்ள போது நட்பாக இருப்பார்கள். பயனில்லாத போது விலகிச் சென்று தீமை செய்வார்கள். நட்பின் தன்மையை உணராமல், நட்பின் மூலம் என்னென்ன பயன்களைப் பெறலாம் என்று நினைத்துப் பார்ப்பவர்களின் நட்பைத் தொடரக் கூடாது. தீயவர்கள் எப்பொழுதும்

உள்ளத்தில் அன்பில்லாமல் வெளியே சிரித்துப் பேசுவார்கள். ஆளில்லாத இடங்களில் கேலி செய்து பேசுவார்கள். இவர்கள் செய்யும் செயல்கள் வேறாகவும், சொல்கின்ற சொல் வேறாகவும் இருக்கும்"

"எருதும் யானையும் இணைபிரியாத நண்பர்கள் இவர்களுடன் பன்றியும் நட்பாகிச் சேர்த்து மேயச்செல்லும். குதிரையும் பன்றியும் நண்பர்கள். யானையுடனும் எருதுடனும் கழிக்கும் நேரத்தில் பன்றி மகிழ்ச்சியின்றிக் காணப்படும். பன்றியும் குதிரையும் எப்பொழுதும் அடுத்தவர்களைப் பற்றியே பேசும். உண்மைக்குப் பிறம்பான விஷயங்களைப் பேசும். அதைஅப்படிப் பேச யானையும் எருதும் விடாது; "நண்பரே, ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றிப் பழித்துக் கூறுதல் கூடாது. நீர்குதிரையுடன் நெருங்கிப் பழகிக் கொண்டு அதைப் பற்றிக் குறை கூறுவது நல்லதல்ல. ஒருவருக்கு முன்னால் நின்று எதையும் சொல்லலாம். ஆனால் அவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றி நல்லவற்றைத் தவிரத் தீயவற்றைப் பேசுவது பாவம். ஒருவர் அறநெறிகளைப் போற்றி வாழாதவராகவும், அறச்செயல்களைச் செய்து வாழாதவராக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் புறங்கூறுபவராக வாழ்ந்தால் அவரைத் தீராத பழி சூழ்ந்து வருத்தும். அப்படிப் பழித்துப் பேசுவதைக் கேட்பதும் பாவம். அதனால் நீர்குதிரையைப் பற்றித் தவறாகச் சொல்ல வேண்டாம். உமக்கு விரும்பமில்லாவிட்டால் குதிரையின் நட்பைத் துண்டியும்" என்றது யானை".

“தான் சொல்வதைக் கேட்டு யானை மகிழ்ச்சியடையும் என்று நினைத்த பன்றிக்கு யானை அப்படிச் சொன்னது பிடிக்கவில்லை. அதனால் அது பேசாமற் சென்றது. அதன்பின் இரண்டு தினங்கள் பன்றி, யானையின் இருப்பிடத்திற்கு வரவில்லை. மூன்றாம் நாள் குதிரை மிகவும் துயரத்துடன் வந்து சொன்னது”.

“நண்பரே, ஒருவர் நுணுக்கமாக ஆராயாது கொள்ளும் நட்பு, இறுதியில் தான் சாவதற்கே காரணமான துயரத்தை உண்டாக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் தெரியாத் தனமாகப் பன்றியுடன் நண்புக் கொண்டு விட்டேன். அது எந்நாளும் சிங்கத்தைப் பற்றித் தரக்குறைவாகப் பேசும். நான் ; “அரசன் என்றால் திமிர் இருக்கும். அதை நாம் தான் பொறுத்து நடத்தல் வேண்டும்” என்று சொன்னேன். அதைப் பன்றி சிங்கத்திடஞ் சென்று கூறிவிட்டது. அதை விட நான் கூறாதவற்றையும் கூறிவிட்டது. அதனால் சிங்கம் கோபத்துடன் என்னை வருமாறு அழைத்தது. நான் சென்றதும் சிங்கம் என்னைக் கொல்ல வந்தது. நான் உயிர்தப்பியதே ஆச்சரியம்” என்றது”.

“காட்டு மிருகங்களுக்கு நீ என்னைப் பற்றித் தவறாகக் கூறுகிறாய். அதனால் காட்டு மிருகங்கள் என்னை அவமதிக்கின்றன. நீ எனது நண்பன். உன்னை நம்பி உனக்குப் பல உதவிகள் செய்துள்ளேன். அப்படியிருந்தும் நன்றியில்லாமல் என்னைப் பற்றித் தவறாகக் கதைத்துள்ளாய். அதனால் உன்னை

ஐந்து நாட்களுக்குச் சிறையில் அடைத்து வைக்க உத்தரவிடுகிறேன்" என்றது. ஐந்து நாட்கள் நான் உணவும் தண்ணீரும் இன்றிச் சிறையில் அடைக்கப்பட்டேன். என்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்த சிங்கம் இப்படிக் கூறியது எனக்குக் கவலையைத் தருகிறது" என்று அழுதது குதிரை"

"நண்பா, நட்பை உணராது தமது நன்மைக்காகச் செயற்படும் பேதைகளுடன் நட்பு வைத்தல் கூடாது. அவர்களால் ஆபத்துக்கள் வரும். அதனால் அப்படியானவர்களின் நட்பை உடனே நீக்கி விடு" என்றது யானை" அதனால் அன்பானவர்களே, நண்பர் மீது எவரோ சொல்லும் பழியை உண்மையென நம்பும் பேதைகளின் நட்பு என்றும் துன்பத்தையே தரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இடையீடு உடையார் இவரவரோடு என்று***
***தலையாயார் ஆராய்ந்தும் காணார் - கடையாயார்***
***முன்னின்று கூறும் குறளை தெரிதலால்***
***பின்னின்னா பேதையார் நட்பு***

நண்பனின் மீது சந்தேகப்படுபவரின் நட்பு எப்பொழுதும் தீமையையே தரும். **"பின்னின்னா பேதையார் நட்பு"** என்பது பழமொழி.

28 “அன்பானவர்களே, ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாக இருந்தால், அதற்குப் பாதுகாப்பும் வலிமையும் அதிகமாக இருக்கும். ஒரு புலி புதரில் மறைந்திருந்தால், அது புலிக்குப் பாதுகாப்பாகவும் புதருக்குப் பெருமையாகவும், வலிமையாகவும் இருக்கும். புலியிருக்கும் புதருக்கு அருகிற் செல்ல யாரும் அஞ்சுவர். அது போல பொருளை ஒருவன் சிதறாது பேணிக் காத்தால், அப்படிக் காத்த பொருள், அவன் வாழ்வை உயர்த்தும். அது போல அவனின் தானதர்மங்களால் பொருள் சிறப்படையும்”

“ஏகாம்பரம் ஒரு சிறிய வர்த்தகன். அவன் தனதூரில் சிறியதொரு வர்த்தக நிலையம் அமைத்து ஊரவர்களுக்கு வியாபாரஞ் செய்து வந்தான். சிறுகச் சிறுகப் பொருளைச் சேமித்த ஏகாம்பரம் பெரும் வர்த்தகனானான். அவனிடம் பொருள் குவிந்தது. அவன் இரப்பவர்களுக்கு இல்லை என்று கூறாது கொடுப்பான். பாடசாலைகளுக்கு உதவுவான். கோயில்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பான். அவனை ஊரவர்கள் மதித்து வந்தனர்.’

“அதே ஊரில் சின்னத் தம்பி என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் பெரிய நிலச் சுவாந்தன். அவனிடம் ஏராளமான விளைநிலங்கள் இருந்தன. அவனிடம் நூற்றுக்கும் அதிகமானவர்கள் வேலை செய்து வந்தனர். அவன் அவர்களுக்கான கூலியைக் கூடச் சரியாகக் கொடுக்க மாட்டான். ஊர்க்கோயிலின் தலைவராக இருந்து கோயில் நிலங்களைத் தன்னுடைய நிலமாகக் கருதி அதில் பயிரிட்ட விவசாயிகளை

அடியாட்களை வைத்துத் துரத்தி விட்டுத் தான் பயிர் செய்து வந்தான். இதை யாராவது தட்டிக் கேட்டால் அடியாட்களை வைத்துத் தாக்குவான்”

“ஏகாம்பரத்தின் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் வேலாயுதம் என்பவன் விபத்தில் சிக்கித் தனது வலது காலை இழந்து விட்டான். அவனுக்கு அவனது வீட்டில் ஒரு சிறு வர்த்தக நிலையம் அமைத்துக் கொடுத்தான் ஏகாம்பரம். சின்னத்தம்பியின் சகோதரியின் கணவன் நெடுங்காலமாக ஏகாம்பரத்தின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து இளைப்பாறியவன். அவனது மகள் சகுந்தலைக்குச் சீதனமின்மையால் திருமணம் நடைபெறவில்லை. அதை அறிந்த ஏகாம்பரம் தனது விற்பனை நிலையத்தில் கடமை செய்யும் ஆனந்தன் என்பவனுக்குப் பொருள் கொடுத்துச் சகுத்தலைக்குத் திருமணம் செய்து வைத்தான். ஊரவர்கள் ஏகாம்பரத்தைக் கடவுளாக வணங்கினர். ஆதனால் அன்பானவர்களே, பொருள், தேடியவனை எப்பொழுதும் காப்பாற்றி நல்ல நிலையில் வைத்திருக்கும். அது போலப் பொருளுள்ளவன் பொருளைச் சிறப்பிக்கத் தான் தேடிய பொருளைத் தான தர்மம் செய்தல் வேண்டும். அதனால் அவனை அடைந்த பொருள் பெரும் சிறப்பை அடையும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*உடையதனைக் காப்பான் உடையான் ; அதுவே*
*உடையானைக் காப்பதூஉம் ஆகும் - அடையின்*
*புதர்க்குப் புலியும் வலியே ; புலிக்குப்*
*புதரும் வலியாய் விடும்.*

பொருளை ஒருவன் கஷ்டப்பட்டுத் தேடினால், அப்பொருள் தேடியவனை உயர்த்தும். தேடிய பொருளைத் தர்மமான காரியங்களுக்குச் செலவு செய்பவன் பொருளின் சிறப்பை உயர்த்துவான். **“புதர்குப் புலியும் வலியே ; புலிக்குப் புதரும் வலியாய் விடும்”** என்பது பழமொழி.

29 “அன்பானவர்களே, தன்னாற் செய்ய முடியாததைச் செய்வேன் என்று கூறி அதைச் செய்யாது இடை நடுவில் விட்டு விட்டு, அதைச் செய்து முடித்ததனால் பெரும் இலாபம் பெற்றேன் என்று கூறி ஊர் முழுவதும் தன்னைத் தான் புகழ்ந்து கூறிக்கொண்டு திரிபவர்கள் பலர் இருக்கிறார்கள். சிறிய செயல்களைக் கூடச் சரியாகச் செய்து நிறைவேற்ற முடியாத இவர்கள், பெரிய செயல்களைத் தற்புகழ்ச்சிக்காகச் செய்வோம் எனக் கூறுவது நகைப்பிற்கு இடமானது. இச்செயலானது தன்னாற் பிடிக்கப்படாமல் காட்டிலே பறந்து திரியும் பறவையை அரைக்கால் பொன்னுக்கு விற்பேன் என்று கூறுவதைப் போன்றதாகும். தான் செய்த பெரிய செயல்களையும் தன் வாயாற் கூறாது, அடக்கத்துடன் வாழ்வது தான் சான்றோருக்கு அழகு. இவ்வாறு வாழ்ந்தால் அந்த உயர்ந்த தன்மை பற்றிப் பெரியவர்கள் அறிந்து போற்றுவார்கள். தன்னை மேம்படுத்தித் தானே கூறாது. அடக்கமாக வாழ்பவனது உயர்ச்சி, மலையை விட உயர்ந்ததாகும். இதை விட்டு விட்டுத் தன்னால் செய்ய முடியாத செயல்களையும் தான் செய்வேன் என்று கூறி அதைச் செய்யாது, செய்து விட்டேன் என்று பெருமைப்படுவது மிகவும் கேவலமானது”

“சுந்தரவனத்தில் மரங்கள் மிகவும் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. மாதம் மும்மாரி பெய்வதால் மரங்கள் மிகவும் நெருக்கமாகவும் உயரமாகவும் வளர்ந்திந்தன. மிருகங்கள் மலைச்சாரலில் இருந்து குதித்தோடி வரும் அருவியில் பலமணி நேரம் ஆனந்தமாக நீராடி மகிழும். எருமை அந்தக் குளிர்மையான நீரில் நெடுநேரம் படுத்திருக்கும். யானை நன்றாகக் குளித்து விட்டு தனது தும்பிக்கையில் நீர் கொண்டு வந்து ஆற்றோரமாக இருக்கும் விநாயகருக்கு அபிஷேகம் செய்து விட்டுப் பூக்கள் பறித்து வைத்து வணங்கும்”

“இரண்டு மூன்று தினங்கள் காட்டில் பெரு மழை பெய்தது. அத்துடன் காற்றும் பலமாக வீசியது. அதனால் காட்டு மரங்கள் பல முறிந்தும், பாறி விழுந்தும் இருந்தன. மலை உச்சியில் இருந்த ஒரு பெரிய கல் பாதையின் குறுக்கே உருண்டு விழுந்திருந்தது. மிருகங்கள் அப்பாதையால் தான் ஆற்றுக்குச் சென்று குளித்து வந்தன. எல்லா மிருகங்களும் ஒன்று கூடிப் பாதையின் குறுக்கே இருக்கும் கல்லை அகற்ற வேண்டும் என்று கதைத்தன”

“நினைத்தால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. முயற்சித்துப் பாதையின் குறுக்கே உள்ள கல்லை அரக்குவோம்” என்றது பன்றி”

“அரக்குவது கஷ்ரம் உடைப்போம்” என்றது முயல்”

“அரக்குவதும் உடைப்பதும் கஷ்டம். நாம் வேறு இடத்தில் பாதை அமைப்போம்” என்றது குதிரை”

“முயல் சொன்னது போல அரக்க முடியாது. உடைப்பது தான் நல்லது. வேறு இடத்தால் செல்வதானால் பல மரங்களைத் தறித்தல் வேண்டும்” என்றது பன்றி”

“எல்லா மிருகங்களும் கூடி ஆராய்ந்த விட்டுச் சென்றன. அப்போது முயல் சொன்னது ; “இப்படிச் சொன்னால் எப்படி? நீங்கள் முன்வராவிட்டால் பரவாயில்லை. நான் உடைக்கிறேன்” என்றது முயல்”

“ஒரு சிறு கல்லைக்கூடத் தூக்க முடியாத நீயா இப்பெரியகல்லை உடைக்கப் போகிறாய்?” என்று கேட்டது எருமை. பலரும் பலவாறு கதைத்து விட்டுச் சென்று விட்டனர். யானை குளிக்க வந்தது. வழியின் குறுக்கே இருந்த கல்லைக் கண்டதும் அது தனது தும்பிக்கையால் கல்லை அரக்கி விட்டுச் சென்றது. அது சென்ற பின் முயல் கடப்பாருடன் வந்தது. கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்ட அது மகிழ்வுடன் சென்று பன்றிக்குச் சொன்னது ; “நான் கல்லை உடைக்கக் கடப்பாருடன் சென்றேன். உடைப்பதை விட அரக்குவது சுலபமாக இருந்தது. அதனால் அதை அரக்கி விட்டு வருகிறேன்” என்றது. பன்றி அதை நம்பாது சென்று கல்லைப் பார்த்தது. கல்லின் அருகே யானையின் காலடி இருந்தது. அது கல்லை அரக்கத் தனது பலம் முழுவதையும் திரட்டியதால் அதன் காலடிகள் நிலத்தில் புதைந்திருந்தன. பன்றி சிரித்து விட்டுச் சென்று

குதிரைக்குச் சொன்னது ; "சுண்டக்காயைக் கூடத் தூக்க முடியாத முயல் பெரும் பாறாங்கல்லை அரங்கியதாகக் கூறிப் பெருமைப்படுகிறது. அதை யானை தான் அரக்கியது" என்றது. ஆதலால் அன்பானவர்களே, இயலாதவற்றை இயலும் என்று கூறிப் பெருமைப்படாதீர்கள். ஏனென்றால் உண்மை வெளிவரும் போது அது பெரும் அவமானத்தைத் தரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செய்த கருமம் சிறிதானும் கைகூடா ;***
***மெய்யா உணரவும் தாம்படார் - எய்த***
***நலத்தகத் தம்மைப் புகழ்தல், புலத்தகத்துப்***
***புள்ளரைக்கால் விற்போம் எனல்***

இயலாததை இயலாதென்று சொல்லாமல் இயலும் என்று சொல்லி அதை முடிக்காது பொய்யாகப் பெருமை பேசுதல் கூடாது. **"புலத்தகத்துப் புள்ளரைக்கால் விற்போம் எனல்"** என்பது பழமொழி.

**30** "அன்பானவர்களே, நடுவு நிலைமையும், நாணமும், தான தர்மம் செய்தலும், ஒழுக்கம், உண்மை தவறாது நடத்தலும் உயர்ந்த குடும்பத்திற் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒரு சேர அமைவதில்லை. உயர்ந்த குடியிற் பிறந்தவரிடம் முகமலர்ச்சி, இனிய சொல், கொடுத்துதவும் தன்மை, பிறரை மதித்தல் என்பன இயல்பாகவே அமைந்திக்கும். இவை அமையாதவர்கள், பறவைகள் தாம் வாழும் புலத்திற்குத் தக்கதான தன்மைகளை உடையனவாக இருப்பது போலச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தம்மை மாற்றியமைத்து தமது

எண்ணங்களை ஈடேற்றி வாழ்வர். சூழலுக்கேற்ப மக்கள் வாழாது தமது குலப்பண்புக்கேற்ற வகையில் வாழ்வதே சிறப்பான உயர்ந்த வாழ்க்கையாகும்."

"காட்டில் உள்ள பாடசாலையில் மிருகங்களின் குட்டிகள் கல்வி பயின்று வந்தன. யானையின் குட்டியும் குதிரையின் குட்டியும் மிகவும் தூய்மையாக எந்நேரமும் இருக்கும். மிகவும் மகிழ்ச்சியுடன் மற்றைய மிருகங்களின் குட்டிகளுடன் விளையாடும். யானைக் குட்டி தனக்கு மதிய உணவு கொண்டு வரும். அது தனது நண்பனான குதிரைக் குட்டிக்குக் கொடுக்கும். குதிரைக் குட்டியும் யானைக் குட்டிக்குக் கொடுக்கும். யானைக் குட்டி விதம் விதமான விளையாட்டுப் பொம்மைகள் கொண்டு வந்து எல்லா மிருகங்களுக்கும் கொடுத்து விளையாடும். எருமைக் கன்றின் பெற்றோர் மிகவும் வறியவர்கள். அதனால் அது நல்ல உடை உடுத்தி வராது. மதிய உணவு கொண்டு வராது. யானைக்குட்டி தனக்கு கொண்டு வந்த உணவைத் தான் உண்ணாமல் எருமைக் கன்றுக்குக் கொடுக்கும். தனது பெற்றோரிடம் சொல்லிப் புதிய உடைகள் வாங்கி எருமைக் கன்றிற்குக் கொடுக்கும்."

"பன்றிக் குட்டி வசதியானது. ஆனால் அது தூய்மையாக வராது. உணவு கெண்டு வந்தாலும் மற்றவர்களுக்குக் கொடாது. ஆனால் மற்றவர்களிடம் உணவை வாங்கி உண்ணும். யானைக்குட்டி கொண்டு வரும் விளையாட்டு உபகரணங்களைக் களவாக எடுத்துச் செல்லும். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்பத்

தன்னை மாற்றிக் கொள்ளும். யானையுடனும் குதிரையுடனும் சேர்த்திருக்கும் வேளைகளில் தான் மாமிசம் உண்பதில்லை என்று கூறும். நரியோடு சேர்ந்திருக்கும் பேது, சைவ உணவைக் கண்டால் வயிற்றைப் புரட்டுகிறது என்று கூறும். நரியினது வீட்டுக்குச் சென்று நரியோடு வேட்டையாடும். கண்டவர்களிடமெல்லாம் கடன் வாங்கும். பின் அதைக் கொடுக்காது ஏமாற்றும்"

"யானை இளகிய மனம் படைத்தது. ஒருமுறை பன்றி, நரியிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று அதைக் கொடுக்காது ஏமாற்றி வந்தது. நரி பன்றியைப் பிடித்து மரத்தோடு கட்டியது. அவ்வழியால் வந்த யானையைக் கண்டதும் நரி அழுதது. யானை "இனிமேல் கடன்படாதே" என்று கூறி பன்றி பட்ட கடனைத் தீர்த்தது. அதன் பின் நரி "நான் யானையிடம் பணம் கொடுத்து வைத்திருக்கிறேன். வாங்கித் தருகிறேன்" என்று கூறிக் கடன்படும். பின் கொடுக்காது. பலர் வந்து யானையிடம் முறையிட்டுப் பணத்தைக் கேட்பர். யானை; "இனிமேல் பன்றிக்குக் கடன் கொடுத்து விட்டு என்னிடம் வராதீர்கள்" என்று கூறிக் கொடுக்கும்."

"ஒருமுறை காட்டில் மழை பெய்ததால் பெரும் பஞ்சமேற்பட்டது. யானை தன்னிடம் உள்ள தானியங்களை மற்றைய மிருகங்களுக்கும் கொடுத்துச் சாப்பிட்டது. பன்றி வசதியான மிருகங்களிடம் சென்று பிச்சை கேட்டு வாங்கி அவற்றைக் கூடுதலான விலைக்கு விற்று மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்தது. அன்பானவர்களே, கீழானவர்கள் ஒழுக்கத்தின் மூலம்

தம்பெருமையை உயர்த்திக் கொள்ளுதல் வேண்டுமே தவிர சூழ்நிலைக்கேற்றவாறு பறவைகளைப் போல வாழக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஓரும் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்***
***தேரும் திறமரிதால் ; தேமொழி! – யாரும்***
***குலக்குல வண்ணத்த ராகுப; ஆங்கே***
***புலப்புல வண்ணத்த புள்***

பறவைகளைப் போலச் சூழ்நிலைக்கேற்ப மனிதன் வாழாது உயர்ந்த பண்புகளுடன் வாழ வேண்டும். "**புலப்புல வண்ணத்த புள்**" என்பது பழமொழி.

31 "அன்பானவர்களே, நாடறிந்த புகழினை உடைய பெரியவர்கள் தமது செல்வம் முழுவதையும் இழந்து தளர்ச்சியுற்றிருந்த காலத்திலும் பிறரொருவருக்குத் தாழ்ந்து போக மாட்டார்கள். வாடிப் போய் நரம்புகள் யாவும் சுருங்கிப் புலி கிடந்தாலும் நாயானது அதன் அருகிற்சென்று முகர்ந்து பார்க்காது. அது போல உயர்ந்த தனவந்தரான ஒருவர் தனது பொருட்களையெல்லாம் இழந்த போதும் அவருடன் சரிநிகராக அமரக் கீழானவர்கள் அஞ்சுவார்கள்."

"அருணாசலம் பெரும் வர்த்தகர். அவர் கடல் கடந்து சென்று வாணிபம் செய்பவர். அவரிடம் கப்பல் ஒன்றிருந்தது. அதில்

அவர் பொருட்களை ஏற்றிப் பிறநாடுகளுக்குக் கொண்டு சென்று விற்று விட்டு, அந்நாடுகளில் உள்ள பொருட்களைத் தனது நாட்டிற்குக் கொண்டு வந்து விற்பார். அவர் இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாதவர். அவ்வூரில் நல்ல செயல்கள் செய்பவர்கள் அவரிடம் தான் முதன் முதலாகப் பொருளைப் பெறுவர். அவரிடம் பொருள் பெற்று அவரது கையால் தொடக்கப்படும் விடயங்கள் யாவும் விரைவாகச் செயற்படத் தொடங்கி விடும்"

"அவரது கப்பல் பொருட்களை ஏற்றிக் கொண்டு வரும் போது பெரும் சூறாவளி மூன்று நாட்கள் தொடர்ந்து வீசியது. சூறாவளி நின்று பதினைந்து தினங்கள் கழிந்த போதும் கப்பலைப் பற்றிய எந்தச் செய்தியும் அவருக்குக் கிடைக்கவில்லை. நாட்கள் நகர்ந்து மாதங்களாகியும் எந்தச் செய்தியும் வரவில்லை. சூறாவளி வீசிய அன்று பல கப்பல்கள் கடலில் மூழ்கியதாக அரசாங்கம் செய்தி வெளியிட்டது. அருணாசலம் இடிந்து போனார். அவர் வியாபாரம் செய்வதற்காக ஏராளமான பணத்தைக் கடனாகப் பெற்றிந்தார். அதை அவரிடம் இருந்த நில புலன்களை விற்று அடைத்தார். குடியிருக்கும் வீடு ஒன்று தான் அவரிடம் எஞ்சியிருந்தது"

"அவ்வூர் மக்கள் ஊர்ச்சிவனுக்கு ஓர் அலங்காரத் தேர் செய்ய விரும்பினர். அதற்காக ஊரில் பணம் சேகரிக்க முடிவு செய்தனர். அவ்வூரில் பல பணக்காரர் இருந்தனர். துரைசிங்கம்

என்பவன் பெரும் வர்த்தகன். அவன் அருணாசலம் கொடுக்கும் பணத்திலும் பார்க்க் கூடுதலான தொகையைக் கொடுப்பான். ஆனால் ஒழுக்கமாக வாழ மாட்டான். ஊரவரின் பொருட்களைக் குறைந்த விலையில் வாங்குவான். அவனிடம் கடனாகப் பொருட்களை வாங்குவோர் அவன் சொல்லும் விலைக்கே தமது விளைபொருட்களைக் கொடுப்பர். அத்துடன் ஊரில் உள்ள எவரும் அவனை மதிப்பதில்லை. ஊரவர் ஏதாவது செய்ய முற்படும்போது அரணாசலத்தையே முன்வைத்துச் செய்வர். அது துரைசிங்கத்திற்குப் பிடிப்பதில்லை”

“தேர் செய்வதற்கு முதல் முதலில் அருணாசலத்திடஞ் செல்ல ஊரவர்கள் பயந்தனர். அவர் இப்பொழுது உணவுக்கே வழியில்லாமல் இருக்கிறார் என நினைத்துத் துரைசிங்கத்திடம் சென்றனர். துரைசிங்கத்திற்குப் பயமாக இருந்தது. முன்பொரு முறை கோயில் மண்டபம் கட்டத் துரைசிங்கத்திடம் சென்று முதல் முதலாகப் பணம் பெற்றனர். பத்து வருடங்கள் கழிந்தும் இன்னும் அக்கட்டிடம் பூர்த்தியாகவில்லை. அதனால் ஊரவர்கள் துரைசிங்கத்தை இராசியில்லாதவன் என்று திட்டிக் கொண்டிருந்தனர். அதை அறிந்த துரைசிங்கம் சொன்னான்; “நீங்கள் என்னிடம் வந்தது சரியில்லை. ஊரவர் அருணாசலத்திடம் தான் வழமையாக முதல் முதலில் சென்று பணம் வாங்குவர். எனவே அவனிடஞ் சென்று வாங்குங்கள். அவர் தனக்கு வசதியானதைத் தரட்டும்” என்றான்”

"ஊரில் பலர் அதைத் தான் விரும்பினர். இருப்பினும் அவரிடஞ் சென்று பணத்தைப் பெற்றால் துரைசிங்கம் பணம் தரமாட்டான் என்பதற்காகவே அவனிடம் வந்தனர். ஊரவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அருணாசலத்திடம் சென்றனர். அருணாசலம் தனது மகளின் கழுத்தில் இருந்த ஒரு சிறிய தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தார். அதனால் அன்பானவர்களே, குணத்தால் உயர்ந்தவனை மதிக்காமல் விடும் தன்மை கீழானவர்களுக்கும் இருக்காது. கீழானவர்கள் பெரும் தனவந்தராக இருந்தாலும் பொறுப்பேற்க அஞ்சுவர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நாடறியப்பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து***
***வாடிய காலத்தும் வட்குபவோ! – வாடி***
***வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்***
***புலித்தலையை நாய்மோத்தல் இல்.***

புலி வாடித் தளர்ந்திருந்தாலும், நாய் அஞ்சாமற் சென்று அதை முகர்ந்து பார்க்காது. அதுபோலப் பெரியோர் வறுமையுற்ற போதும் சிறியோர் அவரை மதிப்பர். "**புலித்தலையை நாய் மோத்தல் இல்"** என்பது பழமொழி.

32 "அன்பானவர்களே, கயவர்கள் எதைப் பற்றியும் சிந்திக்க மாட்டார்கள். தமது நன்மைக்காக அவர்கள் எத்தகைய நன்மைகளைச் செய்தவர்களையும் ஆராய்ந்து பாராது விரோதித்துக் கொள்வார்கள். இவர்கள் மிகவும் இழிந்த மனம் படைத்தவர்கள். அத்துடன் தம்மை விட இழிந்த மனம்

படைத்தவர்களுடன் தான் நட்பு வைப்பார்கள். அந்த நட்பும் தேவையைப் பொறுத்துத் தான் வைக்கப்படும். இவர்கள் தமது முகத்தைக் குத்தி உடைக்கும் முரடர்களுக்கு மட்டும் அச்சம் காரணமாகப் பெரு மதிப்புக் கொடுத்து நடப்பார்கள். சுற்றத்தவர்கள் நன்றாக வாழ்வது அவர்களுக்குப் பிடிக்காது. அத்துடன் பெரியவர்களின் புத்திமதிகளும் பிடிக்காது. அதனால் கயவர்களின் கருத்தை உணர்ந்து அவர்களோடு நெருங்கிப் பழகுதல் கூடாது. அவர்களைக் கண்டால் விலகிச் சென்று விடல் வேண்டும்.”

“அதை விட்டு விட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் கூறினால், கூறுபவர்களுக்கு அதனால் துன்பம் உண்டாகும். அது புலியின் மீது இரக்கப்பட்டு அதன் முகத்திலே இருந்து இரத்தத்தை உறிஞ்சும் உண்ணியை எடுத்துவிட முயல்வதைப் போன்றதாகும்”

“முல்லை வனத்தில் வாழ்ந்த எலிகள் காட்டில் இருந்த வெளியான இடங்களைத் துப்பரவு செய்து பயிரிட்டன. பயிரிட்ட தானியங்களை அறுவடை செய்து நிலத்தின் கீழ்க் களஞ்சிய அறைகள் அமைத்துப் பாதுகாத்தன. அம்முறை பருவ மழை பெய்யவில்லை. அதனால் காட்டில் உள்ள மரங்கள் யாவும் வாடின. சில மரங்கள் பட்டுவிட்டன. உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால் எலிகளின் குடும்பம் மிகவும் வசதியாக வாழ்ந்து வந்தது. அதைக் கண்ட பன்றி எலிகளிடஞ் சென்றது. பன்றியைக் கண்ட எலிகளின் தலைவன் சொன்னது; “காட்டில் வாழும் மிருகங்களில் மிகவும் கெட்டவனான பன்றியுடன் உறவு வைக்கக் கூடாது.

பசியென்று உணவு கேட்டால் மட்டும் கொடுங்கள். பன்றி இழிந்த மனம் படைத்தது. அது உதவி செய்பவர்களுக்கே தீங்கு செய்யும் இயல்புடையது கவனம்" என்றது.

"சுண்டெலியுடன் பன்றி காட்டில் கதைப்பதுண்டு. அதனால் பன்றி சுண்டெலியிடம் சென்று சொன்னது ; "நண்பா, நானும் எனது மனைவி பிள்ளைகளும் பசியால் துன்பப்படுகிறோம். காட்டில் உள்ள மரங்கள் மழை பெய்யாததால் காய்க்கவில்லை. நீ உணவுக்கு என்ன செய்கிறாய்?" என்று கேட்டது"

"நாங்கள் தானியங்களைப் பயரிட்டுக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கிறோம். முன்பும் இப்படியான ஒரு பஞ்சம் ஏற்பட்டு எமது இனத்தவர்கள் பலர் இறந்து விட்டனர். அதனால் தேவை ஏற்படுமென்பதற்காகப் பயிர்களைச் செய்து தானியங்களைச் சேமித்து வைத்துள்ளோம். நீங்களும் காட்டில் உள்ள தரிசு நிலங்களில் பயிரிட்டுத் தானியங்களைச் சேமித்து வையுங்கள். பஞ்சமேற்படும் காலங்களில் அவை உதவும்" என்று கூறிப் பன்றிக்குப் பயறு, உழுந்து , எள்ளு, கடலை, நெல் போன்ற தானியங்களைக் கொடுத்தது; "இவ்வளவு தானியங்களை எனக்குத் தருகிறாய். உன்னிடம் ஏராளமான தானியங்கள் இருக்கிறதா?" என்று கேட்டது." பன்றி.

"சுண்டெலி தனது தானியக்களஞ்சியத்தைப் பன்றிக்குக் காட்டியது. அங்கே பெருந்தொகையான தானியங்கள் இருந்தன.

பன்றி திகைத்துப் போனது. எமது குடும்பத்திற்கே ஒரு வருடத்திற்குப் போதும். எலியிடம் தினமும் கேட்க முடியாது. முழுவதையும் திருட வேண்டும்" என்று நினைத்தது"

"அன்று இரவு பன்றிகள் சுண்டெலியின் தானியங்களைத் திருடிச் சென்றன. விடிந்ததும் சுண்டெலி தானியக் களஞ்சியம் வெறுமையாக இருப்பதைக் கண்டு திகைத்துப் போனது. அதை அது தனது தலைவனுக்கு அழுதழுது சொன்னது".

"சுண்டெலியே, கயவருடன் உறவாடக் கூடாது. அதை விடக் கயவருக்கு இரகசியங்களைச் சொன்னால் அவர்கள் வலியச் சென்று பிறருக்குச் சொல்வார்கள். பிறர் உடுப்பதையும் உண்பதையும் கண்டால் அவரின்மேற் பொறாமை கொண்டு அவர்களுக்கு வேண்டுமென்றே துன்பஞ் செய்வார்கள். கயவர்களுக்குச் சொல்லும் புத்திமதியானது புலியின் முகத்திலிருந்து இரத்தத்தை உறிஞ்சும் உண்ணியை இரக்கம் காரணமாக எடுத்து அதற்குப் பலியாவதைப் போன்றதாகும்" என்றது. அதனால் அன்பானவர்களே, கேட்டு நடக்கக் கூடிய நல்லவர்களுக்குத் தான் புத்திமதிகள் கூறுதல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைமிக***
***நண்ணி யவர்க்கு நலனுடைய செய்பவேல்,***
***எண்ணி இடர்வரும் என்னாம், புலிமுகத்து***
***உண்ணி பறித்து விடல்***

கயவர்களுக்கு இரக்கப்பட்டு நன்மை செய்வது கூடத் தீமையாகவே முடியும். **“புலி முகத்து உண்ணி பறித்து விடல்”** என்பது பழமொழி. பாம்புக்குப் பால் வார்த்தல்’ என்பதும் இதே கருத்துடையது தான்.

**33** ‘‘அன்பானவர்களே, புலி ஒரு மானைக் கொன்று தின்பதற்காகக் கலைத்துக் கொண்டு வந்தால், அதற்குப் புகலிடம் கொடுக்க யாரும் முன்வரமாட்டார்கள். அது போலச் சூறாவளி வீசும் போது எதிரே இருக்கும் வைக்கோற்குவியல் நிலைத்து நிற்காது. ஆகவே ஆற்றலுடையவர்கள் தீமையான கொடிய செயல்களைச் செய்த போதும் அறிவுள்ளவர்கள், அதற்காக ஆற்றல் உள்ளவர்களை எதிர்க்க மாட்டார்கள். ஆற்றல் உள்ளவன் ஆராய்ந்து பார்த்து நீதியுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அப்படி நடக்காதவன் தன்னை எதிர்பவர்களைக் கடுமையாகத் தண்டிப்பான்”

“சிங்கவனம் மிகப் பெரிய காடு. ஆயிரக்கணக்கான மிருகங்கள் அங்கு வாழ்ந்து வந்தன. அரசனான சிங்கம் ஓர் அமைச்சரவையை அமைத்துத் திணைக்களங்களைப் பிரித்துக் கொடுத்திருந்தது. கல்வித் திணைக்களத்திற்குத் தலைவராக எருமையை நியமித்தது. சிங்க வனத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருந்தன. அவற்றிற்கு ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்ப ணிப்பாளர்களை எருமை சிங்கத்தின் சிபார்சுடன் நிமிக்கும். முயல் காட்டில் இருக்கும் ஆரம்பப்பாடசாலை ஒன்றின்

ஆசிரியர். அது சிறந்த பாடசாலை. காட்டு மிருகங்களெல்லாம் அப்பாடசாலையில் தனது குட்டிகளைச் சேர்க்கப் பெரும் பிரயத்தனப்படும். பாடசாலைக்கு மிருகங்களின் குட்டிகளைச் சேர்க்கும் போது பணம் வாங்கக் கூடாதென்று சிங்கம் கடும் சட்டமிட்டிருந்தது. எனினும் எருமை பெருந்தொகையாகப் பணத்தைப் பெற்றுச் சிங்கத்திற்குக் கொடுக்கும். அதனால் சிங்கம் எதுவும் தெரியாதது போல இருக்கும்.”

“கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பாக இருந்த கல்விப் பணிப்பாளர் ஓய்வு பெற்றமையால் அப்பதவிக்கு எருமை விண்ணப்பம் கோரியது. எல்லோரும் முயல் தான் தகுதியானவர் என்று சொன்னதால் முயல் அப்பதவிக்கு விண்ணப்பித்தது. ஆனால் அப்பதவி ஆரம்பக்கல்வி பற்றி எதுவும் தெரியாத கணிதபாட ஆசிரியருக்குக் கொடுக்கப்பட்டது. அதையிட்டு முயல் கவலைப்பட்டதே தவிர வெளியே சொல்லவில்லை. அதை அறிந்த முயலின் நண்பனான பன்றி வந்து முயலுக்குச் சொன்னது ; “நண்பா, நீ சிங்கத்திற்கு முறைப்பாடு செய்” எருமை முன்பும் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் போது, அதிபர் தரம் இல்லாதவர்களைத் தான் நியமித்தது. பெரிய பாடசாலைகளுக்கு எருமையின் இனத்தவர்களும் நண்பர்களும், பணம் கொடுப்பவர்களும் தான் நியமிக்கப்பட்டனர். சிறிய பாடசாலைகளுக்குத் தான் தரம் ஒன்று அதிபர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அத்துடன் எட்டு வருடங்கள் ஒரு பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களை வேறு பாடசாலைக்கு

இடமாற்றம் செய்வதாகக் கூறி இடமாற்றம் செய்கிறார்கள். ஆனால் செல்வாக்குள்ளவர்கள் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய போதும் இடமாற்றம் செய்யப்படவில்லை. இப்போது ஆரம்பக்கல்வியில் திறமை மிக்க உன்னை ஒதுக்கி விட்டுக் கணித பாட ஆசிரியருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதை விடக் கூடாது" என்று ஆவேசமாகக் கத்தியது பன்றி"

"நண்பா, உனது கோபம் நியாயமானத தான். ஆனால் தலைமைப் பதவியில் இருப்போர் நீதியை ஆராய்ந்து தர்மமான முறையில் நடத்தல் வேண்டும். அப்படி நடக்கா விட்டால் பாதிக்கப்பட்டவர்கள் என்ன செய்ய முடியும்? புலியொன்று மானைத் துரத்தி வந்தால் அதைக் காப்பாற்ற யாருக்கும் துணிவு வராது. அது போல வெட்ட வெளியான இடத்தில் வைக்கலைக் குவித்து வைத்தால் பலமான காற்று வீசும் போது வைக்கோல் பறந்து சென்று விடும். தலையால் மலைக்கு மோதினால் பாதிக்கப்படுவது தலை தான். அதனால் நான் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை" என்றது முயல்"

"முயலை ஏவி வேடிக்கை பார்க்க நினைத்த பன்றி சொன்னது;" எமது பிரதேசத்தின் கல்வியை முன்னேற்றற முடியாது. திறமை உள்ளவர்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்கள் விரக்தியடைகிறார்கள். அவர்களால் எப்படிக் கடமையைச் செய்ய முடியும்" என்று கேட்டு விட்டுச் சென்றது பன்றி. ஆகவே அன்பானவர்களே வலிமையுள்ளவர்களுடன் மோதும் போது அது

பற்றி நன்கு ஆராய்ந்த பின்பே முடிவெடுத்தல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தீயன வல்ல செயினும், திறல்வேந்தன்***
***காய்வன சிந்தியார் கற்றறிந்தார் - பாயும்***
***புலிமுன்னர் புல்வாய்க்குப் போக்கில், அதுவே***
***வளிமுன்னர் வைப்பாரம் இல்.***

அதிகாரத்தில் உள்ளவர்கள் தீமைகளைச் செய்தாலும் அதைஅறிவுள்ளவர்கள் பொறுத்துக் கொள்வார்கள். “**புலி முன்னர் புல்வாய்க்குப் போக்கு இல்” “வளிமுன்னர் வைப்பாராம் இல்”** என்பன பழமொழிகள்.

34 “அன்பானவர்களே, ஒருவர் தமக்குரிய ஒரு பொருளை அடைக்கலமாகக் கொடுத்து விட்டுச் சென்று பின் வந்து கேட்டால் உடனே அதைக் கொடுத்து விடல் வேண்டும். அப்படியல்லாது செல்வாக்குள்ளவர் அது தமக்குத் தேவையெனக் கருதிக் காலம் தாழ்த்தக் கூடாது. கீழான வழியில் சேர்க்கும் பொருட்கள் தங்கி நிலைத்திருக்கும் பொருட்களையும் அழித்து விடும். அதனால் அடைக்கலமாகத் தந்த பொருள் உயிரை விட மதிப்பானதாக இருந்தாலும், அதைக் கேட்டவுடனேயே கொடுப்பது தான் தர்மமானது.”

“முல்லை வனத்திலே வாழ்ந்த குதிரை ஒன்று, பசு ஒன்றை மிகவும் பிரியத்துடன் வளர்த்து வந்தது. குதிரை பசுவின் மீதும் பசு குதிரையின் மீதும் உயிரை வைத்திருந்தன. குதிரையின் குட்டிகளும்

அதன் மனைவியும் பசு மீது மிகுந்த அன்பு வைத்திருந்தன. பசுவின் கன்றும் குதிரைக் குட்டிகளும் மாலைவேளைகளில் காட்டில் ஆனந்தமாகச் சுற்றுலாச் செய்யும். காட்டின் நடுவேயுள்ள மலையிலிருந்து ஊற்றெடுத்து ஓடி வரும் அருவி நீரில் குதிரைக் குட்டிகளும் பசுக்கன்றும் நீந்தி விளையாடும். குதிரையின் சகோதரிக்குப் பசுவின் கன்றின் மீது பெரும் விருப்பம் உண்டு. அதனால் அது பசுக்கன்றைத் தனக்குத் தரும்படி கேட்டது. குதிரை கொடுத்து விட்டது. குதிரையின் சகோதரி பசுக்கன்றைத் தான் வாழும் காட்டிற்குக் கொண்டு சென்று விட்டது"

"குதிரைக்கு வெகு நாட்களாகத் தனது சகோதரியின் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை இருந்தது. நேரமின்மையால் அது செல்லவில்லை. குதிரையின் சகோதரியின் மகனுக்குத் திருமணம் நடைபெற இருந்தது. அதற்குக் குறைந்தது இரண்டு வாரகாலமாவது வந்து தனது வீட்டில் தங்க வேண்டும் என்று குதிரையின் சகோதரி, குதிரைக்கு அன்புக் கட்டளையிட்டது. அதைக் குதிரை ஏற்றுக் கொண்டது"

"குடும்பத்துடன் திருமணத்திற்குச் செல்ல நினைத்த குதிரை, தான் அன்பாக வளர்த்த பசுவைத் தனது நண்பனான பன்றியிடம் கொடுத்து விட்டுச் சென்றது. பன்றியிடம் இரு பசுக்கள் நின்றன. குதிரை வளர்த்த பசுவின் மீது ஏற்கனவே ஒரு கண் வைத்திருந்த பன்றி, குதிரையின் பசுவைத் தந்திரமாகக் கவர எண்ணியது"

“திருமணம் முடிந்ததும் குதிரை வந்து பன்றியிடம் தனது பசுவைக் கேட்டது. பன்றி பெரும் துயரப்பட்டவனைப் போல நடித்து விம்மி விம்மி அழுதழுது சொன்னது; “ நண்பா, சில தினங்களுக்கு முன் எனது பண்ணைக்குள் புகுந்த காட்டுப் புலியென்று உனது பசுவையும் எனது இரண்டு பசுக்களையும் கொன்று விட்டது” என்றது”

“குதிரைக்குத் துயரமாக இருந்தது. எனினும் நண்பனான பன்றி சொன்னதைக் கேட்டுப் பெருந்துன்பத்துடன் தனது வீட்டுக்குச் சென்றது. வழியில் அதைச் சந்தித்த முயல் சொன்னது; “நண்பனே, உனது பசு நல்ல இனத்தை உடையது. அதனால் பன்றி வஞ்சகமாக நடந்து அதைத் தனதாக்கிக் கொண்டது. உண்மையில் அதன் பண்ணைக்குள் புலி நுழையவில்லை” என்று கூறிக் குதிரையைப் பன்றியின் பண்ணைக்கு அழைத்துச் சென்றது. குதிரையைக் கண்ட பசு பாச மேலீட்டால் கதறியது. எனினும் குதிரை எதுவும் பேசாது அழுதழுது சென்றது”

“அந்தக் காட்டில் வசிக்கும் நரிக்கும் பன்றிக்கும் அடிக்கடி முரண்பாடு வரும். பன்றி வளர்க்கும் காட்டு நாய்கள் அடிக்கடி நரியைத் தாக்கிக் கடிக்கும். அதனால் பன்றியின் பசுக்களைக் கவர வேண்டும் என்று நரி திட்டமிட்டது. ஒரு நாள் நரி அயற் காட்டில் வசிக்கும் புலிக்கு நரியின் பசுக்களைப் பற்றிக் கூறி, அவற்றைத் திருடுமாறு கேட்டுக் கொண்டது. புலி தனது நண்பர்களான வேறு இரண்டு புலிகளையும் அழைத்துக் கொண்டு பன்றியின்

பண்ணைக்கு வந்தது. புலிகளைக் கண்ட நாய்கள் பயத்தால் மிரண்டு ஓடி விட்டன. நரியும், புலியும் பண்ணைக்குள்ச் சென்று பன்றி வளர்த்த பசுக்களை அவிழ்த்துக் கொண்டு வந்தன. குதிரையின் பசுவைக் கண்ட நரி அதை அவிழ்த்து விட்டது. அது குதிரை இருக்கும் வீட்டுப் பக்கமாகச் சென்றது”

“பசு தனது வீட்டுக்கு வந்ததைக் கண்ட குதிரை மிகவும் மகிழ்ந்து அதற்கு உணவு கொடுத்தது. மறு நாள் காவல் துறையினருடன் பன்றி குதிரையின் வீட்டுக்கு வந்து தனது பசுக்களைக் குதிரை திருடி விட்டது என்று சொன்னது”

“குதிரை அதுதான் வளர்த்த பசு என்று கூறியது. காவல்துறை அதிகாரி அதற்கு ஆதாரம் கேட்டார். உடனே குதிரை தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்று தான் கொடுத்த பசுக்கன்றை வாங்கி வந்தது. பசுக்கன்று மிகவும் மகிழ்ச்சியுடன் தாய்ப் பசுவில் பால் குடித்தது. அப்போது அங்கு வந்த நரி சொன்னது ; “ இது குதிரை வளர்த்த பசு. எனக்குத் தெரியும்” என்றது. அதை நம்பிய காவல் துறை அதிகாரி பசுவைக் குதிரையிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார். ஆகையால் அன்பானவர்களே, ஒரு போதும் அடைக்கலமாகத் தந்த பொருட்களைக் கவர எண்ணாதீர்கள். தவறிக் கவர எண்ணினால் உங்கள் பொருள் அனைத்தும் அழிந்து விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உள்ள தொருவர் ஒருவர்கை வைத்தக்கால்***
***கொள்ளும் பொழுதே கொடுக்கத் தாம் - கொள்ளார்***
***நிலைப்பொருள் என்றதனை நீட்டித்தல் வேண்டா***
***புலைப்பொருள் தங்கா வெளி***

அடைக்கலமாக ஒப்படைத்த பொருளைத் தனதாக்க எண்ணுபவனின் செல்வம் அழிந்து விடும் “**புலைப்பொருள் தங்கா வெளி**” என்பது பழமொழி.

35 “அன்பானவர்களே, அறம் உணர்ந்த அறிவுடைய பெரியோர்களைத் தமக்குத் துணையாக்கிக் கொள்ளும் வல்லமை உள்ளவன், தான் நினைத்தவற்றையெல்லாம் சாதிப்பான். அவனது புகழ் ஓங்கும். வந்த துன்பங்களை நீக்கும் வழிகளையும், வரப்போகும் துன்பங்கள் இன்னதென்று அறியக்கூடிய பெரியவர்களைத் துணையாக்குபவனுக்கு வாழ்நாளில் துன்பங்களே வராது. இத்தகைய பெரியவர்களைப் போற்றி, அவர்களைத் தனது சுற்றமாக்கிக் கொள்ளும் வல்லமை அறிவிற் சிறந்தவர்களுக்கு மட்டுமே இருக்கும். இவர்கள் தமது அறிவைப் பெரியவர்களைக் கொண்டு செம்மைப்படுத்திக் கொள்வார்கள். இத்தகைய வல்லமையுடையவர்களைப் பகைவர்களாற் கூட எதுவும் செய்ய முடியாது. பெரியவர்கள் தவறு செய்யும் போது கண்டித்துத் திருத்துவார்கள், நன்மை செய்யும் போது பாராட்டி

ஊக்கமளிப்பார்கள். இதனால் பெரியவர்களைத் துணையாகக் கொண்டவர்களுக்குப் பகைவர்களாற் கூடத் தீமை செய்ய முடியாது”

“அருணன் மிகவும் வறியவன். இருப்பினும் பெரியவர்களின் உதவியோடு நன்கு கற்றவன். எனினும் வறுமையுடையவனாகவே இருந்தான். அவன் விவசாயம் செய்பவன். அவன் அவ்வூரில் வாழும் பெரியவர்களை மதித்து அவர்களுக்குச் சேவை செய்து வந்தான். தான் விளைவிக்கும் பொருட்களில் மிகவும் தரமானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை அவன் அவ்வூரில் வாழ்ந்த பெரியவர்களுக்குக் கொடுப்பான். எஞ்சியவற்றை மலிவான விலைக்கு விற்பான்”

“நல்ல பொருட்கள் தினமும் கிடைப்பதால் அவ்வூர் பெரியவரான வேலாயுதம் சொன்னார் ; “ மகனே, நீ மிகவும் நல்லவன், ஒழுக்கமுள்ளவன், தர்மமான முறையில் வாழ்பவன். அதனால் என்னிடமுள்ள சிறுதொகைப்பணத்தைத் தருகிறேன். நீ ஒருவர்த்தக நிலையம் அமை”என்றார். அவன் வேலாயுதத்தின் அறிவுரையைக் கேட்டு ஒரு சிறிய வர்த்தக நிலையம் அமைத்தான். அவன் வர்த்தக நிலையம் அமைத்த பின் வேலாயுதம் சொன்னார் ; “மகனே, இலாபத்தில் ஆசை வைக்காதே, கலப்படம் செய்யாதே, நிறை குறைத்து விற்பனை செய்யாதே. அப்படிச் செய்தால் நீ ஒரு காலத்தில் குபேரனாவாய்” என்றார்”

“வேலாயுதத்தின் சொற்களை மந்திரமாக ஏற்று அருணன் செயற்பட்டான். அதனால் அவ்வூரவர்கள் அவனிடம் பொருட்களை வாங்கினர். வர்த்தக நிலையத்திற்குப் பொருட்கள் போதாதிருந்தது. அதைக் கண்ட அவ்வூரில் வாழும் இன்னொரு பெரியவரான அருணாசலம் அவனது வர்த்தக நிலையத்திற்கு வந்தார். அருணன் அவரை வணங்கி வரவேற்றான். அவனிடம் பொருட்களை வாங்குபவர் அவர்; “மகனே, உன்னிடம் போதியளவு பணமின்மையால் பெரும் சிரமம்படுகிறாய். நீ நம்பிக்கையானவன். அதனால் நான் உனக்கு வேண்டியளவு பணம் தருகிறேன். உனது வர்த்தக நிலையத்தைப் பெருப்பி” என்றார்”

“சில நாட்களில் அருணன் தனது வர்த்தக நிலையத்தைப் பெருப்பித்தான். பட்டணத்தில் அவன் கொள்வனவுசெய்யும் அருமைநாதன் என்ற வர்த்தகன், அருணன் தன்னை மதிக்கும் தன்மையையும், ஒழுங்காகப் பொருட்களுக்கான பணத்தைத் தரும் தன்மையையும் கண்டு கடனாக இரும்புப் பொருட்களையும், மரத் தளபாடங்களையும் கொடுத்தான். இப்போது அருணன் பெரும் வர்த்தகன். ஆனாலும் தனக்குதவி செய்த பெரியவர்களை அடிக்கடி சந்தித்து ஆசி பெறுவான்”

“அருணனின் வியாபார நிலையம் அமைக்கப்பட்ட பின்பு ஊரில் முன்பே வியாபார நிலையம் அமைத்து வியாபாரம் செய்த கருணாகரன் தனது வியாபார நிலையத்தை மூட வேண்டிய நிலைக்குட்பட்டான். அதனால் அவன் அருணனுக்குத் தீமைகள்

பலவும் செய்தான். ஒரு நாள் அருணனைத் தாக்குவதற்காகத் தீயவர்கள் சிலரை அணுகிப் பெரும் பொருள் தருவதாகக் கூறி அருணனைக் கொல்லும்படி கூறினான்"

"அதற்கு அத்தீயவர்களில் ஒருவன் சொன்னான் ; "ஐயா, அருணன் ஊர்ப் பெரியவர்கள் மீது மதிப்பும் மதியாதையும் வைத்திருப்பவன். அதனால் அவனுக்குத் தீமைகள் செய்ய முடியாது. அத்துடன் என்னுடன் சேர்ப்பவர்கள் பலர் ஊர்ப் பெரியவர்களுக்குப் பயந்து நடப்பவர்கள். அவர்களில் தங்கி வாழ்பவர்கள். அதனால் அவர்களிடம் எதையும் நம்பிச் சொல்ல முடியாது. அதை விட அருணனின் வர்த்தக நிலையத்தில் எனது மனைவியும் மகனும் வேலை செய்கின்றனர். அவர்கள் அறிந்தால் நான் வீட்டுக்குச் செல்ல முடியாது. அதனால் என்னால் முடியாது" என்றான். அத்துடன் கருணாகரன் கூறியதை அவன் வேலாயுதத்திற்குச் சொன்னான். அதனால் பெரும் பிரச்சனைகள் உருவாகின. ஆகையால் அன்பானவர்களே, பெரியவர்களைத் துணையாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குத் துன்பங்கள் வராது. வல்லமையுள்ளவன் அறிவுள்ள பெரியவர்களைத் துணையாக்கிக் கொள்வது பழகிய ஓர் எருதைக் கொண்டு பழகாத மற்றைய எருதுகளைப் பழக்கித் தனது பணிகளைச் செய்விப்பது போன்றதாகும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்*
*நல்ல பிறவும் உயர்வாரைக் கட்டுரையின்*
*வல்லிதின் நாடி வலிப்பதே, புல்லத்தைப்*
*புல்லம் புறம்புல்லு மாறு*

வல்லமையுள்ளவன், அறிவுடைய பெரியவர்களைத் தனது சுற்றமாக்கித் தனது செயல்களை நல்ல முறையில் செய்து பயனடைவான். **“புல்லத்தைப் புல்லம் புறம் புல்லுமாறு”** என்பது பழமொழி.

36 அன்பானவர்களே, ஒவ்வொருவரும் தாம் யாரோடு சேர வேண்டும், யாரோடு சேரக்கூடாது என்பதைத் தெரிந்து வைத்திருப்பதோடு தன் சுற்றத்தினருக்கும் அது பற்றிக் கூறுதல் வேண்டும். அறவழியில் வாழும் பெரியவர்களைத் தவிர வேறு எவரோடும் சேர்ந்திருத்தால், சேர்ந்தவர் தீய செயல்களைச் செய்யாவிட்டாலும், சேர்ந்திருப்பவர் செய்யும் பழி பாவங்கள் யாவும் சேர்ந்தவரையும் தாக்கும். பழி பாவங்களை அஞ்சாது செய்பவர்கள், பிறர் மீது சற்றும் இரக்கமில்லாதவர்கள், எப்பொழுதும் தீய செயல்களையே செய்து மகிழ்பவர்கள். ஆகியோருடன் நல்லவர்கள் சேரக்கூடாது. இவர்களுடன் சேர்ந்து இன்புற்று மகிழ்ந்து வாழ்வோர், புழுவைத் தனது புண்ணுள் வைத்துப் புண்ணைப் பொதிந்து கட்டி வைப்பவர் போன்றவராவர்”

“கந்தவனம் மிகவும் நல்லவர். தான தருமங்கள் செய்பவர். பிறரின் மீது இரக்கமுள்ளவர். அந்தக் இரக்கத்தின் காரணமாகச் சின்னத்துரை என்பவனுக்கு உதவி செய்தார். சின்னத்துரை பழிபாவங்களுக்கு அஞ்சாதவன். களவெடுப்பவன். நல்ல செயல்களைச் செய்யாதவன். அவன் அடிக்கடி கந்தவனத்தின்

வீட்டுக்குச் செல்வான். தனது குடும்பநிலையைப் பற்றிச் சொல்வான். அதனால் மனம் இரங்கிய கந்தவனம் சின்னத்துரைக்குப் பொருளுதவிகள் செய்வார். சின்னத்துரை கந்தவனத்தை மிகவும் மதிப்பான். அவர் சொல்லும் வேலைகளை உடனே செய்து முடிப்பான். அவரது கால் நடைகளுக்கு மாலையில் புல்லுக் கொண்டு வந்து கொடுப்பான். அவன் இவற்றையெல்லாம் ஒரு திட்டத்துடன் தான் செய்து வந்தான். அதை அறியாத கந்தவனம் அவனின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்"

"சின்னத்துரை திருடுபவன். அவன்தான் திருடிய பொருட்களைப் புல்லுக்கொண்டு வரும் சாக்குக்குள் வைத்துக் கந்தவனத்தின் வீட்டுக்குக் கொண்டு வந்து அங்கே மறைத்து வைப்பான். பின் அதை விற்கும் போது அவதானமாக எடுத்து விற்பனை செய்வான். கந்தவனம் நல்லவராக இருந்தாலும், அவர் சின்னத்துரையை வீட்டில் அனுமதித்து வைத்திருப்பதை அவரின் உறவினர்கள் விரும்பவில்லை. அவரின் மனைவியின் தகப்பனார் ஒரு நாள்ச் சொன்னார் ; "மருமகனே, நீங்கள் மிகவும் நல்லவர். தீய செயல்களை அஞ்சாது செய்யும் சின்னத்துரையை வீட்டில் அனுமதித்திருத்தல் கூடாது. தீயவன் எப்பொழுதும் தீமையைச் செய்து பழக்கப்பட்டவன். அதனால் அவனை விலக்கி வையுங்கள். இலாவிட்டால் பெரும் தீமைகள் உங்களுக்கு உண்டாகும். தீயவரை நல்வராகக் கருதுவது, தனது புண்ணுக்குள்த் தானே புழுவை வைத்துக் கட்டுவது போன்றதாகும்" என்றார்"

"அவரின் புத்திமதிகளைக் கந்தவனம் கேட்கவில்லை ; "தீயவர்கள் திருந்தச் சந்தர்ப்பமளித்தல் வேண்டும்" என்று கூறினார். சில நாட்கள் செல்லக் காவல்துறையினர் சின்னத்துரையின் கைகளுக்கு விலங்கிட்டுக் கந்தவனத்தின் வீட்டுக்கு அழைத்து வந்தனர். காவல்துறை அதிகாரிகள் கந்தவனத்தின் வீட்டின் பிற்பகுதிக்குச் சென்று தேடுதல் நடத்தினர். அங்கே ஊரில் திருடப்பட்ட பல பொருட்கள் புதைத்தும் மறைத்தும் வைக்கப்பட்டிருந்தன. கந்தவனம் அதிர்ந்து போனார். காவல்துறை அதிகாரி கந்தவனத்தையும் கைது செய்து காவல்துறை அலுவலகத்திற்குக் கொண்டு சென்றார்."

'நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த போது நீதிபதி கந்தவனத்தை எச்சரித்தார் ; "ஊரில் யாரும் சேர்க்காத சின்னத்துரையை நீர் உமது நலத்திற்காகச் சேர்த்து வைத்திருக்கிறீர். நல்லவர்போல நடக்கும் நீர், சின்னத்துரையின் திருட்டுக்கு உதவி செய்திருக்கிறீர். அதற்குப் பிரதிபலனாக அவன் உமக்கு வேலைகள் செய்து தந்திருக்கிறான். அதைவிடத் திருட்டுப் பொருட்களை விற்று அதிலொரு பகுதியையும் தந்திருக்கிறான். உமக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கிறேன்" என்றார்"

"கந்தவனம் திகைத்துப் போனார். ஊரவரும் அவரை நம்ப மறுத்தனர். ஆகையால் அன்பானவர்களே, நீங்கள் தவறிக்கூடத் தீயவர்களோடு உறவு வைக்கக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்

*நாணார் பரியார் நயனில செய்தொழுகும்*
*பேணா அறிவிலா மாக்களைப் பேணி*
*ஒழுக்கி அவரோடு உடனுறை செய்தல்,*
*புழுப்பெய்து புண்பொதியு மாறு.*

புழுவை புண்ணுள் வைத்துக் கட்டினால் நோய் அதிகரித்துத் துன்பத்தைத் தருவது போலக் கீழோரின் நட்பும் தீமையையே தரும். "**புழுப்பெய்து புண்பொதியுமாறு**" என்பது பழமொழி.

37 "அன்பானவர்களே, ஒரு செயலைப் பற்றி நன்கு ஆராய்ந்து அதைச் செய்யும் முறைகளையும், செய்வதால் உண்டாகும் நன்மை, தீமைகளையும் உள்ளபடி அறிந்து மன்னர்களுக்குச் சொல்பவர்களுக்கு ஆகாத காரியங்கள் என்று எவையும் இல்லை. இவர்கள் தமது காரியத்தை இலகுவாக முடித்து இலாபமடைவார்கள். அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல் வன்மை யாவும் அமையப் பெற்றாலும், அரசன் விரும்பும்படி நடவாதவர்களால்தமது காரியங்களைச் சாதிக்க முடியாது. அரசரது குறிப்பினை அறிந்து, தகுந்த சமயத்தைப் பார்த்து, வெறுப்பில்லாத செய்திகளையும் விருப்பமான செய்திகளையும் கூறுபவர்களையே அரசன் விரும்பவான்".

"சிங்கவனத்தின் அரசனான சிங்கம் நீதிநெறி தவறாது ஆட்சி புரிந்து வந்தது. அது குற்றஞ் செய்தவர் யாராக இருந்தாலும், அவர்களது குற்றத்தை ஆராய்ந்து பக்கம் சாராது நின்று தக்க

தண்டனை அளிக்கும். மிருகங்கள் தமது குறைகளை நேரிற் சென்று சிங்கத்திடம் கூறும். சிங்கம் நன்கு ஆராய்ந்து பார்த்து நீதி வழங்கும். அதனால் சிங்கவனத்தில் உள்ள மிருகங்கள் யாவும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தன. அதன் முதலமைச்சராக குதிரை இருந்தது. குதிரை நல்ல அறிவாளி. அதனால் அது சிங்கத்திற்குச் செய்யத் தகுந்த செயல்களை அறிந்து சொல்லும். அச்செயல்களைச் செய்யும் முறைகளையும் சொல்லும். துணிந்து காரியமாற்றும். அது அறத்தை நன்கறிந்து; அறிவு நிறைந்த சொற்களைக் கூற வல்லது; எக்காலத்திலும் செயல்திறன் நிறைந்ததாக இருப்பது"

"யானை சிங்கத்தின் உற்ற நண்பன். அது பகற்பொழுது முழுவதும் சிங்கத்துடனே இருக்கும். எனினும் அது அதிகமாக நீங்கிச் செல்லாமலும், மிக நெருங்காமலும் நெருப்பின் முன் குளிர்காய்பவர்களைப் போலவே இருக்கும். சிங்கம் விரும்பியவற்றை எல்லாம் செய்யும். சிங்கம் சந்தேகம் கொள்ளாதபடி நடந்து கொள்ளும். அரச சபைக்கு யாராவது அரசனைச் சந்திக்க வந்தால் அது எழுந்து சென்று விடும். சிங்கம் வந்து தனக்கருகில் இருக்கச் சொன்னால் மட்டும் இருக்கும். நண்பனாக இருந்தாலும் மிகவும் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளும். கோள் சொல்லிப் பிறரைக் கெடுக்காது. குற்றம் செய்பவர்களைத் தனிமையிற் சந்தித்துப் புத்திமதிகள் கூறும். அதனால் சிங்கம் யானையின் மீது அளவில்லாத அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தது."

“அக்காட்டில் வாழ்ந்த நரி ஒன்று அடிக்கடி பிற மிருகங்களின் வீடுகளுக்குச் சென்று திருடும். அதை அறிந்த யானை, நரியைச் சந்தித்துத் திருடவேண்டாம் என்று கூறும். அதை நரிகேட்பதில்லை. அதனால் அது நரியைப் பற்றி சிங்கத்திடம் கூறியிருந்தது.”

“ஒரு நாள் எருமையின் வீட்டில் திருடும் போது நரி அகப்பட்டுக் கொண்டது. எருமை நரியைக் கயிற்றால் கட்டி அரச சபைக்கக் கொண்டு வந்தது. நரியின் மனைவி குதிரையின் வீட்டில் சமையல் செய்பவள். மிகவும் சுவையாகச் சமைத்துக் குதிரைக்குக் கொடுப்பதால் குதிரை நரியின் மனைவி மீது அன்பு வைத்திருந்தது. நரி கையும் மெய்யுமாக அகப்பட்டதும் நரியின் மனைவி குதிரையிடஞ் சென்று தனது கணவனுக்குத் தண்டனை கொடாது காப்பாற்றும் படியும், தனது கணவன் இனிமேல் திருட மாட்டானென்றும் கூறியது. நரியின் மனைவியின் மீது இரக்கம் கொண்ட குதிரை அரச சபையில் வழக்கு நடைபெறும் போது சொன்னது ; “தவறுதலாக நரி திருடி விட்டது. அது பெரும் தவறு என்று நரி உணர்ந்துள்ளது. நரியினது மனைவி கர்ப்பமாக இருக்கிறது. அதனால் நரியை எச்சரித்து விடும்படி மிகவும் தாழ்மையாகக் கேட்கிறேன்” என்றது குதிரை”

“சிங்கம் யானையைப் பார்த்தது ; “அரசே, நரி நல்லோரின் பேச்சை ஒரு போதும் கேட்பதில்லை. அது தவறு என்று தெரிந்தே தவறுகளைச் செய்கிறது. அதனால் அதை எச்சரித்துப் பயனில்லை.

சிறையில் அடையுங்கள்” என்றது. சிங்கத்திற்கு யானை கூறுவது தான் சரியெனத் தோன்றியது. அதனால் நரிக்கு ஆறுமாத காலக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தது” ஆகவே அன்பானவர்களே, அருகே இருந்து சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற வாறு சொல்பவரின் பேச்சையே அரசன் கேட்பான்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சிறப்புடைய மன்னவரைச் செவ்விதின் நோக்கித்***
***திறத்தின் உரைப்பார்க்கொன் றகாத தில்லை***
***விறற்புகழ் மன்னர்க்கு உயிரன்ன ரேனும்***
***புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்***

அருகே இருந்து, அரசனது நிலைமையைத் தெரிந்து தக்கபடி சொல்பவரின் சொல்லையே அரசன் கேட்பான். “**புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்”** என்பது பழமொழி.

**38** “அன்பானவர்களே, பகையில்லா விட்டால் படையின் உதவி தேவையில்லை. செயல்களுக்காகத் தான் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. செயலைச் செய்யாவிட்டால் கருவிகளால் பயன் எதுவும் இல்லை. எலியில்லாத வீட்டில் பூனைக்கு வேலையில்லை. அதனால் அதைப் பால் வைத்து அன்பாகக் கவனிப்பாரும் இல்லை. அது போல வலிய படையுள்ள எதிரியான அயல் நாட்டு அரசன் இல்லாத மன்னனின் படை வீரர்களுக்கு வேலை இருக்க மாட்டாது. தன்னைச் சேர்ந்தவர்களைக் காரணமின்றி விரோதிப்பவனாகவும், தனக்கெனத் தகுந்த துணைவரைத் தேடிக் கொள்ளாவனாகவும், தானும் வல்லமை

இல்லாதிருப்பவனாகவும் வாழ்ந்தால் பகைவர்கள் அவனை அழிப்பர். அனைவரையும் நேசிப்பவனாகவும், அனைவர்க்கும் உதவிகள் செய்பவனாகவும் , வலியவனாகவும் இருப்பவனுக்குத் துணை தேவைப்படாது. தேவைப்படும் போது ஊர்முழுவதும் உதவும்"

"முருகவனத்தில் வாழ்ந்த யானை எல்லா மிருகங்களிடமும் அன்பு கொண்டது. எல்லா மிருகங்களையும் தராதரம் பாராது சேர்ந்து நடப்பது; உதவி செய்வது. அதனால் யானையை எல்லா மிருகங்களும் நேசித்தன. இது எருதுக்குப் பிடிப்பதில்லை. எருது திமிருள்ளது. தான் தான் பலசாலி என்று எண்ணுவது. அதனால் அதற்கு யானை மீது கடுங்கோபம் இருந்தது. யானையை எப்படியாவது பழி வாங்க வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அது யானையைப் பற்றி மிகவும் தரக்குறைவாகவும் கேவலமாகவும் பேசி வந்தது. அதைப் பற்றி யானை ஒரு போதும் கவலைப்பட்டதில்லை. ஒரு நாள் எருது காட்டில் மேயும் போது வேட்டைக்காரர்கள் வைத்த பொறியில் அது அகப்பட்டுக் கொண்டது. எருதுக்குப் பயமாக இருந்தது. அது தனது மகனை அழைத்துச் சொன்னது ; "மகனே, நான் தேவையில்லாமல் யானையுடன் விரோதித்து விட்டேன். யானை பலசாலி. எல்லா மிருகங்களுக்கும் உதவுவது. அதனால் மிருகங்களெல்லாம் தீயசெயல்களைச் செய்யும் என்னைப் பழிவாங்க நினைக்கின்றன. அத்துடன் யானையிடம் மன்னிப்புக் கேட்டால் தான் தாம் உதவுவோம் என்கின்றன. இதுவரை எனக்கு உதவி

தேவைப்படாததால் தான் நான் யானையைப் பகைத்தேன். இப்போது உதவி தேவைப்படுகிறது. ஆனால் இப்போது என்னால் அதனிடம் செல்ல முடியவில்லை. நீ போய் யானைக்கு எனது நிலையைச் சொல்லி நான் மன்னிப்புக் கோருவதாகச் சொல்லி அழைத்து வா" என்றது"

"எருதின் மகன் சென்று நிலைமையைக் கூறி யானையை அழைத்து வந்தத. யானையுடன் காட்டு மிருகங்கள் பலவும் வந்தன. யுானை, எருது அகப்பட்டிருந்த பொறியை விலக்கியது ; " அண்ணா, என்னை மன்னித்து விடுங்கள். எனக்குத் தேவையேற்படாததால் அறியாமை காரணமாக நான் உங்களையும் காட்டு மிருகங்களையும் பகைத்தேன். தேவை வந்த போது தான் உண்மையை உணர்ந்தேன். என்னை மன்னியுங்கள். தேவையில்லாத போது ஒருவர் இன்னொருவரது உதவியை நாட மாட்டார். ஆனால் அவர் மற்றவர்களுடன் முரண்படாது வாழ்ந்தால் தேவையேற்படும் போது மண்டியிட வேண்டியதில்லை. பகைவர் வலியவராக இருந்தால் தான் உதவிகள் ஒத்தாசைகள் தேவைப்படும். வேட்டைக்காரர்கள் வலிமையானவர்கள் ; கொடியவர்கள். அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றியமைக்கு நன்றி" என்றது"

"தேவையேற்படும் போது உதவுவது தான் தர்மம். ஒருவர் இன்னொருவரைப் பகைக்கும் போது அதற்குக் காரணம் இருத்தல் வேண்டும். நீ தேவையில்லாமல் பகைத்தாய். அதன் பயனை

அனுபவித்தாய். இனி மேல் அப்படி நடவாதே” என்றது யானை”. ஆகையால் அன்பானவர்களே, தேவையேற்படும் போது தான் செயல்களின் முக்கியத்துவம் தெரியவரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தன்னின் வலியானைத் தானுடையான் அல்லாதான்***
***என்ன குறையன் இளையரால்? மன்னும்***
***புலியிற் பெருந்திறல் வாயினும் பூசை***
***எலியில் வழிப்பெறா பால்***

எலிகள் இல்லாத வீட்டில் பூனைக்குப் பால் வைப்பார்கள் இராது. வலிய பகையரசன் இல்லாத மன்னனுக்குப் படைகளால் நன்மை உண்டாகாது. ஒருவனுக்குத் தேவை ஏற்படும் போது, அத்தேவையை நிறைவேற்ற அவன் தேவையானவரை நாடுவான். “**பூசை எலியில்வழிப் பெறா பால்”** என்பது பழமொழி.

**39** “அன்பானவர்களே, தான் செய்ய வேண்டிய செயல்களைக் கயவர்களைக் கொண்டு செய்விக்க நினைத்து, அவர்களை நம்பி, அதனை அவர்கள் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள் என்று நினைத்து இறுமாந்திருப்பது அறிவற்ற செயலாகும். அச் செயலானது நாறிய மீனைக் காய வைத்த இடத்திற்குப் பூனையைக் காவல் வைப்பததைப் போன்றதாகும். பூனை மீனை உண்டு முடிப்பது போலக் கயவர்கள் அச்செயலால் வரும் பயன்களனைத்தையும் தனதாக்கிக் கொள்வர். கயவர்களுக்கு ஒரு போதும் நல்ல சிந்தனை உண்டாக மாட்டாது. அப்படி

உண்டாவதானால் அது எல்லையற்ற அச்சத்தின் காரணமாகவே உண்டாகும். பெரியவர்கள் யாரையும் அச்சப்பட வைத்துத் தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள மாட்டார்கள்”

“சிவபுரத்தில் வாழ்ந்த சேனாதிராஜா என்பவர் ஊரில் உள்ள சிவன் கோயிலுக்குப் பெரியதொரு மண்டபம் கட்டிக் கொடுக்க விரும்பினார். அதைக் கட்டி முடிக்கப் பல இலட்ச ரூபா செலவாகுமெனப் பொறியியலாளர்கள் மதிப்பீடு செய்தனர். அவ்வூரில் வாழும் கந்தசாமி என்பவன் சிறிய வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தான். அவன் தந்திரமான முறையில் பொருட்களை வியாபாரஞ் செய்பவன். ஏழைகளுக்குக் கடனாகக் கொடுக்கும் பொருட்கள் தரம் குறைந்தனவாகவே இருக்கும். பெரியவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் அவன் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து வாங்கிய விலையிலும் பார்க்கக் குறைவான விலையிற்கூடப் பொருட்களைக் கொடுப்பான். அவை நிறை குறைவாக இருக்கும். அதைக் கவனிக்காத பலர் அவன் பொருட்களை மலிவாக விற்பனை செய்கின்றான் எனப் புகழ்வர். சேனாதிராசா, கந்தசாமியின் வாடிக்கையாளர். சேனாதிராசா பெருந்தொகையாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வார். அவன் பொருளின் விலையைக் குறைத்து நிறையையும் குறைத்துக் கொடுப்பான். இதனால் மகிழ்ந்த சேனாதிராசா கோயில் கட்டிடத்திற்கான பொருட்களை வழங்கும் பொறுப்பைக் கந்தசாமியிடம் கொடுத்தார். அவர் பொருட்களின் விலையைப்

பட்டணத்தில் விசாரிப்பாரே தவிர அதன் தரத்தைப் பற்றி விசாரிக்க மாட்டார். அது கந்தசாமிக்கு வாய்ப்பாக இருந்தது.”

“வேலை தொடங்கி ஒரு வருடத்துள்க் கோயிலின் கட்டிட வேலைகள் முடிவுற்றன. கோயில் வேலை நடைபெறும் போது கந்தசாமி புதிதாக ஒரு வீடு கட்டத் தொடங்கினான். அவ்வீடு கோயில் மண்டப வேலை முடிவுற முன் முடிந்து விட்டது. சேனாதிராசா கோயில் மண்டபம் கட்டக் கொடுத்த பணத்தின் ஒரு பகுதியை எடுத்துக் கந்தசாமி தனக்கு வீடு கட்டினான். ஆகையால் அன்பானவர்களே, கயவரை நம்பிக் காரியங்களை ஒப்படைக்காதீர்கள்” என்றான் நமசிவாயம் சுவாமிகள்.

***காட்டிக் கருமம் கயவர்மேல் வைத்தவர்***
***ஆக்குவர் ஆற்ற எமக்கென்றே அமர்ந்திருத்தல்,***
***மாப்பிணை நோக்கின் மயிலன்னாய்! பூசையைக்***
***காப்பிடுதல் புன்மீன் தலை.***

நாறிய மீனுக்குக் காவலாகப் பூனையை வைத்தால் அது, மீனைத் தின்று முடித்து விடுவது போலக் கயவரும் எல்லாவற்றையும் அபகரித்து விடுவர். “**பூசையைக் காப்பிடுதல் புன்மீன் தலை**” என்பது பழமொழி.

**40** “அன்பானவர்களே, ஒரு செயலைச் செய்வதற்கென ஆராய்ந்து தேர்ந்தெடுத்த ஒருவன், செயலைச் செய்யும் போது அவதானக் குறைவு காரணமாகவோ, அறியாமை காரணமாகவோ சிறு சிறு தவறுகளைச் செய்தால், அதைப் பெரிதாக எடுத்து

அவனைப் பிழை கண்டு ஏசுதல் கூடாது. நன்கு திட்டமிட்டுச், செய்யும் போது கூடச் சில தவறுகள் ஏற்படும். அத்துடன் அனுபவம் மிக்கவர்களைக் கொண்டு செய்தாலும் ஏற்படும். அவற்றைக் கணக்கிலெடுத்தால் எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க முடியாது. இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று எளிதாகச் சொல்லலாம். ஆனால் சொல்லியவர்கள் சொல்லியவாறு செய்து முடிப்பாரென்று கூற முடியாது. எண்ணியவர் எண்ணியபடி செயலாற்றுவதில் வல்லவராக இருந்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலையும் காலமும் சில சமயம் செய்பவரின் செயலைக் கெடுத்து விடும். தம்மிடம் வந்த பறையினைக் கௌரவம் பாராது அடித்துப் பார்ப்பதே உலகத்தவரின் இயல்பு. அது போலப் பணி செய்பவர்கள் விடும் சிறு சிறு பிழைகளைப் பெரிது படுத்தினால் செயல்கள் நல்ல முறையில் முடியாது”

“கெங்காதரன் கட்டிட ஒப்பந்தக்காரர். மிகவும் நேர்மையானவர். அனைவரையும் மதித்து நடப்பவர். சொன்ன சொல் தவறாதவர். முக்கியமாகக் குறிக்கப்பட்ட நேரத்தில் சுபகாரியங்களைச் செய்பவர். அதனால் ஊரவரும் அயல் ஊர்களில் உள்ளவர்களும் அவரைக் கொண்டே தமக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டுவிப்பர். அவர் வேலை தொடங்கினால் விரைவில் முடிந்து விடும் என்று எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது”

“அன்று ஊரில் பெருந்தனவந்தரான பொன்னம்பலம் ஒரு வீடு கட்ட விரும்பினார். அவர் கெங்காதரனிடஞ் சென்று தனக்கு ஒரு வீடு கட்டித் தரும்படி கேட்டுக் கொண்டார். அன்று காலை ஒன்பது மணியில் இருந்து பத்து முப்பது மணி வரை நல்ல நேரம் இருந்தது. கெங்காதரன் ஒன்பது மணிக்கு வந்து அத்திபாரமிடுவதென்று கூறியிருந்தார். அதன்படி பொன்னம்பலம் காலை எட்டு மணிக்கே அத்திவாரமிடுவதற்கான அத்தனை வேலைகளையும் முடித்து விட்டு கெங்காதரனின் வருகைக்காகக் காத்திருந்தார். நேரம் ஒன்பது முப்பது கடந்தும் கெங்காதரன் வரவில்லை”

“நேரமில்லையென்றால் நேரமில்லை என்று சொல்வதை விட்டு விட்டு எல்லா வேலைகளையும் பொறுப்பேற்றால் இப்படித்தான் நடக்கும்” என்று பெருங்கோபங் கொண்டார் பொன்னம்பலம்”

“ஐயா, கெங்காதரன் அப்படியனவர் அ ல்ல. அவர் சொன்ன சொற்படி நடப்பவர். ஏதோ முக்கியமான பிரச்சினையாக இருக்கலாம். இல்லா விட்டால் அவர் நேரம் தாமதிக்கமாட்டார்” என்றான் அவரது தொழிலாளி”

“என்ன பிரச்சினையாக இருந்தாலும் இது நாள்க் காரியம். குறித்த நேரத்தில் செய்யாவிட்டால் தடைகளும் தாமதங்களும் உண்டாகும்” என்றார் பொன்னம்பலம்”

“ஐயா, காலையில் எம்மை இங்கே செல்லச் சொன்னவர். எதிர்பாராதவாறு ஏதோ நடந்து விட்டது. அவர் ஒரு போதும் சொன்ன சொல் தவறியதில்லை. விதிவசமாகத் தடைகள் ஏதாவது வந்திருக்கும்” என்று அந்தத் தொழிலாளி கூறிக் கொண்டிருக்கும் போது கெங்காதரன் வந்தார். அவரைக் கண்டதும் பொன்னம்பலம் பெருங்கோபங் கொண்டு சொன்னார் ; “இது நாள் காரியம். நான் எதிர்பார்ப்போடு காத்திருக்கும் போது நீ இன்னோர் இடத்திற்குச் சென்று வேலையை ஆரம்பித்து விட்டு வருகிறாய். உனக்கு நேரமில்லா விட்டால் சொல்ல வேண்டியது தானே. நான் வேறு ஒருவரைப் பிடித்திருப்பேன்” என்றார்”

“ஐயா, புறப்படும் போது எனது அயல் வீட்டுக்காரனின் மனைவிக்கு நெஞ்சுவலி வந்து விட்டது. எனது மோட்டார் வாகனத்தில் அவரைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு வருகிறேன். அவர் வீட்டிலேயே மயங்கி விட்டார்” என்று கெங்காதரன் கூறிக்கொண்டிருக்கும் போது பொன்னம்பலம் ஆத்திரத்துடன் கூறினார் ; “யாரோ ஒருவருக்காக எனது நாள் வேலையைத் தாமதிப்பதா…? யாரையாவது பிடித்து வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு வந்திருக்கலாம் தானே” என்றார்”

“அப்பொழுதும் கெங்காதரன் கோபங்கொள்ளவில்லை. “முகூர்த்த நேரம் முடிய இன்னும் அரை மணி நேரம் உள்ளது. நீங்கள் எல்லா ஆயத்தங்களையும் செய்து விட்டீர்கள். அதனால் அத்திபாரத்தை இடுவோம்” என்றார் கெங்காதரன்”.

"எனது வேலையைக் குறித்த தினத்தில் முடிக்க முடியுமென்று உறுதியாக எழுதித் தந்த பின் தான் வேலை செய்ய நான் அனுமதிப்பேன்" என்றார் பொன்னம்பலம்"

"ஐயா, எல்லாம் இறைவன் விட்ட வழி. மிகவும் நேர்மையாக வாழ்ந்த அரிச்சந்திரனுக்கே விதிவசத்தால் பல சோதனைகள் வந்தன. இதில் நான் எம்மாத்திரம்" என்றார் கெங்காதரன்"

"எனக்கு சொன்ன சொல் தவறுபவர்களைப் பிடிக்காது" என்றார் பொன்னம்பலம்"

"நான் சொன்னசொல் தவறுவதில்லை. ஆனால் விதியின்படி தான் யாவும் நடைபெறும் என்று நம்புவன். காலையில் ஓர் அவசிய காரியமாகத் தாமதித்து விட்டேன். சுபநேரம், முகூர்த்த நேரம் பின்பும் வரும். ஆனால் போன உயிர் வராது" என்றார் கெங்காதரன்"

"விதிப்படி உயிர் போவதானால் அதைத் தடுக்க உன்னால் முடியுமா?" என்று சினத்துடன் கேட்டார் பொன்னம்பலம்"

"ஐயா, வாய்க்கு வந்தபடி பேசலாகாது. இவ்வாறு தர்மமில்லாமல் பேசும் உங்களோடு என்னால் வேலை செய்ய முடியாது " என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் கெங்காதரன். அதன்பின்

பொன்னம்பலம் பல கொத்தனார்களிடஞ் சென்றார். அவர்கள் கெங்காதரன் மறுத்த வேலையை நாம் செய்ய மாட்டோம் என்றனர். இறுதியாக ஒரு குடிகாரக் கொத்தனார் வேலை செய்யச் சம்மதித்து வேலையைத் தொடங்கினார். அவர் பொன்னம்பலத்தின் சட்டதிட்டங்களுக்கும், தேவையில்லாத பிரச்சனைகளுக்கும் பயப்பட்டு வேலை செய்யாது விட்டு விட்டார். ஆகவே அன்பானவர்களே, வேலை செய்வோர் சிறு சிறு தவறுகளை விட்டால் அதைப் பெரிதாக எண்ணக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆண்டீண்டு எனவொன்றோ வேண்டா அடைந்தாரை***
***மாண்டிலா ரென்றே ம றைப்பக் கிடந்ததோ?***
***பூண்தாங்கு இளமுலைப் பொற்றொடி! பூண்ட***
***பறையறையனர் ஆயினார் இல்.***

பூண்ட பறையினை அடித்துப் பார்ப்பது உலகத்தவரின் இயல்பு. அது போலப் பணி செய்பவன் சிறு தவறுகள் செய்வான். அதைப் பணி கொள்வோர் பெரியதாக எடுக்கக் கூடாது. **"பூண்ட பறையறையனர் ஆயினார் இல்**" என்பது பழமொழி.